
கல்கி



KALKI நவம்பர் 25, 1951 4 அணா



முட்டையும் அநேகமாக பாலுக்குச்சமமானதுதான்

முட்டைகளும் பாலைப்போலவே மிகவும் சிறந்த உணவு. அவைகளில் கால்ஷியம் (பற்களுக்கும் எலும்புகளுக்கும்). விடமின்கள் ஏ, பி, டி. (பொதுவாக உடல் நலத்திற்கு) இவைகள் அடங்கியிருக்கின்றன. நமது *சமநிலை உணவில்* முட்டைகளைச் சேர்த்துக்கொண்டால் மிகவும் பயனளிக்கும். ஒரு சமநிலை உணவு, ஏழுநாட்களில் சராசரியாக எல்லா ஐந்துவகை உணவு *சத்துக்களும்* அவசியம் அடங்கியதாக இருக்க வேண்டும். அதனும் உணவு உட்கொள்ளும் ஒவ்வொரு சமயத்திலும் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகையிலிருந்தும் ஒன்றோ அல்லது மேற்பட்டோ பொருள்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். (1) *விடமின்கள்:* பழங்கள், சமைக்காத காய்கறிகள், ஈரல்; (2) *தாதுப்பொருள்கள்:* பால், முட்டை, பாலாடை, மீன், பசலைக்கீரை; (3) *புரதசத்துக்கள்:* பால், முட்டைகள், கொட்டைகள், மாமிசம், பயறுவகைகள், மீன்; (4) *மாவுசத்துக்கள்:* அரிசி உள்பட எல்லா தானியங்கள், உருளைக் கிழங்கு, வாழைப்பழம்; (5) *கொழுப்புகள்:* கொட்டைகள், தாவர எண்ணெய்கள், கொழுப்புள்ள மாமிசம். சமைப்பதற்கான சிறந்த கொழுப்புகளில் ஒன்று டால்டா. இது எல்லாவித சமையல்களுக்கும் உகந்தது. மேலும் ஊட்டமளிப்பது. சீல் செய்த டின்களில் விற்கப்படுவதால் புதிதாகவும் சுத்தமாகவும் உங்களுக்கு கிடைக்கிறது.



குழந்தைகள் முட்டை சாப்பிடவேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1


கல்கி பொருளடக்கம்

மலர் 11
இதழ் 17

1951 நவம்பர் 25

கர ஆண்டு
கார்த்திகை 9உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


ஜுபிடர் ரிலீஸ்
வினோதாவின்
ஸ்த்ரீஸாகஸம்
-தமிழ்-
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா
சித்ரா
மதுரை . . . . . ஸ்ரீ தேவி
திருச்சிராப்பள்ளி . சென்டரல்
தஞ்சாவூர் . . . . . டவர்
வேலூர் . . . . . . தாஜ்
காஞ்சீபுரம் . . . . ராஜா
பாண்டிச்சேரி . . . . ரத்னா
திருப்பாபுலியூர் . . பாடலி
ஈரோடு . . . ஸ்ரீ கிருஷ்ணா
திண்டுக்கல் . . . . சக்தி
கரூர் . . . . . ராஜாராம்
நாகப்பட்டிணம் . . பேபி
விருதுநகர் . . . ராதா
திருவாரூர் . . . பிரபாத்
நாகர்கோயில் . அழகப்பா
தூத்துக்குடி . . ஜோசப
நவம்பர் 23உ முதல்
கோயமுத்தூர் . டையமண்ட
சேலம் . . . ஓரியண்டல
உரிமையாளர்கள்: பெல் பிக்சர்ஸ்

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 17

பல கேள்வி: ஒரே பதில்

இன்று இந்தியப் பொது மக்களுக்கு முன்னால் எழுந்துள்ள முதன்மையான கேள்வி எது? பொது மக்கள் என்றாலும் சரிதான்; வாக்காளர் என்றாலும் ஒன்று தான். ஏனெனில் இந் நாட்டு மக்களில் சிறுவர் சிறுமியர் குழந்தைகளைத் தவிர மற்றப்படி உரிய வயது வந்தவர்கள் அனைவரும் தற்போது வோட்டர்கள் ஆகியிருக்கிறார்கள். இந்தப் பெரிய தேசத்தின் தலை விதியை நிர்ணயிக்கச் சக்தி பெற்றிருக்கிறார்கள். இந்நாட்டை ஆளும் அரசாங்கத்தை ஆக்கவும் அழிக்கவும் உரிமை பெற்றிருக்கிறார்கள். அத்தகைய இந்திய மகா ஜனங்களின் முன்னால் இன்று எழுந்துள்ள முதன்மையான கேள்வி என்ன?

இந்தியா தேசத்துக்கு இன்றைய தினம் தலைவராயிருக்க எல்லா வகையிலும் எல்லாரையும் விடத் தகுதி வாய்ந்த மனிதர் யார்? — என்பதுதான்.

அந்த முதன்மையான கேள்விக்குச் சரியான பதில் சொல்வதற்கு முன்னால், இன்னும் பல கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வது உசிதமாகும்.

எந்த ஒரு மனிதருடைய பெயரை இன்று இமயமலை முதல் கன்னியா குமரி வரையில் மக்கள் அறிந்திருக்கிறார்கள்?

எவருடைய பெயரை நினைத்தால் நம்முடைய அந்தரங்க நண்பர்களையோ உற்றார் உறவினரையோ நினைப்பது போன்ற அன்பு நம் உள்ளத்தில் பொங்குகிறது?

யாருடைய சொல்லும் செயலும் இந்தப் பரந்த உலகத்தில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்திப் பெரிய பெரிய வல்லரசுகளும் நமக்கு மரியாதை செய்யும் படியான நிலைமையை உண்டு பண்ணியிருக்கின்றன?

எவருடைய தேசபக்தியும் தியாகமும் வாழ்க்கை முறையும் அன்றுபோல் இன்றும் மாசுமறுவற்று விளங்குகின்றன?

யாருடைய தூய குணாதிசயத்தைப் பற்றி அவருடைய அரசியல் விரோதிகளும் குறை சொல்ல வாயெழாமல் திகைக்க வேண்டியதாயிருக்கிறது?

எந்த ஒரு மனிதர் அன்றுபோல் இன்றும் தாம் போகுமிடங்களில் எல்லாம் லட்சக்கணக்கான ஜனங்களைக் கவர்ந்திழுக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறார்?

காந்தி மகாத்மா யாரைத் தம்முடைய ஞானப் புதல்வர் என்றும் அரசியல் வாரிஸ் என்றும் சொல்லி விட்டுப் போனார்?

எவர் ஒருவர் இன்று காந்தி மகானைப்போலவே தாம் தலைமை வகிக்கும் ஸ்தாபனத்திலுள்ள குற்றங் குறைகளையும் தம்முடைய நிர்வாகத்தின் கீழ் நடக்கும் ஊழல்களையும் மூடி மறைக்க முயலாமல் பகிரங்கமாக எடுத்துச் சொல்லி அவற்றைச் சீர்திருத்த முன் வரும் பெருங்குணம் படைத்திருக்கிறார்?

எவருடைய உறுதிகொண்ட உள்ளம் ஏழை எளியவர்களின் இன்னல்களைக் கண்டு உருகிக் கண்ணீர் வடிக்கிறது?

எவருக்கு அநீதியையும் அற்பத்தனத்தையும் கண்டால் பொறுக்க முடியாத ஆத்திரம் உண்டாகிறது?

இத்தனை கேள்விகளுக்கும் பதில் ஒன்றே ஒன்றுதான் உண்டு.

பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள்தான்!

ஆகையால் நாம் முதலில் கேட்டுக் கொண்ட முதன்மையான கேள்விக்கும் பதில் பண்டித ஜவாஹர்லால் நேரு என்பதே யாகும்.

அதாவது இந்தியா தேசத்திற்குத் தலைமை வகிக்க இன்றைய தினம் எல்லா விதத்திலும் எல்லாரிலும் தகுதி உடையவர் பண்டித ஜவாஹர்லால் அவர்களேதான்!

இது விஷயத்தில் நாம் ஒரு முடிவுக்கு வந்த பிறகு, வரப்போகும் பொதுத் தேர்தலில் நம்முடைய வோட்டை யாருக்குக் கொடுப்பது என்பதைப் பற்றி அதிகமாக யோசிப்பதற்கு இடமில்லை; அவசியமும் இல்லை.

காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு நாம் கொடுக்கும் வோட்டு நேருஜிக்குக் கொடுக்கும் வோட்டாகும்.

இரட்டை மாட்டுச் சின்னம் உடைய பெட்டியில் போடும் வோட்டு நேருஜியின் தலைமைக்குக் கொடுக்கும் வோட்டாகும்.

நமக்கோ நேருஜியின் தலைமை அவசியம் வேண்டும்; இன்றியமையாமல் வேண்டும். ஆகையால் இரண்டு கண்களையும் நன்றாய்த் திறந்து பார்த்து இரட்டை மாட்டுச் சித்திரம் உள்ள பெட்டியில் வோட்டைப் போட்டுவிட்டு வர வேண்டியதுதான் நாம் செய்ய வேண்டிய காரியம். இதில் யோசிப்பதற்கு வேறு என்ன இருக்கிறது!

* * *

காங்கிரஸ் ஸ்தாபன நிர்வாகத்தைப் பற்றியும் காங்கிரஸ் மந்திரி சபைகளின் நிர்வாகத்தைப் பற்றியும் பொது மக்களுக்கு எவ்வளவோ குறைகள் இருந்தன; இன்னும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாமும் அவ்வப்போது வெளியிட்டு வந்திருக்கிறோம்.

அப்படிச் செய்தபோது நம்முடைய ஜனநாயக உரிமையை உபயோகப் படுத்தினோம்.

நிர்வாகக் குறைகளை எடுத்துச் சொல்லிக் கிளர்ச்சி செய்து அவற்றை நீக்க முயல்வது ஜனநாயகத்தில் மக்களின் ஜீவாதார உரிமை. அதை நாம் பயன் படுத்தினோம்.

இப்போது ஜனநாயக உரிமையை வேறொரு விதத்தில் உபயோகப் படுத்தும் கட்டம் வந்திருக்கிறது. அதாவது நமது சுதந்திர இந்திய நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நம்மைச் சேர்ந்திருக்கிறது.

அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேறொரு வழியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அதாவது பண்டித நேருவைக் காட்டிலும் நமது குறைகளைத் தீர்க்கக் கூடிய நேர்மையும் ஆற்றலும் உள்ள வேறு தலைவர் இருக்கிறாரா என்று பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது "இல்லை" "இல்லை" என்ற முடிவுக்குத்தான் வந்து நிற்போம்.


ஆகவே நமது வோட்டுக்களை இரட்டை மாடுகளின் சின்னமுள்ள பெட்டியிலேதான் போட வேண்டியவர்களாகிறோம்.

காங்கிரஸை எதிர்த்துப் போட்டி யிடுவோர் சிலர் என்ன சொல்கிறார்கள் தெரியுமா! "காங்கிரஸ் என்னும் இடிந்து போன பழைய கட்டிடத்தை நேரு ஒருவர்தான் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்; அவர் விலகினால் காங்கிரஸ் கட்டிடம் பொல பொல வென்று விழுந்துவிடும்" என்று கூறுகிறார்கள்.

இது ஓரளவு சரி என்றே ஒத்துக் கொள்வோம். ஆயினும் இது எதைக் காட்டுகிறது! நேருஜியின் பெருமையைத்தான் காட்டுகிறது.

பொல பொல வென்று இடிந்து விழக் கூடிய மாளிகையை நேரு ஒருவராகப் பிடித்துத் தாங்கி

கம்பத்திலிருந்து தூணுக்கு!



இலங்கையில் வசிக்கும் ஒரு லட்சம் இந்தியர்களுக்குத் தற்காலிக வாச பெர்மிட் கொடுக்கும் பிரச்னையை இந்தியத் தூதர் கேசவ மேனன் பிரதம மந்திரி சேனநாயகாவிடம் கொண்டு போகப் போகிறாராம். கம்பத்தில் மூட்டிக் கொண்ட பிறகு தூணிலும் மூட்டிக் கொள்ளலாமே என்ற உத்தேசம் போலும்!



பொதுத் தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் படாடோபமான பெயர்களைச் சூட்டிக் கொண்டு புதிய புதிய கட்சிகள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் எல்லாவற்றுக்கும் இறகுகள் இரவல்தான்!

விலே நிறுத்திக் கொண்டிருக்கிறார் என்றால், அவர் புராதன வீரர்களாகிய பீமசேனனையும் ஹெர்குலீஸையும் ஸாம்ஸனையும் ஒத்த வரப் பிரசாதம் பெற்ற பலசாலி என்று ஏற்படுகிறது.

அப்பேர்ப்பட்ட தார்மிக வீரரை நாம் நம் தலைவராகக் கொள்ளாமல் வேறு சாதாரண மனிதர்களைத் தலைவராகக் கொள்ள முடியுமா! முடியும் என்றாலும், எதற்காக! என்ன நன்மையை முன்னிட்டு! — கூடவே கூடாது.

நேருஜி காங்கிரஸைத் தாங்கி நிற்கும் வரையில் பொது மக்களாகிய நாம் நேருஜியையும் காங்கிரஸையும் தாங்கி நிற்போம்.

நேருஜி காங்கிரஸை விட்டு விலகும்போது நாமும் காங்கிரஸை விட்டு விட்டு நேரு எங்கே போகிறாரோ, அங்கே போவோம். "இராமர் இருக்குமிடம் அயோத்தி" என்பதை அப்போது நினைவு கூர்ந்து கடைப் பிடிப்போம்.

அதுவரை நாமும் காங்கிரஸைக் கைவிட முடியாது. காங்கிரஸ் சின்ன முள்ள வோட்டுப் பெட்டியையும் நிராகரிக்க முடியாது.

* * *

நேருஜி இலட்சியவாதி; கனவு காணும் கவி இயல்பு படைத்தவர். அதே சமயத்தில் காரியவாதி; கனவைக் காரியத்தில் கொணருவதற்கு வழிகளைத் தேடிச் சாத்தியமான முறைகளைக் கையாளுகிறவர்.

மற்றவர்களின் திட்டங்களும் பேச்சுக்களும் பிரமாதமாயிருக்கலாம். "உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிப்பேன்" "மணலைக் கயிறாய்த் திரிப்பேன்" என்றெல்லாம் பேசலாம்.

ஆனால் காரியத்தில் அவர்களால் எவ்வளவு செய்ய முடியும்! நேருஜியின் இணையற்ற செயல் திறமையிலும் மக்களை இயக்கும் சக்தியிலும் பத்தில் ஒரு பங்கேனும் உள்ளவர்கள் வேறு யாராவது உண்டா!

இல்லையென்றால், வெறும் காகிதத் திட்டங்களுக்காகவும் வாய்ப் பந்தல்களுக்காகவும் அவர்களை நாம் தலைவர்களாகக் கொள்ள முடியுமா!

ஏழ்மையைப் போக்குவதிலும், ஏழை — பணக்காரன் என்ற வித்தியாசத்தைப் போக்குவதிலும், ஏழைகளைப் பணக்கார முதலாளிகள் சுரண்டுவதைப் போக்குவதிலும் நேருவைக் காட்டிலும் அதிக தீவிரம் உடையவர்கள் யார் இருக்கிறார்கள்! மார்பில் கையை வைத்து சத்தியமாகச் சொல்லட்டும் பார்க்கலாம். ஒருவரும் இல்லை.

மற்றவர்கள் காரிய சாத்தியமில்லாத திட்டங்களைப் போடலாம். நாட்டில் குழப்பத்தை விளைக்கலாம். இந்த ஏழை நாட்டை இன்னும் ஏழையாகச் செய்யலாம். அவ்வளவு தானே தவிர, நாட்டின் மொத்த நன்மையை நேருவைக் காட்டிலும் வேறு யாராலும் வளர்த்துவிட முடியாது.

நாட்டின் ஏழ்மையைப் போக்கவும் மொத்த செல்வத்தைப் பெருக்கவும் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தைக் குறைக்கவும் நேருஜி தக்க திட்டங்களை வகுத்து முயற்சி தொடங்கியிருக்கிறார். இன்னும் ஐந்து வருஷம் அவகாசம் கொடுத்தால் அவருடைய திட்டத்தில் பெரும் பகுதி நிறைவேற இடம் உண்டு. மற்றவர்களால் அது சிறிதும் கூடாத காரியம்.

* *

இத்தனை காலமும் காங்கிரஸ் ஸ்தாபன உள் விவகாரங்களில் நேருஜி கவனம் செலுத்தவில்லை. சமீபத்திலேதான் கவனம் செலுத்தத் தொடங்கினார். காங்கிரஸ் தலைமைப் பதவியையும் ஒப்புக் கொண்டார். இதனால் ஓரளவு சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. தேர்தலுக்குப் பிறகு இன்னும் அதிக கவனம் செலுத்துவதாகச் சொல்லியிருக்கிறார். ஒரு பெரிய தேசத்தையே ஆளும் பொறுப்பை வகிக்கும் தலைவரிடம் இதைக்

காட்டிலும் என்னதான் எதிர்பார்க்க முடியும்!

ஆகையால் எந்த விதத்தில் பார்த்தாலும் ஜவாஹர்லால் நேருவுக்கே நமது வோட்டைப் போட வேண்டியவர்களாகிறோம்.

சில இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்கள் நல்ல முறையில் பொறுக்கப்படவில்லை யென்ற குறை யிருக்கலாம். தாராளமாக அக்குறை நம் மனதிற்குள் இருக்கட்டும். பின்னும் சொல்ல வேண்டிய சமயத்தில் சொல்லிக்கொள்ளலாம். இப்போது வோட்டுப் போடும் சமயத்தில் அபேட்சகர்களின் தகுதி நம்மைப் பாதிக்க வேண்டியதில்லை. ஏனெனில் காங்கிரஸ் அபேட்சகர்கள் சொந்த முறையில் எப்படியிருந்தாலும், கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள். தேசிய தீர்மான திட்டங்களை அவர்கள் ஒப்புக் கொண்டே தீர வேண்டும்; குறுக்கே நின்று தடை செய்ய முடியாது. அந்த வகையில் மற்றக் கட்சி அபேட்சகர்களையும் சுயேச்சை அபேட்சகர்களையும் காட்டிலும் காங்கிரஸ் அபேட்சகர்களே சிறந்தவர்கள்.

ஆகவே இரட்டை மாட்டுச் சின்னமுள்ள பெட்டியிலே நமது வோட்டைப் போடுவோம். "நேருவுக்கு ஜே! வந்தேமாதரம்!" என்று கோஷித்துக் கொண்டு நமது வோட்டைப் போடுவோம். போட்டுத் தேசத்தின் முன்னேற்றத்துக்கும் சுபிட்சத்துக்கும் நம்மாலான தொண்டைச் செய்தோம் என்ற திருப்தியை அடைவோம்.

தமிழ் நாட்டு அபேட்சகர்கள்

காங்கிரஸின் சார்பாகத் தமிழ் நாட்டில் தேர்தலுக்கு நிற்கப் போகும் அபேட்சகர்களின் ஜாபிதா ஏறக்குறைய வெளியாகிவிட்டது.

வெளியான வரையில் "பத்துக்கு ஏழு பழுதில்லை" என்று சொல்லும்படி யிருக்கிறது.

இந்த நிலைமை குறித்து நாம் பெரிதும் திருப்தியடைய வேண்டும்.

மூன்று மாதத்துக்கு முன்னால், காங்கிரஸ் ஸ்தாபனங்கள் உள் போராட்டங்களினால் சீர் கெட்டிருந்த நிலையில், இவ்வளவு திருப்திகரமான அபேட்சகர் ஜாபிதா வெளியாகும் என்று யாரும் எதிர் பார்த்திருக்க முடியாது. "பத்துக்கு ஏழு பெயர்கள் மோசமா யிருக்கும்" என்றுதான் எதிர்பார்த்திருப்பார்கள்.

இந்தத் திருப்திகரமான நிலைமைக்குப் பொது ஜன அபிப்பிராயமும் ஜனநாயகக் கிளர்ச்சியும் நேருஜியின் வற்புறுத்தலும் பெரிதும் உதவி செய்திருக்கின்றன.

சென்ற சட்டசபையில் யார்மேல் அதிகமாகப் புகார்கள் இருந்தனவோ, அவர்கள் இம்முறை பொறுக்கப்படாதது பெரிய காரியம். ஜனநாயகத்துக்கு இது ஒரு வெற்றி. பொது மக்களின் கருத்து நன்கு வற்புறுத்தப்பட்டால் அதை எவ்வளவு செல்வாக்கு வாய்ந்தவர்களும் புறக்கணிக்க முடியாது என்பதற்கு அறிகுறி.

அபேட்சகர் ஜாபிதா இன்னும் நல்ல முறையில் "பத்துக்குப் பத்தும் பழுதல்லை" என்று அமையாததற்குச் சில காரணங்கள் உண்டு.

(1) காங்கிரஸ் ஸ்தாபன நிர்வாகத்திலும் காங்கிரஸ் சர்க்கார் நிர்வாகத்திலும் வெறுப்புக் கொண்ட உண்மையான காந்திய வாதிகள் சிலர் தேர்தலுக்கு நிற்பதில்லை யென்று விலகிக் கொண்டார்கள். இது ஒரு காரணம்.

(2) அபேட்சகர்களைப் பொறுக்குவதில் கையாண்ட முறை சரியானதல்ல.

பழைய எம். எல். ஏ., எம். எல். ஸி. க்களில் யார் யார் பேரில் புகார்களும் பொதுஜன அதிருப்தியும் அதிகம் உண்டு என்பது மாகாணத் தலைவர்களுக்குத் தெரிந்த விஷயம். அப்படிப்பட்டவர்களை விலக்கி விட்டு, மற்றவர்களில் சிறந்தவர்களைப் பொறுக்கி யிருக்க வேண்டும். அதை விட்டு யார் வேணுமானாலும் யார் பேரிலும் புகார் சொல்லலாம் என்று கூறிப் புகார்களை வருந்தி வருவித்தார்கள். இதனால் புகார் இல்லாதவர்களைக் கண்டுபிடிப்பதே அரிதாகி விட்டது. அதிலும் மத்திய பார்லிமெண்டரி போர்டாருக்கு இவ்வளவு புகார்களையும் இரண்டு மூன்று நாளில் ஆராய்ந்து உண்மை கண்டுபிடிப்பதென்பது அசாத்தியமாகி விட்டது. அவர்கள் இங்கே ஸ்தலத்துக்கு வந்து விசாரித்து உண்மை அறிவதற்கும் நேரம் இல்லை. இது காரணமாக, அதிலும் காலாக ஆக, எப்படியோ அபேட்சகர்களைப் பொறுக்கித் தீர்த்தால் போதும் என்று ஆகிவிட்டது.

(3) மாகாண பார்லிமெண்டரி போர்டில் அதிகார வர்க்கக் கட்சிக்கு எதிர்க்கட்சி அங்கத்தினராக மூன்று பேர் இருந்தார்கள். ஸ்ரீ ஸி. பி. சுப்பையா, கனம் பெருமாள்சாமி ரெட்டியார், ஸ்ரீ ஸி. சுப்ரமணியம் ஆகியவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்ததாகத் தெரியவில்லை. தங்களுக்கு வேண்டிய சில நபர்களை அபேட்சகர்களாகப் பொறுக்குவதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமா யிருந்ததாகத் தெரிகிறது. "எங்கள் ஆட்களை நீங்கள் ஒப்புக் கொண்டால் உங்கள் ஆட்களை நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம்" என்ற பேர முறையே கையாளப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. இது எவ்வளவு உண்மை என்பது பற்றி நாம் எதுவும் சொல்வதற்கில்லை. ஆனாலும் ஸ்ரீ ஸி. பி. சுப்பையா கோஷ்டியார் எதிர்பார்த்த அளவுக்குத் தங்கள் கடமையை நிறைவேற்றவில்லையென்பது நிச்சயம்.

காங்கிரஸ் அதிகார வர்க்கத்தாரிடமே முழுப் பொறுப்பையும் ஒப்புவித்திருந்தால் அபேட்சகர் ஜாபிதா ஒரு வேளை இன்னும் திருப்திகரமாக அமைந்திருக்கும். பொதுஜன அபிப்பிராயத்தின் செல்வாக்கு இன்னும் அதிகமாக அபேட்சகர் ஜாபிதாவில் பிரதிபலித்திருக்கலாம்.

சென்ற சட்டசபையில் வாயையே திறக்காதவர்கள் சிலர் இம்முறையும் அபேட்சகர்களாகப் பொறுக்கப் பட்டிருக்கிறார்கள்.

தேசத்தொண்டு செய்தவர்கள் என்றோ வேறு விசேஷ அறிவாற்றலினால் தகுதி படைத்தவர்கள் என்றோ சொல்வதற்கு இயலாதவர்களும் பொறுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இவ்விதம் சில தொகுதிகளில் நேர்ந்திருப்பதற்காக நாம் அதிக வருத்தமோ, வெறுப்போ அடைந்து முக்கியமான இலட்சியத்தை மறந்து விடக் கூடாது.

நூற்றுக்கணக்கான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும்போது எல்லோரும் நூற்றுக்கு நூறு தகுதியுள்ளவர்களாக வந்துவிட முடியாது.

அபேட்சகர் பொறுக்கி எடுக்கும் வேலையை யாருக்குக் கொடுத்திருந்தாலும் இத்தகைய குறைபாடுகள் சில நேரிட்டிருக்கலாம்.

தற்சமயம் 'அவ்வளவு தகுதி போதாது' என்று நாம் கருதும் அபேட்சகர்களே நாளை ஜனநாயக சக்தியின் மகிமையினால் சட்ட சபைகளில் சிறந்த தொண்டு புரியும் ஆற்றல் பெறலாம்.

ஆகவே மொத்தத்தில் இவ்வளவு நல்ல முறையில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அபேட்சகர் ஜாபிதா அமைந்திருப்பது குறித்துத் திருப்தி அடைகிறோம்.

மகான் வந்தார்! மழை பெய்தது!

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்ற முது மொழியில் இந்தக் காலத்து அறிவாளிகளுக்கு அவ்வளவாக நம்பிக்கை ஏற்பட முடியாது. "ஒருவர் நல்லவரா யிருக்கிறார்" என்னும் விஷயம் மேகங்களுக்குத் தெரியுமா! மேகங்களை இயக்கும் இயற்கைச் சக்திகளுக்குத் தான் தெரியுமா! ஒருவர் நல்லவரா யிருப்பதற்காக மழை பெய்து விடுமா! அப்படிப் பெய்வதா யிருந்தால் அவருடைய வீட்டு முற்றத்தில் மட்டும் பெய்து விட்டுச் சும்மா யிருப்பதுதானே! — இப்படியெல்லாம் எளிதில் கேட்டு விடுவார்கள்.

எனினும், காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தவாறு சில நிகழ்ச்சிகள் நமது பெரியோர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளை உறுதிப் படுத்தும் வண்ணம் ஏற்படுகின்றன.

ராஜாஜியை ஐந்து வருஷத்துக்கு முன்னால் நாம் தமிழ் நாட்டிலிருந்து வடநாட்டுக்கு அனுப்பி வைத்தோம்.

இந்த ஐந்து வருஷ காலமாகத் தமிழ் நாட்டில் மழை இல்லை. மழை இல்லாத காரணத்தினால் மக்கள் பட்ட அல்லல்களைச் சொல்லி முடியாது. அதோடு சர்க்கார் நிர்வாகத்தை நடத்தியவர்களும் பெரும் பழிக்கு ஆளாகி வந்தார்கள்.

இந்த ஐந்து வருஷத்தில் ராஜாஜி அவர்கள் வட நாட்டில் பல பெரும் பதவிகளை வகித்துப் பெயரும் புகழும் பெற்றார். இந்திய சர்க்கார் மந்திரியாகவும் வங்காள கவர்னராகவும் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும் பிறகு மீண்டும் இந்திய சர்க்காரின் உள் நாட்டு மந்திரியாகவும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்தார். அவருடன் சேர்ந்து வேலை செய்யும் பாக்கியத்தைப் பெற்ற சகாக்கள், ஜவாஹர்லால் நேரு முதலியவர்கள், ராஜாஜியின் கூட்டுறவினால் தாங்கள் அடைந்த நலங்களை வாயாரச் சொல்லி மகிழ்ந்திருக்கிறார்கள்.

கடைசியாக, ராஜாஜி அரசியல் துறையில் தேசத்துக்குத் தாம் போதிய சேவை செய்தாகி விட்டது என்ற திட்டமான முடிவுக்கு வந்தார். "நம்மால்தான் உலகம் நடக்கிறது" என்ற எண்ணம் ராஜாஜிக்கு எப்போதும் கிடையாது. "மற்றவர்கள் பார்த்துக் கொள்வார்கள்; பார்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும்" என்றும் கருதினார். முதிர்ந்த பிராயம், உடல் நிலைமை, பாரமார்த்திகத் துறையில் ஆர்வம் ஆகிய காரணங்களும் சேர்ந்தன. எனவே நேருஜி முதலிய சகாக்கள் "மேலும் தங்களுடைய சேவை வேண்டும்" என்று எவ்வளவோ மன்றாடியும் உறுதி தளராமல் அங்க வஸ்திரத்தை எடுத்துப் போடுவதுபோல் உள் நாட்டு மந்திரி உத்தியோகத்தை உதறி விட்டு நம் தலைவர் ராஜாஜி தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

இதிலும் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று கருதியவர்களும் கூறியவர்களும் உண்டு. அது அவர்களுடைய துர்ப்பாக்கியம். பற்றற்ற மனப் பான்மையை அவர்கள் கற்பனை செய்தும் தெரிந்து கொள்ள முடியாதவர்கள். கப்பலக் கிணற்றில் விழுந்து உழலுபவர்களுக்குப் பரந்த கடலும் விரிந்த வான வெளியும் எப்படியிருக்கும் என்று தெரியாது தானே! அத்தகைய சந்தேகப் பிராணிகளைக் கடவுள் காப்பாற்று வாராக.

ராஜாஜி உள்நாட்டு மந்திரி பதவியை விட்டு நவம்பர் 2உ மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கிய போது அவரை வரவேற்பதற்காகப் பலர் கூடியிருந்தார்கள். எல்லாருக்கும் முன்னணியில் நின்ற கவர்னர் பவநகர் மகாராஜாவை ராஜாஜி பார்த்ததும் அவர் கேட்ட முதல் கேள்வி "இந்த வருஷமாவது மழை உண்டா?" என்பது தான். (இது தினப் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது.) அதற்குத் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. "அதைப் பற்றித்தான் கவலையா யிருக்கிறது!" என்றார்கள்.

ராஜாஜி திரும்பி வந்த உடனே முதற் காரியமாகத் தென் பாண்டிய நாட்டுக்குப் பிரயாண மானார். பிராயத்தினாலும் நோயினாலும் உடல் மெலிந்து பிரயாணம் செய்யும் சக்தி இழந்துள்ள குற்றாலத்து மாமுனிவர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரைப் பார்ப்பதற்காகச் சென்றார். குற்றாலத்தில் ஒரு வாரம் தங்கி ரஸிக மணியுடன் அளவளாவி அவரை உற்சாகப் படுத்தி விட்டுத் திரும்பினார்.

நவம்பர் ஆரம்பத்திலிருந்து தமிழ் நாட்டில் மழை பெய்கிறது. ஐந்து வருஷமாகக் கண்டறியாத அளவில் மழை பெய்து வருகிறது. மழை இன்மையால் வறண்டு போயிருந்த தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு நாளில் பத்து அங்குல மழை பெய்தது என்றால், பார்த்துக் கொள்ளுங்கள்!

குடி தண்ணீருக்கே கஷ்டம் நேர்ந்து விடுமோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த சென்னை நகரிலும் நல்ல மழை பெய்திருக்கிறது.

ராஜாஜி வந்ததினாலேயே மழை பெய்தது என்று சொல்லுவது அறிவாராய்ச்சிக்கு அவ்வளவு உகந்தது அல்லதான். ஆயினும்

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்ற தமிழ்ப் பெருமொழி நம்முடைய நினைவுக்கு வரத்தான் செய்கிறது.

ராஜாஜியின் உள்ளம் பாரமார்த்திகத் துறையில் எவ்வளவாக ஈடுபட்டிருக்கிறதென்பதை இந்தக் "கல்கி" இதழில் ஆரம்பமாகும் "பஜ கோவிந்தம்" விளக்கத்திலிருந்து அறியலாம்.

பொன்னியின் செல்வன்



அத்தியாயம் 46

பொங்கிய உள்ளம்

இளவரசர் யானையின் காதில் மந்திரம் ஓதினார். யானை படுத்தது. இருவரும் அவசரமாக அதன் முதுகிலிருந்து இறங்கினார்கள். கரை தட்டி மணலில் புதைந்திருந்த மரக்கலத்தின் அருகில் சென்று பார்த்தார்கள். அந்தக் கப்பலின் கதி பார்க்கப் பரிதாபமாயிருந்தது. பாய்மரங்கள் தாறுமாறாக உடைந்து கிடந்தன. ஒரு வேளை அந்த உடைந்த கப்பலுக்குள்ளேயோ அல்லது அக்கம் பக்கத்திலோ யாராவது இருக்கக் கூடும் என்று சந்தேகித்தார்கள். இளவரசர் கையைத் தட்டிச் சத்தம் செய்தார். பூங்குழலி வாயைக் குவித்துக் கொண்டு கூவிப் பார்த்தாள். ஒன்றுக்கும் பதில் இல்லை. இருவரும் தண்ணீரில் இறங்கிச் சென்று கப்பலின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு ஏறினார்கள். கப்பலின் அடிப் பலகைகள் பிளந்து தண்ணீரும் மணலும் ஏராளமாக உள்ளே வந்திருந்தன. ஒரு வேளை அந்த நீரிலே தள்ளிவிட்டுக் கடலில் செலுத்தலாமோ என்ற ஆசை நிராசையாயிற்று. அந்தக் கப்பலை அங்கிருந்து தண்ணீரில் நகர்த்துவது இயலாத காரியம். கரையில் இழுத்துப் போடுவதற்கு ஒரு யானை போதாது; பல யானைகளும் பல ஆட்களும் வேண்டும். அதைச் செப்பனிடப் பல மாதங்கள் மரக்கலத் தச்சர்கள் வேலை செய்தாக வேண்டும்.

சிதைந்து கிடந்த பாய்மரங்களிடையே சிக்கியிருந்த புலிக் கொடியை இளவரசர் எடுத்துப் பார்த்தார். அது அவருக்கு மிக்க மன வேதனையை அளித்தது என்று நன்றாய்த் தெரிந்தது.

"பூங்குழலி! நீ பார்த்த கப்பல்களில் ஒன்றுதானா இது?" என்று கேட்டான்.

"அப்படித்தான் தோன்றுகிறது. இன்னொரு கப்பல் அடியோடு முழுகித் தொலைந்து போய் விட்டது போலிருக்கிறது!" என்றாள் பூங்குழலி. அவளுடைய குரலில் குதூகலம் தொனித்தது.

"என்ன இவ்வளவு உற்சாகம்?" என்று இளவரசர் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போவதற்கு வந்த கப்பல்கள் முழுகித் தொலைந்து போனால் எனக்கு உற்சாகமாக இராதா?" என்றாள் பூங்குழலி.

"நீ உற்சாகப் படுவது தவறு, சமுத்திர குமாரி! ஏதோ விபரீதமாக நடந்து போயிருக்கிறது. புலிக்கொடி தாங்கிய மரக் கலத்துக்கு இந்தக் கதி நேர்ந்தது எனக்கு வேதனை அளிக்கிறது. இது எப்படி நேர்ந்தது என்றும் தெரியவில்லை. இதில் இருந்த வீரர்களும் மாலுமிகளும் என்ன ஆனார்கள்? அதை நினைத்தால் என் மனம் மேலும் குழம்புகிறது. இன்னொரு கப்பல் முழுகிப் போய் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறாய்?"

கல்கி

"மூழ்கிப் போயிருக்கலாம் என்று சொல்லுகிறேன். மூழ்கிப் போயிருந்தால் ரொம்ப நல்லது."

"நல்ல தில்லவே யில்லை. அப்படி ஒரு நாளும் இராது. இந்தக் கப்பலின் கதியைப் பார்த்து விட்டு இன்னொரு கப்பல் அப்பால் நிறையத் தண்ணீர் உள்ள இடத்துக்குப் போயிருக்கலாம். இந்தக் கப்பல் ஏன் இவ்வளவு கரை யருகில் வந்திருக்க வேண்டும் என்றும் தெரியவில்லை. சோழநாட்டு மாலுமிகள் ஆயிர மாயிரம் ஆண்டுகளாகக் கப்பல் விட்டுப் பழக்க முள்ள பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் இத்தகைய தவறு ஏன் செய்தார்கள்? எப்படியும் இதிலிருந்தவர்கள் தப்பிப் பிழைத்திருக்க வேண்டும். ஒன்று மற்றக் கப்பலில் ஏறிப் போயிருக்க வேண்டும். அல்லது அக்கம் பக்கத்தில் எங்கேயாவது இருக்க வேண்டும்! வா! போய்ப் பார்க்கலாம்!"

"எங்கே போய்ப் பார்ப்பது, இளவரசே! சூரியன் அஸ்தமித்து நாலாபுறமும் இருள் சூழ்ந்து வருகிறதே!" என்றாள் பூங்குழலி.

"சமுத்திர குமாரி! உன் படகை எங்கே விட்டு வந்தாய்?"

"என் படகு ஏறக்குறைய இந்த ஆற்றின் நடு மத்தியில் அல்லவா இருக்கிறது? யானை மீது வந்தபடியால், அதுவும் நீங்கள் யானையைச் செலுத்தியபடியால், இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டோம். படகில் ஏறியிருந்தால் நள்ளிரவுக்குத்தான் இங்கு வந்திருப்போம்."

"சரி! நன்றாக இருட்டுவதற்குள் இந்த நதிக்கரை யோரமாகப் போய்ப் பார்க்கலாம் வா! இங்குள்ள மரங்கள் கடல் நன்றாய்த் தெரியாமல் மறைக்கின்றன. ஒரு வேளை இன்னொரு கப்பலைக் கடலில் சற்றுத் தூரத்தில் கொண்டு போய் நிறுத்தி யிருக்கலாம் அல்லவா?"

யானையை அங்கேயே விட்டு விட்டு இருவரும் நதிக்கரை யோரமாகக் கடலை நோக்கிப் போனார்கள். சீக்கிரத்திலேயே கடற்கரை வந்து விட்டது. கடலில் அமைதி குடிகொண்டிருந்தது. அலை என்பதற்கு அறிகுறியும் இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பச்சை வர்ணத் தகடாகத் தோன்றியது. கடலின் பச்சை நிறமும் வானத்தின் மங்கிய நீலநிறமும் வெகு தூரத்திற்கு அப்பால் ஒன்றாய்க் கலந்தன.

மரக்கலமோ, படகோ ஒன்றும் தென்படவில்லை. ஒன்றிரண்டு பறவைகள் கடலிலிருந்து கரையை நோக்கிப் பறந்து வந்தன. அவ்வளவுதான்!

சிறிது நேரம் அங்கே நின்று நாலாபுறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, "சரி! புதைந்த மரக்கலத்துக்குப் போகலாம்!" என்றார் இளவரசர்.

இருவரும் வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினார்கள்.

"பூங்குழலி! நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். ஆனால் இங்கே நாம் பிரிந்து விடவேண்டியதுதான்" என்றார் இளவரசர்.

பூங்குழலி மௌனமா யிருந்தாள்.

"நான் சொல்கிறது காதில் விழுந்ததா? அந்தப் புதைந்த கப்பலிலேயே நான் காத்திருக்கத் தீர்மானித்து விட்டேன். சேனாதிபதி முதலியவர்கள் எப்படியும் இந்த இடத்தைத் தேடிக்கொண்டு வந்து சேர்வார்கள். அவர்களுடன் கலந்தாலோசித்து மேலே செய்ய வேண்டியதைப் பற்றி முடிவு செய்வேன். ஆனால் உனக்கு இனி இங்கே வேலை இல்லை. உன் படகைத் தேடிப் பிடித்துப் போய் விடு. என் தந்தையைப் பற்றி நான் கூறியதை நினைவில் வைத்துக் கொள்......"

பூங்குழலி தயங்கி நின்றாள். அங்கிருந்த மரம் ஒன்றின் மீது சாய்ந்தாள். அதன் தாழ்ந்த கிளை ஒன்றை அவள் பிடித்துக் கொண்டாள்.

"என்ன, சமுத்திரகுமாரி? என்ன?"

"ஒன்றுமில்லை, இளவரசரே! இங்கேயே தங்களிடம் விடைபெற்றுக்கொள்கிறேன், போய் வாருங்கள்!"

"கோபமா, பூங்குழலி!"

"கோபமா? தங்களிடம் கோபங்கொள்ள இந்தப் பேதைக்கு என்ன அதிகாரம்? அவ்வளவு அகம்பாவம் நான் அடைந்து விடவில்லை."

"பின்னர், ஏன் திடீரென்று இங்கே நின்று விட்டாய்?"

"கோபம் இல்லை, ஐயா! களைப்புத்தான்! நான் உறங்கி இரண்டு நாள் ஆகிறது. இங்கேயே சற்றுப் படுத்திருந்துவிட்டு என் படகைத் தேடிக் கொண்டு போகிறேன்."

அது பௌர்ணமிக்கு மறு நாள். ஆகையால் அச்சமயம் கீழைக் கடலில் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தது. இரண்டொரு மங்கிய கிரணங்கள் பூங்குழலியின் முகத்திலும் விழுந்தன.

இளவரசர் அந்த முகத்தைப் பார்த்தார். அதில் குடிகொண்டிருந்த சோர்வையும் களைப்பையும் பார்த்தார். கண்கள்



பஞ்சடைந்து இமைகள் தாமாக மூடிக் கொள்வதையும் பார்த்தார்.

சந்திரன் உதயமாகும் போது செந்தாமரை குவிதல் இயற்கைதான். ஆனால் பூங்குழலியின் முகத்தாமரை அப்போது குவிந்தது என்று மட்டும் சொல்வதற்கில்லை. அது வாடி வதங்கிச் சோர்ந்து போயிருந்தது.

"பெண்ணே! தூங்கி இரண்டு நாளாயிற்று என்றாயே? சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்று?" என்றார்.

"சாப்பிட்டும் இரண்டு நாளைக்குமேல் ஆயிற்று. தங்களுடன் இருந்த வரையில் பசியே தெரியவில்லை."

"என் மூடத்தனத்தை என்னவென்று சொல்வது? இன்று பகல் நாங்கள் எல்லாரும் வயிறு புடைக்க விருந்துண்டோம். 'நீ சாப்பிட்டாயா?' என்று கூடக் கேட்கத் தவறிவிட்டேன்! வா! பூங்குழலி! என்னுடன் அந்தப் புதைந்த கப்பலுக்கு வா! அதில் தானியங்கள் சிதறிக் கிடந்ததைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது. அந்தத் தானியங்களைத் திரட்டி இன்று இரவு கூட்டாஞ்சோறு சமைத்து உண்போம். சாப்பிட்ட பிறகு நீ உன் வழியே போகலாம்......"


"ஐயா! சாப்பிட்டால் உடனே அங்கேயே படுத்துத் தூங்கி விடுவேன். இப்போதே கண்ணைச் சுற்றுகிறது."

"அதனால் என்ன? நீ அந்தப் புதைந்த கப்பலில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு! நானும் யானையும் கரையிலிருந்து காவல் காக்கிறோம். பொழுது விடிந்ததும் நீ உன் படகைத் தேடிப் போ!"

இவ்விதம் சொல்லி இளவரசர் பூங்குழலியின் கரத்தைப் பற்றி அவளைத் தாங்குவார்போல நடத்தி அழைத்துக் கொண்டு சென்றார். உண்மையிலேயே அவளுடைய கால்கள் தள்ளாடின என்பதைக்

கண்டார். அந்தப் பெண்ணின் அன்புக்கு ஈரேழு உலகிலும் இணை ஏது என்று எண்ணியபோது அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது.

புதைந்திருந்த கப்பலுக்கு அவர்கள் திரும்பி வந்து சேர்ந்தபோது அக் கப்பலுக்குப் பின்னால் புகை கிளம்புவதைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஒரு வேளை அந்தக் கப்பலைச் சேர்ந்தவர்கள் எங்கேயாவது போயிருந்து திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? திடீரென்று அவர்கள் முன்னால் தோன்றினால் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று நேரிடக் கூடும். ஆகையால் மெள்ள மெள்ளச் சத்தமிடாமல் சென்றார்கள். வெகு சமீபத்தில் அவர்கள் போன பிறகும் பேச்சுக் குரல் ஒன்றும் கேட்கவில்லை. மறைவில் இருப்பவர்கள் யார், அவர்கள் எத்தனை பேர் என்றும் தெரியவில்லை. வள்ளிக்கிழங்கு சுடும் மணம் மட்டும் கம்மென்று வந்தது. பூங்குழலியின் நிலையை இப்போது இளவரசர் நன்கு அறிந்திருந்தபடியால் அவளுடைய பசியைத் தீர்ப்பது முதல் காரியம் என்று கருதினார். ஆகையால் வந்தது வரட்டும் என்று கப்பலைச் சுற்றிக் கொண்டு அப்பால் சென்று பார்த்தார். அங்கே அடுப்பு மூட்டிச் சமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது ஒரு பெண்மணி என்று தெரிந்தது. யார் அந்தப் பெண்மணி என்பதும் அடுத்த கணத்திலேயே தெரிந்து போயிற்று. அந்த மூதாட்டி இவர்களைக் கண்டு ஆச்சரியப் பட்டதாகத் தெரியவில்லை. இவர்களை எதிர்பார்த்தவளாகவே தோன்றியது. வாய்ப்பேச்சின் உதவியின்றி இவர்களை அம்மூதாட்டி வரவேற்றாள். சற்று நேரத்துக்கெல்லாம் அமுதும் படைத்தாள். பழையாறை அரண்மனையில் அருந்திய இராஜ போகமான விருந்துகளையெல்லாம் காட்டிலும் இம்மூதாட்டி அளித்த வரகரிசிச் சோறும் வள்ளிக்கிழங்கும் சுவை மிகுந்ததாக இளவரசருக்குத் தோன்றியது.



சாப்பிட்ட பிறகு மூன்று பேரும் கப்பலின் தளத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சந்திரன் இப்போது நன்றாக மேலே வந்திருந்தான். கப்பலின் தளத்திலிருந்து பார்த்தபோது, கடலும் தோன்



டைமாறும் ஒன்றாகக் கலக்கும் இடமும் அதற்கு அப்பால் பரந்த கடலும் தெரிந்தன. முன் மாலை இருள் வேளையில் பச்சைத் தாமிரத் தகட்டைப் போல் தோன்றிய கடல் இப்போது பொன் வண்ண நிலாவின் கிரணங்களினால் ஒளி பெற்றுத் தங்கத் தகடாகத் திகழ்ந்தது.

அவர்கள் இரவில் திறந்த வெளியில் சுற்றிலும் நீர் சூழ்ந்த இடத்தில் இருந்த போதிலும் புழுக்கத்தினால் உடம்பு வியர்த்தது. காற்று என்பது லவலேசமும் இல்லை. இதைப் பற்றி இளவரசர் பூங்குழலியிடம் கூறியதை அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்து கொண்டாள். வானத்தில் சந்திரனைச் சுற்றி ஒரு சாம்பல் நிற வட்டம் ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினாள். "சந்திரனைச் சுற்றி வட்டமிட்டிருந்தால் புயலும் மழையும் வரும் என்பதற்கு அடையாளம்" என்று பூங்குழலி விளக்கிக் கூறினாள். "புயல் வருகிறபோது வரட்டும்; இப்போது கொஞ்சம் காற்று வந்தால் போதும்!" என்றார் இளவரசர். பிறகு அந்த மூதாட்டி எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் அங்கு வந்து சேர்ந்திருக்க முடியும் என்று தமது வியப்பைத் தெரிவித்தார். "என் அத்தைக்கு இது ஒரு பெரிய காரியம் அல்ல; இதைவிட அதிசயமான காரியங்களை அவர் செய்திருக்கிறார்!" என்றாள் பூங்குழலி. "மேலும் தங்களிடம் அவருக்கு இருக்கும் அன்புக்கு அளவே கிடையாது. அன்பின் சக்தியினால் எதைத்தான் சாதிக்க முடியாது?" என்றாள்.

இந்தப் பேச்சையும் அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்து கொண்டு பூங்குழலியின் முகத்தைத் திருப்பி ஒரு திக்கைச் சுட்டிக் காட்டினாள். அங்கே அவர்கள் ஏறிவந்த யானை நின்று கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் கம்பீரமான உயர்ந்த சாதிக் குதிரை ஒன்று நின்றதைக் கண்டு இருவரும் அதிசயித்தார்கள்.

"இந்தக் குதிரையின் மீது ஏறி இவர் வந்தாரா என்ன? இவருக்குக் குதிரை ஏறத் தெரியுமா?" என்று இளவரசர் வியப்புடன் கேட்டார்.

"அத்தைக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் எல்லாம் தெரியும். படகு வலிக்கத் தெரியும். சில சமயம் காற்றில் ஏறிப் பிரயாணம் செய்வாரோ என்று நினைக்கத் தோன்றும். அவ்வளவு சீக்கிரம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடம் வந்து விடுவார். எப்படி வந்திருக்க முடியும் என்று நமக்கு ஆச்சரியமாயிருக்கும்."

இளவரசர் அப்போது வேறொரு ஆச்சரியத்தில் மூழ்கி யிருந்தார். கரையில் மேய்ந்து கொண்டிருந்த குதிரையின் கம்பீரத் தோற்றந்தான் அவருக்கு அத்தகைய வியப்பை உண்டாக்கியது.

"அரபு நாட்டில் வளரும் உயர்ந்த சாதிக் குதிரைகளில் மிக உயர்ந்த குதிரையல்லவா இது? எப்படி இங்கே வந்தது? எப்படி இந்த மூதாட்டிக்குக் கிடைத்தது?" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

பூங்குழலி சமிக்ஞை பாஷையினால் இதைப் பற்றி ஊமை ராணியிடம் கேட்டாள். (ஆம்; 'ஊமை ராணி' என்று இனி நாம் அந்த மூதாட்டியை அழைக்கலாம் அல்லவா?) 'யானை இறவு'த் துறைக்குப் பக்கத்தில் இந்தக் குதிரை கடலிலிருந்து கரையேறியது என்றும், கரை ஏறியதும் தெறி கெட்டுப் பிரமித்து நின்று கொண்டிருந்ததென்றும், ஊமை ராணி அதை அன்புடன் தட்டிக் கொடுத்து வசப்படுத்தி அதன் மேல் ஏறிக் கொண்டு வந்ததாகவும் தெரியப்படுத்தினாள். இதைக் கேட்ட இளவரசரின் வியப்பு மேலும் அதிகமாயிற்று.

பேசிக் கொண்டிருக்கும் போதே பூங்குழலியின் கண்ணிமைகள் மூடிக் கொள்வதை இளவரசர் கவனித்தார். "முன்னமே தூக்கம் வருகிறது என்று சொன்னாய். நீ படுத்துக் கொள்!" என்றார். அப்படிச் சொன்னதுதான் தாமதம்; பூங்குழலி அவ்விடமிருந்து சற்று விலகிச் சென்று படுத்துப் பக்கத்தில் கிடந்த கப்பல் பாய் ஒன்றை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் தூங்கிப்போனாள். அவள் மூச்சு விட்ட தோரணையிலிருந்து அவள் தூங்கி விட்டாள் என்று தெரிந்தது.

ஆனால் தூக்கத்திலேயே அவளுடைய வாய் மெல்லிய குரலில் பாட்டு ஒன்றை முணுமுணுத்தது.

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவதேன்?"

ஆகா! இதே பாட்டை வந்தியத்தேவன் நேற்று அடிக்கடி முனகிக் கொண்டிருந்தான்! இவளிடந்தான் கற்றுக் கொண்டான் போலும். மற்றொரு சமயம் சமுத்திர குமாரி விழித்துக் கொண்டிருக்கும்போது பாட்டு முழுவதையும் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று இள

வரசர் எண்ணினர் உடனே ஊமை ராணியிடம் அவர் கவனம் சென்றது. ஆகா! எல்லாருக்குந்தான் சில சமயம் அகக்கடல் பொங்குகிறது; நெஞ்சகம் விம்முகிறது! ஆனாலும் வாய்திறந்து தன் உணர்ச்சிகளை என்றும் வெளியிட முடியாத இந்த மூதாட்டியின் உள்ளக் கொந்தளிப்புக்கு உவமானம் ஏது? எத்தனை ஆசாபாசங்கள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துயரங்கள், எவ்வளவு கோப தாப ஆத்திரங்கள் எல்லாவற்றையும். இவள் தன் உள்ளத்திலேயே அடக்கி வைத்திருக்கிறாள்? எத்தனை காலமாக அடக்கி வைத்திருக்கிறாள்?......


ஊமை ராணி இடம் பெயர்ந்து இளவரசரின் அருகில் வந்து அமர்ந்தாள். அவருடைய தலைமயிரை அன்புடன் கோதிவிட்டாள். அவருடைய இரண்டு கன்னங்களையும் பூவைத் தொடுவதைப் போல் தன் வலிய வைரமேறிய கரங்களினால் மிருதுவாகத் தொட்டுப் பார்த்தாள். இளவரசருக்குச் சற்று நேரம் என்ன செய்வது என்றே தெரியவில்லை. பிறகு அந்த மூதாட்டியின் பாதங்களைத் தொட்டுத் தம் கண்ணில் ஒற்றிக் கொண்டார். அவள் அந்தக் கரங்களைப் பிடித்துத் தன் முகத்தில் வைத்துக் கொண்டாள். இளவரசருடைய கரங்கள் விரைவில் அந்தப் பெண்ணரசியின் கண்ணில் பெருகிய நீரால் நனைந்து ஈரமாயின.

ஊமை ராணி சமிக்ஞையினால் இளவரசரையும் படுத்து உறங்கச் சொன்னாள். தான் காவல் இருப்பதாகவும் கவலையின்றித் தூங்கும்படியும் சொன்னாள். இளவரசருக்குத் தூக்கம் வரும் என்று தோன்றவில்லை. ஆயினும் அவளைத் திருப்தி செய்வதற்காகப் படுத்தார். படுத்து வெகுநேரம் வரையில் அவர் உள்ளக் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. பிறகு வெளியில் சிறிது குளிர்ந்த காற்று வந்தது. உடல் குளிரவே உள்ளம் குவிந்தது; இலேசாக உறக்கமும் வந்தது.

ஆனால் உறக்கத்திலும் இளவரசரின் மனம் அமைதியுறவில்லை. பற்பல விசித்திரமான கனவுகள் கண்டார். அரபு நாட்டுச் சிறந்த குதிரை ஒன்றின்மீது ஏறி வான வெளியில் பிரயாணம் செய்தார். மேக மண்டலங்களைக் கடந்து வானுலகில் புகுந்தார். அங்கே தேவேந்திரன் அவரை ஐராவதத்தில் ஏற்றி அழைத்துச் சென்றான். தன்னுடைய இரத்தினச் சிங்காதனத்தில் அவரை உட்காரச் சொன்னான். "ஓ! இது எனக்கு வேண்டாம். இந்தச் சிங்காதனத்தில் என் பெரிய தாயார் ஊமை ராணியை ஏற்றிவைக்க விரும்புகிறேன்" என்று இளவரசர் சொன்னார். தேவேந்திரன் சிரித்து "அவள் இங்கே வரட்டும், பிறகு பார்க்கலாம்" என்றான். தேவேந்திரன் இளவரசருக்குத் தேவாமிர்தத்தைக் கொடுத்துப் பருகச் சொன்னான். இளவரசர் அருந்திப் பார்த்துவிட்டு, "ஓ! இது காவேரித் தண்ணீர். அவ்வளவு நன்றாயில்லையே?" என்றார். தேவேந்திரன் இளவரசரை அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனான். அங்கே தேவமகளிர் பலர் இருந்தார்கள். இந்திராணி இளவரசரைப் பார்த்து "இந்தப் பெண்களுக்குள்ளே அழகில் சிறந்தவள் யாரோ அவளை நீர் மணந்து கொள்ளலாம்" என்றாள். இளவரசர் பார்த்து விட்டு, "இவர்களில் யாரும் பூங்குழலியின் அழகுக்கு அருகிலும் வரமாட்டார்கள்" என்றார். திடீரென்று இந்திராணி இளைய பிராட்டியாக மாறினாள். "அருள்மொழி! என் வானதியை மறந்து விட்டாயா?" என்று கேட்டாள். இளவரசர் "அக்கா! அக்கா! எத்தனை நாளைக்கு என்னை நீ அடிமையாக வைத்திருக்கப் போகிறாய்? உன்னுடைய அன்பின் சிறையைக் காட்டிலும் பழுவேட்டரையரின் பாதாளச் சிறை மேல்! என்னை விடுதலை செய்! இல்லாவிட்டால் விராட ராஜனுடைய புதல்வன் உத்தர குமாரனைப் போல் என்னை அரண்மனையிலேயே இருக்கச் செய்து விடு. ஆடல் பாடல்களில் காலங் கழித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். இளையபிராட்டி குந்தவை தன் பவழச் செவ்விதழ்களில் காந்தள் மலரை யொத்த விரலை வைத்து அவரை வியப்புடன் நோக்கினாள்.

"அருள்மொழி! நீ ஏன் இப்படி மாறிப் போய் விட்டாய்? யார் உன் மனதைக் கெடுத்தார்கள்? ஆம், தம்பி! அன்பு என்பது ஓர் அடிமைத்தனம் தான். அதற்கு நீ கட்டுப் பட்டுத்தான் ஆக வேண்டும்" என்றாள். "இல்லை, அக்கா! இல்லை! நீ சொல்வது தவறு. அடிமைத்தனம் இல்லாத அன்பு உண்டு. உனக்கு அதைக் காட்டட்டுமா? இதோ கூப்பிடுகிறேன், பார்!......பூங்குழலி! பூங்குழலி! இங்கே வா!" என்று கூவினார்.

பலபல வென்று பொழுது விடியும் சமயத்தில் பூங்குழலி குதிரையின்



காலடிச் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டாள். ஊமை ராணி குதிரைமேல் ஏறிப் புறப்படுவதைப் பார்த்தாள். அவளைத் தடுப்பதற்காக எழுந்து ஓடினாள். அவள் கப்பலிலிருந்து இறங்கிக் கரைக்குச் செல்வதற்கு முன்னால் குதிரை பறந்து சென்று விட்டது.

உதய நேரம் மிக்க மனோகரமாயிருந்தது. பூங்குழலியின் உள்ளத்தில் என்றுமில்லாத உற்சாகம் ததும்பியது. அங்கிருந்தபடியே கப்பலின் மேல் தளத்தைப் பார்த்தாள். இளவரசர் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி நதிக்கரையோரமாகப் பறவைகளின் இனிய கானத்தைக் கேட்டுக் கொண்டு நடந்தாள். ஒரு மரத்தின் வளைந்த கிளையில் ஒரு பெரிய ராட்சதக் கிளி உட்கார்ந்திருந்தது. பூங்குழலியைக் கண்டு அது அஞ்சவில்லை. "எங்கே வந்தாய்?" என்று கேட்பதுபோல் அவளை உற்றுப் பார்த்தது.

"கிளித் தோழி! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இளவரசர் இங்கிருந்து போய் விடுவார். பிறகு எனக்கு நீதான் துணை. என்னோடு பேசுவாய் அல்லவா?" என்று பூங்குழலி கேட்டாள்.

அச்சமயம் "பூங்குழலி! பூங்குழலி!" என்ற குரல் கேட்டது. முதலில் கிளிதான் பேசுகிறது என்று நினைத்தாள். இல்லை; குரல் கப்பலிலிருந்து வருகிறது என்று உணர்ந்தாள். இளவரசர் அழைக்கிறார் என்று அறிந்து குதித்தோடினாள். ஆனால் கப்பல் மேல் ஏறிப் பார்த்தபோது இளவரசர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி அவர் அருகில் சென்றபோது அவருடைய வாய்மீண்டும் "பூங்குழலி! பூங்குழலி!" என்று முணுமுணுத்தது. உடல் புளகாங்கிதம் கொண்ட அப்பெண் இளவரசரின் அருகில் சென்று அவருடைய நெற்றியைத் தொட்டு எழுப்பினாள்.

இளவரசர் உறக்கமும் கனவும் கலந்து எழுந்தார். கீழ்த்திசையில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பூங்குழலியின் முகம் மலர்ந்த செந்தாமரையைப்போல் பிரகாசித்தது. "என்னை அழைத்தீர்களே, எதற்கு?" என்று கேட்டாள். "உன் பெயரைச் சொல்லி அழைத்தேனா, என்ன? தூக்கத்தில் ஏதோ பேசியிருப்பேன். நீ நேற்றிரவு தூங்கிக் கொண்டே பாடினாயே! நான் தூக்கத்தில் பேசக் கூடாதா?" என்றார்.


இளவரசர் குதித்து எழுந்தார். "ஓகோ! இத்தனை நேரமா தூங்கி விட்டேன்! பெரியம்மா எங்கே?" என்று கேட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தார். அந்த மூதாட்டி அதிகாலையில் குதிரை ஏறிப் போய் விட்டதைச் சமுத்திரகுமாரி கூறினாள்.

"நல்ல காரியம் செய்தாள்! சமுத்திர குமாரி! உன் களைப்புத் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது. நீயும் இனி விடை பெற்றுக் கொள்ளலாம். என் நண்பர்கள் வரும் வரையில் நான் இங்கேயே இருக்க வேண்டும். அதுவரை இந்தக் கப்பலைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன்!" என்றார்.

பூங்குழலி "அதோ! அதோ!" என்று சுட்டிக் காட்டினாள். அவள் காட்டிய திசையை இளவரசர் நோக்கினார். கடலில் வெகு தூரத்தில் ஒரு பெரிய மரக்கலம் தெரிந்தது. கடற்கரை யோரமாக ஒரு சிறிய படகு வருவதும் தெரிந்தது. படகிலே ஐந்தாறு பேர் இருந்தார்கள்.

"ஆகா! இப்போது எல்லா விவரங்களும் தெரிந்து போய்விடும்!" என்றார் இளவரசர்.

தாம் அங்கிருப்பது தெரியாமல் ஒரு வேளை படகு கடற்கரையோடு போய் விடலாம் என்று இளவரசர் அஞ்சினார். ஆகையால் உடனே புதைந்த கப்பலிலிருந்து கீழிறங்கி நதிக்கரையோரமாகக் கடற்கரையை நோக்கிச் சென்றார். பூங்



குழலி அவரைத் தொடர்ந்து சென்ருன். யானையும் அவர்களைப் பின் தொடர்ந்து அசைந்தாடிக் கொண்டு சென்றது.

கடற் கரையிலே போய் நின்ருர்கள். மரக்கலம் அவர்களை விட்டுத் தூரத் தூரப் போய்க் கொண்டிருந்தது. படகு அவர்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது.

முதலில் பின்னுல் ஒதுங்கி நின்ற பூங்குழலி ஆர்வங் காரணமாகச் சிறிது நேரத்துக்குள் முன்னுல் வந்து விட்டாள்.

இளவரசருடைய மனக் கவலைகளுக் கிடையே பூங்குழலியின் ஆர்வம் அவருக்குக் களிப்பை ஊட்டியது. அவர் முகத்தில் குறுநகை ததும்பியது.

அவர் மனக் கவலை கொள்ளக் காரணங்களும் நிறைய இருந்தன. தூரத்திலே போய்க் கொண்டிருந்த கப்பலில் தாமும் போயிருக்க வேண்டும் என்றும் அது தன்னை விட்டு விட்டுத் தூர தூரப் போய்க் கொண்டிருந்ததாகவும் அவருக்குத் தோன்றியது. அதுமட்டும் அன்று. கிட்ட நெருங்கி வந்து கொண்டிருந்த படகிலே ஒரு ஆள் குறைவாயிருந்ததாகக் காணப்பட்டது. இருக்க வேண்டிய ஒருவர் அதில் இல்லை. ஆம்; அதோ சேனாதிபதி இருக்கிருர்; திருமலையப்பர் இருக்கிருர்; உடன் வந்த வீரர்கள் இருக்கிருர்கள்; படகோட்டிகள் இருக்கிருர்கள். ஆனுல் அந்த வாணர்குலத்து வாலிபனை மட்டும் காணும். வல்லத் தரையன் எங்கே? அந்த உற்சாக புருஷன், அஸகாய சூரன், அஞ்சா நெஞ்சம் படைத்த தீரன், இளைய பிராட்டி அனுப்பி வைத்த அந்தரங்கத் தூதன் எங்கே?...... இரண்டு நாள்தான் பழகியிருந்த போதிலும் இளவரசருக்கு நெடுநாள் பழக்கப்பட்ட நண்பன்போல் அவன் ஆகியிருந்தான். அவனுடைய குணுதிசயங்கள் அவ்வளவாக இளவரசருடைய மனதைக் கவர்ந்திருந்தன. அவனைப் படகில் காணுததும் அரிதில் கிடைத்த பாக்கியத்தை இழந்தது போல் இளவரசருக்கு வேதனை உண்டாயிற்று.

படகு இன்னும் நெருங்கிக் கரையோரம் வந்ததும் சேனாதிபதி முதலியவர்கள் தாவிக் கரையில் குதித்தார்கள். சேனாதிபதி பூதிவிக்கிரமகேசரி ஓடி வந்து இளவரசரைக் கட்டிக் கொண்டார்.

"ஐயா! நல்ல காரியம் செய்தீர்கள்! எங்களை இப்படிக் கதிகலங்க அடிக்கலாமா?...யானையின் மதம் எப்படி அடங்கிற்று? இந்தப் பொல்லாத யானை இப்போது எவ்வளவு சாதுவாக நின்று கொண்டிருக்கிறது!...... இளவரசே! எப்போது இங்கே வந்து சேர்ந்தீர்கள்? பழுவேட்டரையர்களின் கப்பல்களைப் பார்த்தீர்களா? அவை எங்கே?" என்று கொடும்பாளூர்ப் பெரிய வேளார் கேள்வி மாரி பொழிந்தார்.

"சேனாதிபதி! எங்கள் கதையைப் பின்னுல் சொல்கிறேன். வந்தியத்தேவர் எங்கே? சொல்லுங்கள்!" என்ருர்.

"அந்தத் துடுக்குக்காரப் பிள்ளை அதோ போகிற கப்பலில் போகிருன்!" என்று சேனாதிபதி தூரத்தில் போய்க் கொண்டிருந்த கப்பலைக் காட்டினுர்.

"ஏன்? ஏன்? அது யாருடைய கப்பல்? அதில் ஏன் வந்தியத்தேவர் போகிருர்?" என்று இளவரசர் கேட்டார்.

"ஐயா! எனக்குப் புத்தி ஒரே கலக்கமாயிருக்கிறது. இந்த வைஷ்ணவனைக் கேளுங்கள்! இவனுக்கு உங்கள் சமாசாரமும் அந்த வாலிபன் சுபாவமும் தெரிந்திருக்கிறது!" என்ருர்.

இளவரசர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து "திருமலை! வந்தியத்தேவர் ஏன் அக்கப்பலில் போகிருர்? தெரிந்தால் சீக்கிரம் சொல்லுங்கள்!" என்ருர்.

குமுதவல்லியின் குறை!

கு. ரா.

கை கொள்ளாமல் சம்பாதிக்கும் கண்ணிறைந்த கணவனாகிய குஞ்சிதபாதத்தைப் பற்றி அவனுடைய மனைவியாகிய குமுதவல்லிக்கு ஒரே ஒரு குறைதான். அந்தக் குறையின் காரணம் குஞ்சிதபாதத்தின் நிறைதான். ஐந்தடி ஐந்தங்குல உயரமுள்ள அவன் சுமார் நூற்றைம்பது ராத்தல் எடை இருந்தான். ஆறடி உயரமும் இதே எடையும் உள்ளவர்களை 'மெல்லிசு' என்று அழைக்கும் உலகம் குஞ்சிதபாதம் போன்றவர்களைக் 'கட்டை குட்டை' என்ற பெயரினால் அழைத்து வந்தது. மின்னற் கொடி போன்ற உருவமும், தந்தத்தினாலோ அல்லது உருக்கி வார்த்த பசும் பொன்னினாலோ செய்யப்பட்ட பதுமை போன்ற கச்சிதமான உடலமைப்புப் பெற்ற குமுதாவுக்குத் தன்னுடைய கணவனுடைய உருவம் இப்படி இருப்பது கவலையையே அளித்தது

"ஆபீசில் டென்னிஸ் ஆட வசதி இருக்கிறது என்கிறீர்களே ஆடக் கூடாதா? உடம்புக்கு நல்லது ஆயிற்றே! ஆபீஸ் விட்டவுடன் வீட்டுக்கு வந்துவிடுகிறீர்களே" என்று கனிவோடு கேட்பாள் குமுதா.

"நான் டென்னிஸ் இல்லை, கிரிக்கெட்கூட ஆடத் தயார்தான். ஆனால் என்னை யாரும் சேர்த்துக் கொள்ள மாட்டார்களே!" என்று சொல்லி விட்டுக் குஞ்சிதபாதம் தன் தொந்தி குலுங்கக் குலுங்கச் சிரிப்பான்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்களே, அதுபோலக் குமுதவல்லியின் போதனையின்மீது குஞ்சிதபாதம் மனம் கரைந்து பலவித உடற்பயிற்சிகளில் ஈடுபட்டான். ஆனால் அவனுடைய உடல் கனம் குறைய மறுத்து விட்டது. குமுதாவின் மனத்தில் நாளுக்கு நாள் கனம் ஏற ஆரம்பித்தது. தன்னுடைய எடை குறையவில்லையே என்ற கவலையைக் குஞ்சிதபாதம் ஒரு நாளும் படவில்லை. எப்பொழுதும் போல அவன் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் சதா சிரித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டுமிருந்தான்.

வழக்கம்போல் ஆபீசினின்றும் திரும்பிய குஞ்சிதபாதம் வழக்கத்துக்கு விரோதமாக அந்த வேளையில் கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்த குமுதாவைக் கண்டு திடுக்கிட்டான். "குமுதா! என்ன உடம்புக்கு?" என்று கேட்டுக்கொண்டே அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். நெற்றிப் பொட்டு 'கதகத' வென்றிருந்தது. அன்று இரவு முழுதும் 'கதகத' வென்றிருந்த அவளுடைய பூப்போன்ற உடம்பு மறுநாள் 'தகதக' வென்று கொதிக்க ஆரம்பிக்கவே குஞ்சிதபாதம் பயந்து போய் விட்டான்.

நகரத்திலுள்ள டாக்டர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து பார்த்தனர் ஒரு டாக்டர் 'நிமோனியா' என்றார். வேறொருவர் இன்புளுயன்ஸா என்றார். மற்றவர் மலேரியா என்றார். கடைசியில் எல்லோருமாக அதை டைபாயிடு என்று முடிவுகட்டினார்கள்.

காரியாலயத்துக்கு லீவு போட்டுவிட்டுக் குஞ்சிதபாதம் இரவு பகலாக மனைவியின் அருகில் உட்கார்ந்து கண் விழித்து அவளுக்குச் சிசுருஷை செய்தான்.

நான்கு மாதங்கள் போரிட்டு யமனுடைய வாயிலிருந்து குமுதாவை மீட்டு வெற்றிக் கொடி காட்டினான் குஞ்சிதபாதம்.

கையும் காலும் செதுக்கி வைத்த சிற்பம் போலிருந்த குமுதா இப்பொழுது எலும்பும் தோலுமாகக் காட்சி யளித்தாள். இதென்ன விந்தை! சிற்றானைக் குட்டி போல் இருந்த குஞ்சித பாதம் இப்பொழுது உடம்பு 'ஒத்து உருகி' கச்சிதமான உடலமைப்போடு காட்சி யளித்தான்! மனைவியைப்பற்றிய கவலை அவன் உடலையே உருக்கி, கச்சிதமான உடலமைப்போடு காட்சி யளித்தான்!

ஜுர வேகம் எல்லாம் தணிந்து வெளியுலக சிந்தனை திரும்பப் பெற்ற குமுதா தன்னுடைய கணவன் இளைத்து உருமாறிப் போனதைக் கண்டு துணுக்குற்றாள்.

"எத்தனையோ முறைகளைக் கையாண்டும் என் உடம்பு இளைக்காததால், என்னைக் கவலையில் ஆழ்த்தி அதன் மூலம் உன்னுடைய இலட்சியத்தைச் சாதித்துக் கொள்வது என்று நீ தீர்மானித்து விட்டாயா, குமுதா? இந்த விஷப் பரீட்சை செய்யலாமா?" என்று கேட்டான் குஞ்சிதபாதம்.

அப்பொழுதுதான் நல்ல இரத்தம் திரும்பிக் கொண்டிருந்த அவளுடைய வெளிறிப் போன முகத்தில் புன்னகையின் ஒளி லேசாகத் தவழ்ந்தது.

"குமுதா! உன்னுடைய உடம்பு பழைய நிலைமையை அடைவதற்கு நீ நிறைய டானிக்குகள் சாப்பிட வேண்டும் தெரியுமா?" என்றான் குஞ்சிதபாதம்.

குமுதா சாப்பிட்ட டானிக்குகள் எதிர்பார்த்ததற்கு மேல் பலன் தந்தன. ஒரே வருஷத்தில் குமுதா தன்னுடைய பழைய உடம்பைப் பெற்றதுடன் நிற்காமல் தன் கணவனுடைய பழைய உருவையும் எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள்! நீண்ட காலம் நோயில் அடிபட்டுத் தேறினவர்கள் உடலில் சீக்கிரம் சதை பிடிப்பது வழக்கமல்லவா?

ஒல்லியாக நின்றுபோன குஞ்சிதபாதம் மாத்திரம் குமுதாவைத் தேகப் பயிற்சி செய் என்று ஒரு நாளும் சொல்லுவதில்லை.

பஜகோவிந்தம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ஆன்மஞானம் வளர்த்த ஆசான் வாழி!
மாயத்தைச் சிதைத்துக்காட்டிய சங்கரன் வாழி!
அவன் பாடிய பாட்டின் அமுதப் பொருளை
தவத் தமிழ்ல் சொல்லச் சிறியேனுக்கு
மொழி தந்த தாய் வாழி!

வயலில் சிறு வாய்க்காலைத் தாண்டுவதுபோல் பெரும் மாயக் கடலைத் தாண்டினார் ஸ்ரீ சங்கரர். ஆன்ம ஞானம் வளர்வதற்காகப் பல வேதாந்த நூல்களை அவர் இயற்றினார். அதற்கும் மேலாக உலகத்தார் உள்ளத்தில் பக்தி வளர்ப்பதற்கென்று பல பாடல்களைப் பாடினார். அவற்றில் ஒன்று மிகப் பிரசித்தி பெற்ற "பஜ கோவிந்தம்" பாட்டு.

பக்தி மார்க்கம் வேறு, ஞான மார்க்கம் வேறு என்று பக்குவ மடையாத சிலர் பேசுவதுண்டு. பொன் வேறு பித்தளை வேறு என்பதைப் போல், ஞானம் என்பது ஒரு தனி மார்க்கம், பக்தி என்பது வேறொரு தனி மார்க்கம் என்று எண்ணுவதும் பேசுவதும் அறியாமை. புலன்களை அடக்கினாலன்றி ஞானம் தோன்றாது. புலன்களின் இயற்கை வேகத்தை எப்படி அடக்குவது? மோகத்தையும் பற்றுக்களையும் நீக்கினாலொழிய உள்ளத்தைத் திருத்த முடியாது. புலன்களை அடக்க வேண்டுமென்றால் பக்தியின்றி இதை நிறைவேற்றவே முடியாது. புலன்களை அடக்க முயற்சி செய்த அனைவருடைய அனுபவமும் இதுவாகும். ஆகையால்,

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு
முயல்வேனைப் பக்திநெறி அறிவித்து

என்று பாடினார் மாணிக்க வாசக சுவாமிகள். "மூர்க்கர்" என்றால் மெய்ஞ்ஞானத்துக்குத் தடையாக உள்ளத்தில் நிற்கும் அகங்காரமும் ஆசைகளும் பற்றுதலும். ஆசமனம் செய்வது போல் எளிதாக ஞான சமுத்திரத்தை அள்ளிக் குடித்த ஆதி சங்கராச்சாரியரே பக்தியை வளர்க்க வேண்டிப் பாட்டுக்களைப் பாடினார் என்றால் அதுவே போதும், பக்தியும் ஞானமும் ஒன்றே என்பதற்கு: வேறு சான்று வேண்டியதில்லை. பல வேதாந்த நூல்களை எழுதிய ஸ்ரீ சங்கரர், விஷயம் அவ்வளவையும் வெகு சுருக்கமாக பஜ கோவிந்தப் பாட்டில் அடக்கி பக்தியும் ஞானமும் ஒன்றாகக் கூடின பேருண்மைப் பொருளுக்கு எதுகையும் சந்தமும் கூட்டி வெகு இனிய வடிவம் தந்து பாடி யிருக்கிறார். பஜ கோவிந்தம் என்ற பாட்டுக்குப் பெரியோர்கள் இட்ட பெயர், மோக முத்கரம். அதாவது மோகத்தை உடைத்துப் பொடி செய்யும் சம்மட்டி.

"பஜ கோவிந்தம்" பாட்டைத் தமிழர் கேட்டிருக்கிறார்கள். புதியதல்ல. இங்குமங்கும் துக்கடாவாக எடுத்துப் பாடுவது உண்டு. முழுவதையும் கிரமமாகப் படித்தறிவது நன்று. முப்பத்தொரு பாடல்களையும் நான் படித்து அறிவும் மகிழ்ச்சியு மடைந்த போது இதைத் தமிழில் சொல்ல வேண்டும் என்கிற ஆசை மனத்தில் உதித்தது. இதுவும் ஒரு மோகமே என்பதை அறிவேன். ஆயினும் ஆசையைத் தீர்த்துக் கொள்ளுகிறேன். பெரியோர்கள் மன்னிக்க வேண்டும்.

கோவிந்தன் வாழி! நம் கோவிந்தன் வாழி!
கதிவேறில்லை மதிகெட்ட மனமே.
மரணம் வந்தெதிரில் நிற்கும்போது
சரணம் வேறில்லை, மாதவனடியன்றி.
வாவென்றுகாலன் வந்தழைக்குங்கால்
ஆவென்று அலறுவாய், கற்றறி மூடனே!
நெட்டுருச் சூத்திரங்க ளப்போது
சற்றேனும் உதவாது மடமதியே!

* * *

பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
பஜ கோவிந்தம் மூடமதே
சம்ப்ராப்தே சந்நிஹிதே மரணே
நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ் கரணே.

* * *

கலைமகளே வந்து தன் அன்புக்குரிய சங்கரர் வாய் வழி சொல்லுகிறாள்: கற்ற கல்வியும், படித்த நூல்களும், பயின்ற கலைகளும் இவையெல்லாம் அந்திம காலத்தில் உன்னை ரக்ஷிக்குமா? இல்லை. கோவிந்தனை வந்தனை செய்து கடைத்தேறு. யமன் வந்து உன்னை வாவென்று அழைக்கும்போது படித்த நூல்களைக் கொண்டு நீ அவனிடம் வாதித்து ஒன்றும் அடைய முடியாது. கோவிந்தனை வழி பட்டால்தான் மீள்வாய். ஈசுவர பக்தியின்றிக் கற்ற கல்வி யறிவுகள் ஏதும் யமன் முன் பயன் படாது.

மனிதனை மயக்கும் பல மோகங்களில் கல்விச் செருக்கும் ஒன்று. சுக போகத்துக்கும் பணத்துக்கும் மக்கள் ஆசைப் பட்டுத் துன்பமடைவது யாவரும் அறிந்த விஷயம். அவற்றைப் போலவே கல்வி கலைகளாசையும் ஒரு மோகம் என்கிறார் சங்கரர். மரணம் வந்து எதிரே நிற்கும் வரையில் நூல்களைப் படிப்பதிலேயே வாழ் நாட்களைச் செலவழித்து, பக்தி செய்யாமல் கெட்டுப் போகவேண்டாம் என்கிறார். பல மோகங்களுள் கல்வி மோகத்துக்கு முதல் பாட்டிலேயே ஆசாரியர் இடம் வைத்தார்.

"டுக்ருஞ்" என்பது புகழோங்கிய பாணினி இலக்கணச் சூத்திரங்களைக் குறிக்கும். "யமன் முன்னிலையில் பாணினி சூத்திரங்களை ஒப்புவிக்கப் போகிறாயா?" என்று பரிகாசமாகக் கேட்கிறார். ஈசுவர பக்தியில்லாமல் எவ்வளவு பாண்டித்யம் பெற்றாலும் பயனில்லை என்று படித்தவர்களுக்கு அழுத்திச் சொல்லுவதற்காகப் பாணினி சூத்திரங்களை உதாரணமாக எடுத்துக் கொண்டார். பாணினி சூத்திரங்களைப் பற்றிச் சொன்னதில் பக்தி செய்யாமல் கற்கும் எல்லாப் படிப்புகளும் அடங்கும்.

भज गोविन्दं भज गोविन्दं
भज गोविन्दं मूढमते ।
संप्राप्ते संनिहिते मरणे
न हि न हि रक्षति डुकृञ्करणे ॥

படித்துப் பாருங்கள்!

தேவகியின் கணவன்

நீண்டாங்கரை உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியரான பத்மநாப ஐயங்காரிடம், மாணவன் கிருஷ்ணசாமி மிகவும் விசுவாசம் உள்ளவனாயிருந்தான். அவரும் அவனிடம் பிரியமாயிருந்தார். ஹெட்மாஸ்டரின் பெண் தேவகி அந்தப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் பாரம் படித்துக் கொண்டிருந்தாள். கிருஷ்ணசாமி அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தான். தேவகியும் அவனிடம் அன்பாய்த்தான் இருந்தாள்.

கிருஷ்ணசாமி தலைமை ஆசிரியர் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தது சில மாணவர்களுக்குப் பொறாமையை உண்டு பண்ணியது.

அவ்வளவுதான். அதன் காரணமாகக் கிருஷ்ணசாமி படிப்பை இடையில் நிறுத்தி அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து விலகி ஊரை விட்டே போகும்படியாகி விட்டது. தேவகிக்கு நிச்சயம் செய்திருந்த கல்யாணமும் நின்றுவிட்டது. இத்தனை குழப்பத்துக்கும் காரணமாயிருந்தவன் பின்னால் தேவகியின் கணவன் ஆனவன் தான் என்பது பல அதிர்ச்சியூட்டும் சம்பவங்களுக்குப் பிறகு வெளியாகிறது.

யாராலும் இலேசில் புரிந்து கொள்ள முடியாத பெண் உள்ளத்தையும் அதன் விசித்திரப் போக்கையும் தேவகியின் வரலாறு அதிசயமான முறையில் சித்தரிக்கிறது. கண்ணைக் கவரும் அட்டைப் படம் புத்தகத்துக்குத் தனி அழகைத் தருகிறது. பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராஜநகர், சென்னை-17; விலை: ரூ. 1-8-0.

பாலைக் கலி

கலித் தொகை என்னும் அரும் பெரும் தமிழ் இலக்கிய நூல், சங்க நூலாகிய எட்டுத் தொகையினுள் அடங்கியது. "கற்றறிந்தார் போற்றும் கலித் தொகை" என்று இந் நூல் பெரிதும் பாராட்டப் படுகிறது.

பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐவகை நிலங்களுள் பாலை நிலத்தில் நடந்த அகத்துறைக் காட்சிகளைப் பற்றி விவரிக்கும் நூல் இது. 'கலி' என்பதற்கு எழுச்சி, மகிழ்ச்சி என்பது பொருள். இந்தப் பாலைக் கலியை இயற்றியவன் ஓர் அரசன்; பெருங் கடுங்கோ என்னும் பெயருள்ளவன்.

இந்தப் பழந் தமிழ் நூலுக்கு இலேசில் பொருள் காண முடியாது. அந்தச் சிரமத்தை வித்துவான் இராமையாப் பிள்ளை நீக்கி யிருக்கிறார். இவரது விரிவுரை, நூலைப் படித்து அறியப் பெரிதும் உதவியா யிருக்கிறது. கிடைக்குமிடம்: வித்துவான் நா. இராமய்யா பிள்ளை, 35, மோதிலால் ரோடு, 1-வது தெரு, மதுரை; விலை. ரூ. 1-12-0.



அருமைக் கல்யாணி

சீதா

கல்யாணி என்று பெயர் அந்தக் குதிரைக்கு. அந்தக் குதிரையை அசுவபாலன் எவ்வளவு அருமையாக வளர்த்து வந்தான் தெரியுமா? அதைத் தினம் தேய்த்துக் குளிப்பாட்டி, கொள்ளுவைத்து மற்ற எல்லா சிசுருஷைகளும் செய்வான். 'கல்யாணி' என்று கூப்பிடும்போதே, அவன் குரலில் அன்பு, அருமை எல்லாம் தொனிக்கும். அசுவபாலனிடம் நீலவேணி என்று வேறொரு குதிரை இருந்த போதிலும் அவன் உயிர் எல்லாம் கல்யாணியின் மீதே இருந்தது.

அசுவபாலன் வசித்து வந்த ஊரில் மகிபாலன் என்றொரு வணிகன் வசித்து வந்தான். அவனுக்கு வெகு நாளாகக் கல்யாணியின் மீது ஒரு கண் இருந்தது. அந்தக் கல்யாணியை எப்படியாவது தான் அடைய வேண்டும் என்று விரும்பினான். அழகான பொருள்களைக் கண்டால் பணம் படைத்தவர்கள் பெறவேண்டும் என்று விரும்புவது இயல்பே யல்லவா?

ஆகவே ஒரு நாள் விடியற்காலை, மகிபாலன் அசுவபாலனுடைய குடிசையை நோக்கிப் புறப்பட்டான். அப்போதுதான் அசுவபாலன் தன்னருமைக் கல்யாணிக்கு முதுகு பிடித்து விட்டுக் கொண்டிருந்தான். மகிபாலன் வருவதைப் பார்த்து விட்டு ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு உபசாரம் செய்தான்.

"அசுவபாலா, நான் ஒரு முக்கியமான காரியத்தை உத்தேசித்து அல்லவா வந்திருக்கிறேன்? என் பிள்ளை படுத்த படுக்கையில் கிடக்கிறான். அவன் 'கல்யாணி, கல்யாணி' என்று உன் குதிரையைப் பற்றி ஜபித்துக் கொண்டிருக்கிறான். நீ அந்தக் கல்யாணியை எனக்கு விற்று விடேன். உனக்கு வேண்டிய பொன் தருகிறேன். கூடவே என் மகனுடைய உயிரையும் காப்பாற்றியது போலாகும்" என்றான் மகிபாலன்.

"நன்றாகச் சொன்னாய், என் உயிருக்கு மிஞ்சியல்லவா உன் மகன் உயிரைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். கல்யாணியை விற்று விட்டால் என் உயிர் போய்விடுமே! அதனால் நீ எவ்வளவு பொன் கொடுத்தாலும் என் கல்யாணியை விற்கத் தயாரில்லை" என்று கூறி விட்டான் அசுவபாலன்.

இந்த அலட்சியப் பேச்சைக் கேட்டு மகிபாலன் மிகவும் கோபமுற்றான். 'இவ்வளவு திமிரா உனக்கு, வா! வா! உனக்குச் சரியான வழி வைக்கிறேன்' என்று மனசில் கருவிக் கொண்டே போய்விட்டான்.

பத்து நாள் கழித்து, ஒரு நாள் நள்ளிரவில் மகிபாலன், அசுவபாலனுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டான். அசுவபாலன் வீடு, வாசல், வெளி எல்லாம் அவனுடைய குதிரைகள் கட்டியிருக்கும் லாயந்தான். அந்த லாயத்தில் ஒரு பக்கம் நார் கட்டில் போட்டுக் கொண்டு தூங்குவான். தூங்கும் போது, கல்யாணியின் தலைக் கயிற்றைத் தன் வலது கை மணிக்கட்டில் கட்டிக் கொண்டே தூங்குவான். அதாவது யாராகிலும் கல்யாணியைத் திருடிக் கொண்டு போக வந்தாலும் உடனே விழிப்பு ஏற்பட வேண்டுமல்லவா? அதற்குத்தான் இந்தத் தந்திரம்.

மகிபாலன் குதிரை லாயத்தின் கூரை மீது ஏறி ஒரு சிறிய ஓட்டை செய்தான். நிலா வெளிச்சம் லாயத்தினுள்ளே ஒரு பக்கமாக விழுந்தது. அந்த வெளிச்சத்தில் அசுவபாலன் எங்கே தூங்குகிறான், கல்யாணி

எங்கே நிற்கிறது என்பதெல்லாம் தெரிந்து கொண்டான். பிறகு மெள்ள இறங்கி வந்து லாயத்துக்குள் நுழைந்தான். அகவபாலன் கையில் கட்டப்பட்டிருக்கும் கல்யாணியின் கயிற்றைக் கத்திரிக்கோலால் வெட்டினான். பிறகு மிக நிதானமாகக் கல்யாணியை வெளியே பிடித்து வந்து அதன் மீது ஏறிக் கொண்டான். குதிரை மெள்ள நடந்தது. அதை அடித்தான், அப்போதும் அது ஓடவில்லை; மெள்ள நடந்தது. அது, அவன் அடித்த மாதிரியிலிருந்தே தன் முதுகின்மீது இருப்பது தன் எஜமானன் அல்ல என்று தெரிந்து கொண்டு விட்டது. பிறகு அது ஓடவா செய்யும்? அவன் எவ்வளவு தொந்தரவு செய்தும் கல்யாணி சண்டித்தனம் செய்து அவனைக் கீழே தள்ளத்தான் பார்த்தது!



குதிரைக் குளம்புச் சத்தத்தைக் கேட்டு, அகவபாலன் விழித்துக் கொண்டான். கண் திறந்து பார்த்தான். கல்யாணியைக் காணோம்! சரி, மகிபாலன் திருடிக் கொண்டு ஓடுகிறான் என்று ஊகித்து, நீலவேணிக் குதிரை மீது ஏறிக்கொண்டு துரத்தினான்.

அகவபாலன் துரத்தி வருவதைக் கண்ட மகிபாலன் பயந்து போனான். கல்யாணியை விரட்டினான். எஜமான விசுவாசமுள்ள கல்யாணி மிக நிதானமாகத்தான் ஓடிற்று. இதற்குள் நீலவேணிக் குதிரைமீது அகவபாலன் கல்யாணிக்கு வெகு நெருக்கமாக வந்துவிட்டான். இன்னும் ஒரு நிமிஷம் இருந்திருந்தால் கல்யாணியைப் பிடித்திருப்பான். அந்தச் சமயம் பார்த்து, "ஏய் முட்டாள் மகிபாலா, கல்யாணியின் வலது காதை இலேசாகத் திருகி இடது குதிகாலால் அதன் வயிற்றில் இடி!" என்றான் அகவபாலன்.

அப்படியே மகிபாலனும் செய்தான். கல்யாணி காற்றாய்ப் பறந்தது! கல்யாணி வேகமாக ஓடுவதற்கு அவ்வாறு தான் அகவபாலன் செய்வான். மகிபாலனுக்கு அதே தந்திரத்தைக் கற்றுக் கொடுத்து விட்டான். அத்துடன் அகவபாலனுடைய குரலைக் கேட்டதுமே, தன் எஜமானனுக்கு வேண்டியவன்தான் தன் முதுகின் மேல் இருப்பது என்று எண்ணிக் கொண்டு கல்யாணியும் பறந்தது. இரண்டு விநாடியில் நீலவேணியினால் எட்டிப் பிடிக்க முடியாத தூரத்துக்குச் சென்றுவிட்டது. அடுத்த சில விநாடியில் தொடுவானத்தையும் கடந்து சென்று, கல்யாணியும் மகிபாலனும் அகவபாலன் பார்வையிலிருந்து மறைந்து விட்டனர்!

கல்யாணியைப் பிரிந்த துயர் ஆற்ற மாட்டாமல், கண்ணீர் வடித்துப் புலம்பிக் கொண்டே திரும்பி வந்தான் அகவபாலன். இவன் கல்யாணியை இழந்துவிட்ட சமாசாரம் வெகு சீக்கிரத்தில் பரவியது. துக்கத்தை விசாரிக்க அக்கம் பக்கத்திலுள்ளவர்களெல்லாம் வந்தனர். வந்தவர்களிடமெல்லாம் அகவபாலன் நடந்ததைச் சொன்னான்.

அவர்கள் எல்லாம், "ஏண்டா இப்படி, முட்டாள்தனமாகக் கடைசி நிமிஷத்தில் கல்யாணி வேகமாக ஓடும் தந்திரத்தை மகிபாலனுக்குச் சொல்லிக் கொடுத்தாய்?" என்று கடிந்து கொண்டார்கள்.

"ஐயோ, நான் என்ன செய்வேன்! என் அருமைக் கல்யாணியை இந்த இரண்டாந்தர நீலவேணிக் குதிரை ஓட்டத்தில் தோற்கடிப்பதைப் பார்க்கச் சகிக்க முடியாமல் அல்லவா சொல்லிக் கொடுத்தேன்!" என்று கூறி ஓவென்று புலம்பினான்.

இதைக் கேட்டு அவர்கள் எல்லாம், "அழகுதான் போ!" என்று சொல்லிச் சிரித்தனர். ஆனால் அவர்களுக்கு என்ன தெரியும் அவன், தன் கல்யாணியின் மீது கொண்டிருந்த அன்பு எப்படிப்பட்டது என்பது!



கத்திரிக்கோல் சித்திரம்

கமலாவின் தங்கை

♦ ஸோமாஸ் ♦

வைதேகிக்கு விவாகம் நிச்சயமாகி விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை வந்திருந்தது. விவாகம் நிச்சயமாகிப் பதினைந்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. இது விஷயமாக முன்னதாகவே துரைசாமி ஐயங்கார் தமது மூத்த மாப்பிள்ளை வரதனுக்குக் கடிதம் போட்டிருந்தார். வரதனும் கமலாவும் வைதேகியின் கல்யாணத்துக்குப் போவதற்கு ஒரு மாதமாகவே தயார் செய்துகொண்டிருந்தார்கள். இன்று முகூர்த்தப் பத்திரிகை வந்து விடவே, அவர்கள் பிரயாணத் தேதி நிச்சயமாகி விட்டது.

கல்யாணப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு வரதன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

"உங்கள் அருமை மைத்துனிக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகியிருக்கிறதே! அவளுக்கு என்ன பரிசு தரப்போகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே கமலா அங்கே வந்தாள்.

"அந்தப் பரிசு இன்னதென்று இப்பொழுது நான் சொல்ல மாட்டேன். இரு நூறு ரூபாய் வரையில் திட்டம் போட்டிருக்கிறேன். நீ உன் தங்கைக்கு என்ன பரிசு அளிக்கப் போகிறாய்? சொல்ல மாட்டாயா?" என்று கேட்டான் வரதன்.

கமலா சிரித்துக்கொண்டே, "உங்கள் மைத்துனிக்கு நீங்கள் அளிக்கப் போகும் பரிசை என்னிடம் சொல்லக் கூடாது என்றால், நானும் என் தங்கைக்குக் கொடுக்கப் போகும் பரிசைப் பற்றி உங்களிடம் ஒன்றும் சொல்ல மாட்டேன்!" என்றாள் கொஞ்சலாக.

"பார்த்தாயா, என்னிடமே உன் பரிசைச் சொல்ல மாட்டேன் என்கிறாயே! இது நியாயமா?"

"பார்த்தீர்களா, என்னிடமே நீங்கள் உங்கள் பரிசைப் பற்றிச் சொல்லமாட்டேன் என்கிறீர்களே? இது நியாயமா?"

"நிஜமாகவே கேட்கிறேன், கமலா! உன் தங்கைக்கு நீ என்ன செய்யப் போகிறாய்?"

"நிஜமாகச் சொல்லுகிறேன். என் பரிசையும் சேர்த்து நீங்கள்தான் யோசனை செய்ய வேண்டும். வைதேகியின் சமர்த்துக்கு என்ன கொடுத்தாலும் தகும். அவள் நமக்குச் செய்திருக்கும் இணையற்ற உதவிக்கு நாம் பதிலாக அவளுக்கு என்ன செய்துவிட முடியும்? அவள்தான் நம்மை வாழ வைத்தவள்!" என்றாள் கமலா உணர்ச்சி பொங்கும் குரலில்.

"கமலா, மிகவும் சரியாகச் சொன்னாய். நம்மை வாழ வைத்தவள் அவள்தான்!" என்று வரதன் திடமான குரலில் கூறினான். பிறகு, "கமலா, மணி மூன்றுதானே ஆகிறது? நீ டிரஸ் செய்து கொண்டு புறப்படு. இரண்டு பேருமாகச் சைனா பஜாருக்குப் போய் வைதேகிக்கு வாங்க வேண்டிய பரிசைப் பார்க்கலாம்!" என்றான்.

"நானும் இப்போதுதான் நினைத்தேன். இன்றைக்கு உங்களுக்கு ஆபீஸ் லீவாயிருக்கிறதே. கடைப் பக்கம் போய்ப் பரிசுப் பொருளைப் பற்றி நிச்சயம் செய்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். வைதேகியின் கல்யாணத்துக்கு இன்னும் மூன்று நாட்கள்தானே இருக்கின்றன!" என்றாள் கமலா.

"ஆமாம், நீ போய்ச் சீக்கிரம் டிரஸ் செய்து கொண்டு புறப்படு. மணிக்கும் வேறு நிஜாரும் சட்டையும் போட்டு விடு!" என்றான் வரதன். கமலா அந்தப்புறம் திரும்பி இரண்டு அடியெடுத்து வைத்ததும் "இந்தா, கமலா! ஏதாவது பெரிய நாவல் இருந்தால் என்னிடம் கொடுத்து விட்டுப் போ!" என்றான் வரதன்.

"என்னத்துக்காக நாவல் உங்களுக்கு?" என்று கேட்டாள் கமலா விஷயம் புரியாமல்.

வரதன், "என்னத்துக்கா? நீ புடவைகளையெல்லாம் பெட்டியிலிருந்து எடுத்துப் பார்த்து 'ஸெலக்ட்' பண்ணிக் கட்டிக் கொண்டு வருகிறவரையில் நான் எப்படிச் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பேன்?" என்றான் சிரித்துக் கொண்டே.

"இந்தக் குறும்புத்தனம் தானே உங்களை விட்டுப் போக மாட்டேன் என்கிறது! அது காலஞ்சென்ற பழைய ஹாஸ்யமல்லவா? இதோ ஐந்து நிமிஷத்தில் டிரஸ் பண்ணிக் கொண்டு திரும்பி வந்து அந்த ஹாஸ்யத்தைப் பொய்யாக்குகிறேன்!" என்றாள் கமலா.



வீடு பார்க்க வந்தவர்:—பக்கத்து வீட்டில் பாட்டு வாத்தியார் குடியிருக்கிறார் என்கிறீரே, ஒரே உபத்திரவமாக அல்லவா இருக்கும்?

வீட்டுக்குச் சொந்தக்காரர்:—அதெல்லாம் ஒரு உபத்திரவமும் இருக்காது. அவருக்கு ஏழு குழந்தைகள் இருக்கின்றன. அவருடைய பாட்டு உங்களுக்குக் கேட்கவே கேட்காது!

வரதன், "சரி, சரி! நீ போய்ப் புடவையைக் கட்டிக் கொள்!" என்றான். கமலா உள்ளே போனாள். வரதன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். அவன் மனசில், கமலா வைதேகியைப் பற்றிக் கூறிய வார்த்தைகளே நினைவுக்கு வந்தன. "அவள் நம்மை வாழ வைத்தவள்" என்று கமலா கடைசியாகக் கூறிய வாக்கியம் அவன் மனசில் அழுத்தமாகப் பதிந்தன.


வக்கீல் குமாஸ்தா துரைசாமி ஐயங்காரின் மூத்த பெண் கமலா. அவளுக்கு அடுத்தவள் வைதேகி; கமலாவை விட ஆறு வயது சின்னவள். கமலாவைக் கஷ்டப்பட்டு எஸ். எஸ். எல். ஸி. வரையில் படிக்க வைத்தார் அவள் தகப்பனார். அப்பொழுதுதான் கமலாவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. பெண் பார்க்க வந்த வரதன் கமலாவைப் பார்த்ததும் அவளை மணந்து கொள்ளச் சம்மதித்தான். அது மாத்திரம் இல்லை. 'கையிலே காலிலே' ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி அவருக்கு ஒரு கஷ்டமும் வைக்காமல் கல்யாணம் செய்துகொண்டான். கமலாவின் கவர்ச்சிகரமான தோற்றம் அவனை அவ்வளவு தூரத்துக்குத் தயார் செய்துவிட்டது. மேலும் 'வெங்கீர் அண்டா கொண்டு வந்தால்தான் மாட்டுப் பெண் உள்ளே வரலாம்' 'ஐந்நூற்றைம்பது ரூபாய் எடையில் வெள்ளிப் பாத்திர வகைகள் செய்வதாயிருந்தால்தான் மருமகள் கால் அடி எடுத்து வைக்கலாம்' என்றெல்லாம் விபந்தனைகள் விதிக்க, கமலாவுக்கு மாமியாரோ, நாத்தனாரோ இல்லை. புக்ககத்துப் பேர் என்று சொல்லிக் கொள்ள அவளுக்கு வரதன்தான் இருந்தான்.

வரதன் பி. ஏ. பரீக்ஷையில் தேறியிருந்தான். இருநூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகத்தில் இருந்தான். ஆள் பார்ப்பதற்கு 'வாட்டசாட்ட'மாயிருப்பான். கமலாவுக்கு ஏற்ற கணவனாயிருந்தான். துரைசாமி ஐயங்கார் இதையெல்லாம் கண்டு பூரித்துப் போய் விட்டார். கமலாவுக்குக்கல்யாணம் செய்வதில் அவருக்குத் துளிக் கூடச் சிரமமே இருக்க வில்லை.

கல்யாணம் ஆன கையோடு கமலாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான் வரதன். கமலாவுக்குத் துணையாக வைதேகியையும் அனுப்பி வைத்தார் அவள் தகப்பனார். புக்ககத்தில் தனியாகப் போய்க் கமலா இருக்க வேண்டுமே என்று அவர் மனசுக்குள் இருந்த ஏக்கம்தான் காரணம். அதற்கு ஏற்றாற்போல் வைதேகியும் கமலாவுடன் போவதற்குத் தயாராயிருந்தாள். வரதனும் ரொம்ப வற்புறுத்தினான்.

வைதேகிக்கு அப்போது வயது பதினொன்று. பட்டுப் பாவாடையும் ஜாக்கெட்டும் அணிந்து அவள் பள்ளிக்கூடம் போகும் அழகே தனி அழகு! சென்னையில் மயிலாப்பூரில்தான் வரதன் ஜாகை வைத்துக் கொண்டான். முதல் காரியமாக வைதேகியைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான்.

கமலா, வைதேகி — இருவரும் நல்ல அழகிகள். கமலாவின் அழகு கொஞ்சம் தன்னடக்கம் வாய்ந்ததாயிருக்கும். சொகுசான அவள் உடம்பில் கவர்ச்சி பிரித்துப் பார்க்க முடியாமல் ஒட்டியிருந்தது. தானாக அவள் யாருடனும் கலகலப்பாகப் பேச மாட்டாள். யாரேனும் அவளோடு பேச ஆரம்பித்தால் அவர்களோடு சேர்ந்து சம்பாஷணைக்கே ஒரு தனிக் கவர்ச்சியை உண்டாக்கி விடுவாள். அந்த அடக்கத்தோடு கூடிய அழகுதான் வரதனை அவள்பால் இழுத்தது.



ஆனால், வைதேகி அப்படிப்பட்டவள் அல்ல. களங்கமற்ற அவள் பேச்சிலும் சிரிப்பிலும் ஒரு விசேஷ அழகு தோன்றி எல்லோரையும் கவர்ந்தது. அவள் அழகு, பார்ப்பவர்களைத் தன்னிடம் ஈடுபடுத்தக் கூடியது. அவள் தானாகவே எல்லோருடனும் வித்தியாசம் ஒரு சிறிதும் இன்றிச் சரளமாகப் பேசிப் பழகுவாள். வைதேகிக்கு வயது வளர வளர இந்தச் சுபாவத்தின் காந்த சக்தி வளர்ந்து கொண்டே போயிற்று.

வைதேகியுடன் பேசிச் சிரிக்கவில்லை யென்றால் வரதனுக்கு அன்றைய பொழுது வீணாகவே தோன்றும். வைதேகியையும் கமலாவையும் பார்க்கும்போது வரதனுக்கு, சலனமற்ற தடாகத்தையும், சல

சலக்கும் ரோடையையும் பார்ப்பது போன்ற உணர்ச்சிதான் உண்டாகும்.

நாலைந்து வருஷங்கள் எப்படிச் சென்றன என்றே வரதனுக்குத் தெரியவில்லை. கமலாவின் இணையற்ற அன்பும், வைதேகியின் சரள சுபாவமும் சேர்ந்து சென்று போன நாட்களையே தெரிய வொட்டாமற் செய்துவிட்டன. கமலாவுக்கு மணி பிறந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது.

வைதேகி எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தேறிவிட்டாள். இப்பொழுதெல்லாம் அவள் பேச்சில் முன்பு இருந்த பரிகாசம் இல்லை. எதற்கெடுத்தாலும் "அத்திம்பேரே!" என்று குதித்துக் கொண்டு வரும் அவள் இப்பொழுது கொஞ்சம் மாறித்தான் போயிருந்தாள்.

"கமலா, வைதேகியைப் பார்த்தாயா? மள மள வென்று வளர்ந்து விட்டாளே! இப்பொழுது அவளோடு பேசுவதற்கு எனக்குக் கூடக் கூச்சமாயிருக்கிறது. இனிமேல் உன் அப்பா அவளுக்கு வரன் தேட ஆரம்பித்து விடுவார். இல்லையா? அப்புறம் வைதேகி நம்மையெல்லாம் விட்டு விட்டுப் புருஷன் வீட்டுக்குப் போய்விடுவாள்!" என்று வரதன் அடிக்கடி கூறுவான்.


"ரொம்ப நன்றாயிருக்கிறதே! எத்தனை காலைக்குத்தான் அவள் நம்மோடு இருக்க முடியும்? வயசு வந்த பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைத்துத்தானே ஆக வேண்டும்?" என்று கமலா பதிலுக்குக் கேட்பாள்.

வரதனுக்கு வைதேகி ஊருக்குப் போய் விட்டால், தான் அந்த வீட்டில் இருக்க முடியாது என்றே தோன்றியது. அவன் அவ்விதம் எண்ணியதற்கு ஏற்ப, கமலாவுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுப் பல சிரமங்கள் உண்டாயிற்று. மணி பிறந்து ஒரு வருஷத்துக்கெல்லாம் கமலா மீண்டும் கர்ப்பந்தரித்தாள். அப்பொழுது அதில் திடீரென்று சிதைவு ஏற்பட்டு, அவள் உடம்பு மிகவும் தளர்ந்து விட்டது. அதிலிருந்து தொடர்ச்சியாக அவளுக்கு ஏதாவது சுகவீனம் ஏற்பட்டுக் கொண்டே வந்தது. இது வரையில் உற்சாகமும் ஆனந்தமுமாகச் சென்று கொண்டிருந்த வரதனின் குடும்பத்தில் மருந்தும் டாக்டர் சிகிச்சையும் வந்து நிரந்தரமாக இடம் பெற்றன. சினிமாவுக்கும் நாடகத்துக்கும் சங்கீதக் கச்சேரிக்கும் போய்க்கொண்டிருந்த வரதனும் வைதேகியும், டாக்டர் வீட்டுக்கும் 'நர்ஸிங் ஹோமு'க்கும் மருந்து ஷாப்புக்குமாகப் போய் வந்த வண்ணம் இருந்தனர்.

மாதக் கணக்கில் கமலா வைத்திய சிகிச்சையில் இருக்கவே வரதனின் மனம் அலுத்துப் போய் விட்டது. ஆபீஸுக்குப் போனால் வீட்டுக்கு எப்பொழுது போவோம் என்று முன்பெல்லாம் தினம் தவித்துக் கொண்டிருந்தது போக, இப்பொழுதெல்லாம் வீட்டுக்குப் போக வேண்டுமா என்ற கேள்வியே அவன் மனசில் எழுந்தது. அவன் என்ன செய்வான், பாவம்! அவனுக்கு அவ்வளவு தூரம் அலுப்பு ஏற்பட்டு விட்டது.

இந்தச் சங்கடமான நிலைமையில் வரதன் வீட்டில் ஒளி உண்டாக்கியவள் வைதேகிதான் என்று சொல்ல வேண்டியதில்லை. கமலாவுக்கு உடம்பு சரியில்லை என்ற காரணத்தினால் வைதேகி ஊருக்குப் போவது தடைப்பட்டு விட்டது. அத்திம்பேரைப் பார்த்தால் அவளுக்கே பரிதாபமாயிருந்தது.

துரைசாமி ஐயங்காருக்கு வைதேகியை இன்னும் அங்கேயே விட்டு வைப்பதில் இஷ்டமில்லைதான். அவள் வயது வந்த பெண்ணாகி விட்டாள். கரைக் கரையில் வளர்ந்திருக்கும் பசுங்கொடியைப் போல் வைதேகி மதர்த்து வளர்ந்திருந்தாள். வாளிப்பான அவள் உடலில் இப்போது விசேஷ வனப்பு எங்கிருந்தோ வந்து குதித்



இருந்தது. பருவம் அவளுடைய தோற்றத்துக்குப் புது மெருகு கொடுத்து விட்டது. வைதேகி எந்தப் புடவையைக் கட்டிக்கொண்டாலும், எந்த நகையைப் போட்டுக்கொண்டாலும் அந்தப் புடவைக்கும் அந்த நகைக்கும் தனி அழகு உண்டாகி விடும்.

கமலாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டதிலிருந்து வைதேகி மிகவும் அக்கறையோடு அவளைக் கவனித்துக் கொண்டாள். சமையற்காரி ஒருத்தியை வரதன் ஏற்பாடு செய்திருந்தான். பணத்தைப் பணம் என்று பாராமல் கமலாவுக்கு வைத்தியம் செய்தான்.

தினந்தோறும் ஆபீஸிலிருந்து வந்ததும் வரதன் உடைகளைக் கூடக் கழற்றாமல் கமலாவிடம் வந்து உட்கார்ந்து கொள்ளுவான்.

"கமலா, பழரஸம் சாப்பிட்டாயா? டாக்டர் வந்தாரா? மருந்து சாப்பிட்டாயா? இன்றைக்கு உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது? ரொட்டி வாய்க்குப் பிடித்ததா?" என்றெல்லாம் அன்போடு கேட்டு விட்டுப் பிறகு தானே ஒரு சாத்துக்குடிப் பழத்தை உரித்து ரஸம் பிழிந்து தருவான்.

"வைதேகி, அக்காளுக்கு 'டெம்பரேச்சர்' பார்த்தாயா? டாக்டர் வந்து என்ன சொன்னார்?" என்று கேட்பான், வரதன்.

அதற்கு வைதேகி முகமலர்ச்சியுடன், "ஒன்றும் பயமில்லை, அத்திம்பேரே! 'டெம்பரேச்சர்' இல்லை. டாக்டரும் 'ஒன்றும் கவலைப்பட வேண்டாம்' என்றுதான் சொல்லி விட்டுப் போனார்!" என்று சொல்லுவாள்.

வைதேகியின் வஞ்சமற்ற பிஞ்சு உள்ளத்தையும் கமலாவினிடம் அவளுக்கு உள்ள அன்பையும் நினைத்துப் பூரித்துப் போவான் வரதன். தன்னையும் அறியாமல் வைதேகியிடம் தன் மனம் இழுக்கப்பட்டு வருவதை வரதன் உணராமல் இல்லை. சாதாரண ஊற்றுப்போல் பெருகிய அன்பு வரவர அகண்டமான வெள்ளமாகப் பரிணமித்துப் பிரவாகமெடுத்துப் பாய்ந்தது. அவன் உள்ளம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்ட அவள் அன்பு அவனை அடியோடு நிலைகுலையச் செய்தது.

கமலாவுக்கு உடம்பு வரவரச் சீர்கேடடைந்து விடுகிறது. எந்த வைத்திய சிகிச்சைக்கும் கட்டுப்படாமல் அவள் நோய் அதிகமாகி விடுகிறது. கடைசியில் ஒருநாள் குழந்தை மணியை விட்டுவிட்டு அவள் கண்ணை மூடிவிடுகிறாள். அப்புறம் கமலாவின் ஸ்தானத்தை வைதேகி பிடித்துக் கொள்கிறாள். அப்போது வரதனின் மனம்......! இப்படி ஒரு அசட்டுக் கனவு, இல்லை, அவன் நினைவில் கூட இது இலேசாகப் படர்ந்தது. கமலாவுக்கு இது துரோகம் செய்வதாகாதா? இந்த எண்ணம் தவறானதில்லையா? என்றெல்லாம் வரதன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டு மனம் மறுகினான்.

வரதன் ஒரு மாதத்துக்கு ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலேயே இருந்து விட்டான். வைதேகியைத் தனியாகக் கமலாவைக் கவனித்துக் கொள்ளச் சொல்லாமல் தானும் அவளுக்கு உதவியாயிருக்கலாம் என்பதுதான் அவன் எண்ணம்.

"வைதேகி, நான் கமலாவைக் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ ஒருத்தியே பாவம், எல்லாக் காரியங்களையும் செய்கிறாயே! நீ போய்க் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்!" என்று வரதன் அன்போடு சொல்லுவான்.

"என்ன அத்திம்பேரே! என்னைக் கிழவி என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? எனக்கு அப்படி என்ன இந்த வீட்டில் வேலை இருக்கிறது? பாத்திரங்கள் தேய்க்கவும், வீடு பெருக்கவும் வேலைக்காரி இருக்கிறாள். சமையல் வேலையும் கிடையாது. அதற்குத்தான் சமையல்காரியை ஏற்பாடு பண்ணி விட்டீர்கள். அக்காளைக் கவனித்துக் கொள்ளுவது, உங்களுக்குச் சாதம் போடுவது இந்த இரண்டுதான் இந்த வீட்டில் எனக்கு என்று ஏற்பட்ட வேலை. அதில் ஒரு சிரமமும் எனக்கு இல்லை. அக்கா எப்படியாவது சொஸ்தம் அடைந்து எழுந்து உட்கார்ந்தால் சரி. அதுவே போதும். நீங்கள் கவலையற்றுத் தூங்குங்கள். இப்படிக் கண் விழித்தால் உடம்பு என்னத்துக்காகும்?" என்று ரொம்பக் கரிசனத்தோடு சொல்லுவாள்.

அப்போதெல்லாம் வரதனுக்கு மெய் சிலிர்க்கும்.

மாடியறையில்தான் கமலாவுக்குக் கட்டில் போட்டுப் படுக்க வைத்திருந்தது. கீழே சமையலறை இருந்தது. அங்கிருந்துதான் எல்லாம் எடுத்துச் செல்ல வேண்டும். வைதேகி அந்தச் சிரமத்தைத் துளியும் பொருட்படுத்தாமல் மாடியிலிருந்து நூறு தடவை ஏறி இறங்கினாள். அதைப் பார்த்தால் வரதனின் மனம் நெகிழ்ந்து விடும்.

முன்பு வைதேகி பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்கு வந்துவிட்டுப் பிறகு மீண்டும் உற்சாகமாக வானம்பாடி மாதிரி மாடிப் படியில் இறங்கி வெளியே போவாள். இப்பொழுது அவள் எங்கும் போவதில்லை. அதை இப்போது நினைத்துப் பார்த்து வரதன் மனம் வருந்தினான்.

ஒரு சமயம் கஞ்சியை வைதேகியினிடமிருந்து கமலாவுக்குக் கொடுக்கப் போனபோது வைதேகியின் விரல்கள் வரதன் கையைத் தீண்டின. இது சாதாரணமான சம்பவந்தான். ஆனால் இது வரதனை எவ்வளவு உலுக்கி விட்டது! அவள் சின்னஞ்சிறு பெண்ணாயிருந்த போது வைதேகியை அவன் கட்டிப் பிடித்துக் கொஞ்சி விளையாடியிருக்கிறானே! அப்போது அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லையே! இப்போது ஏற்பட்ட ஸ்பரிசத்துக்குத் தான் என்ன உணர்ச்சி!

"என்ன அத்திம்பேரே, கஞ்சி சுட்டு விட்டதா? கையைக் காட்டுங்கள்! அப்படி

உதறிவீர்களே!" என்று கேட்டுவிட்டு வைதேகி அவன் கைவிரல்களைப் பிடித்துப் பார்த்தாள். பாவம், பேதைப் பெண்! வரதன் வாய் திறக்கவில்லை. அவளை நிமிர்ந்து பார்க்கவே அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

வைதேகி, இது ஒன்றையும் அறியவில்லை. அத்திம்பேரின் மனசுக்குள் நடந்து கொண்டிருந்த மாபெரும் போராட்டத்தை அவளால் ஒரு சிறிதும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவள் பாட்டுக்குத் தன் வேலைகளைக் கவனித்து வந்தாள்.

வரதனின் ஆதரவிலும் வைதேகியின் அரவணைப்பிலும் கமலாவின் உடல்நிலை அபிவிருத்தி அடைந்து வந்தது.

இந்தச் சமயம் பார்த்துத் தானா அந்தப் பாழாய்ப் போன ஜுரம் வரவேண்டும்? ஜுரம் என்றால் சாதாரணமான ஜுரம் அல்ல. டாக்டரே அந்த ஜுரத்தைக் கண்டு திகில் அடைந்து விட்டார். அந்தக் கடும் ஜுரம் காரணமாகக் கமலா சில தினங்கள் பிரக்ஞையின்றிக் கிடந்தாள். அப்பொழுதெல்லாம் வைதேகி அவளை ரொம்பவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டாள்.

கமலா பிழைப்பாள் என்ற நம்பிக்கை வரதனுக்கு உண்டாகவில்லை. குழந்தை மணியை வைதேகி தான் பெற்ற குழந்தையைப் போல் அன்போடு கவனித்துக் கொள்ளுவதைப் பார்த்ததும் வரதனின் மனத்தில், வேண்டாம் என்று அவன் எவ்வளவு தடுக்க முயன்றாலும், அந்தப் பழைய எண்ணம் தான் மேலோங்கி நின்றது. கமலா போய் விட்டால் வைதேகி தன்னுடையவள் தான் என்ற கொடிய எண்ணமும் அவன் மனசில் தோன்றியது. அதன் காரணமாகக் கமலாவின் நோய் பீதி கூட அவனைப் பொறுத்த வரையில் குறைந்து விட்டது. தன்னிடமுள்ள மனிதத்தன்மை வேகமாகக் குறைந்து கொண்டு வருவதை அவன் உணர்ந்தான். தன்னைத் தானே அவன் இது பற்றி இடித்துக் குறை கூறிக் கொண்டான். ஆனால் அந்த எண்ணத்தை அவனால் மறக்க முடியவில்லை.

வீட்டில் வைதேகி பூங்கொடி போல் இங்குமங்கும் நடமாடுவதைப் பார்க்கும் போது அவன் எண்ணம் ஓங்கி நின்றது.

டாக்டர் வந்து கமலாவுக்கு இன்ஜெக்ஷன் கொடுத்தார். "இன்றைக்கு உங்கள் மனைவிக்குப் பிரக்ஞை வந்து விடும் என்று எதிர்பார்க்கிறேன், மிஸ்டர் வரதன்! பிரக்ஞை வந்ததும் எனக்குச் செய்தி அனுப்புங்கள்" என்று கூறிவிட்டு டாக்டர் போய் விட்டார்.

வரதன் அப்படியே சாய்வு நாற்காலியில் சாய்ந்து விட்டான். களைப்பும் அலுப்பும் அவன் முகத்தில் மேலோங்கி நின்றன. வைதேகி அவனுக்குத் தேறுதல் கூறினாள். அவள் கூறிய தேறுதல் மொழிகளுக்குத் தான் பாத்திரனா என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

எத்தனை நேரம் வரதன் அப்படி இருந்தானோ அவனுக்கே தெரியாது. அவன் கண் விழித்துப் பார்த்தபோது வைதேகி அவன் எதிரில் அஜந்தா சித்திரம்போல் நின்று கொண்டிருந்தாள். வரதன் பரபரப்புடன் எழுந்து, "வைதேகி, அக்கா எப்படி யிருக்கிறாள்? நினைவு வந்ததா அவளுக்கு?" என்று பதைத்தபடி கேட்டான்.

"அத்திம்பேரே, இனிமேல் பயமில்லை. அக்காளுக்கு நல்ல பிரக்ஞை வந்து விட்டது. டாக்டர் வந்து பார்த்து விட்டு இன்ஜெக்ஷன் கொடுத்து விட்டு இப்போதுதான் போனார். நீங்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தீர்கள். 'அத்திம்பேரே!' என்று பலமாகக் கூப்பிட்டும் எழுந்திருக்கவில்லை. உங்களுக்குத் தானாகவே பிரக்ஞை வரட்டும் என்று இருந்து விட்டேன்!" என்றாள் அந்தக் குறும்புக்காரி வைதேகி சிரித்துக்கொண்டே.

வரதனின் மனம் தெளிந்து விட்டது. கட்டிலில் கமலா எழுந்து உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் வரதனின் மனசுக்குள் வீசிக் கொண்டிருந்த புயலும் ஓய்ந்தது. அதற்குள் அங்கே வந்த குழந்தை மணி வரதனிடம் ஓடி வந்து "அப்பா!" என்று கட்டிக் கொண்டான்.

"வைதேகி, இனிமேல் பயமில்லை!" என்று வரதன் உணர்ச்சி பொங்கக் கூறினான்.

உடனே வைதேகி, குதித்துக் கொண்டு ஓடி, "அக்கா, அத்திம்பேருக்குப் பிரக்ஞை வந்து விட்டது!" என்று கூறிச் சிரித்தாள். கமலாவும் இலேசாகச் சிரித்தாள்.

வரதன், "ஆம், எனக்குப் பிரக்ஞை வந்து விட்டது!" என்று மனசுக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

பிறகு, கமலாவின் உடல் நிலையில் வேகமாக அபிவிருத்தி உண்டாக ஆரம்பித்தது.

"என்ன, உங்களைத்தானே! அதற்குள் தூங்கி விட்டீர்களா? வாருங்கள், போகலாம்!" என்று கமலா புதுப் புடவையுடன் வந்து வரதனை எழுப்பினாள். வரதன் எழுந்து கடைக்குப் புறப்பட்டான்.



"என்னப்பா, குதிரை ஜோராக ஓடும் என்று சொல்லி என்னை ஏமாற்றிவிட்டாயே! இப்போது மணியைப் பாரு!"

"யாருங்க இல்லேன்னது? குதிரை நல்லாத்தானுங்க ஓடும். இந்த வண்டிதானுங்க அது ஓடறதுக்கு இடைஞ்சலா யிருக்குங்க!"

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

59. நாடி சுத்தியின் பலன்

நாடி சுத்தி செய்வதற்குச் சத்தமில்லாத நிம்மதியான இடமாய் இருக்க வேண்டும். அப்பொழுது தான் தியானம் லயிக்கும். ஆனால் சத்தத்திற்குப் பயந்து ஜன்னல், வாசல் கதவுகளை அடைக்கக் கூடாது. நல்ல சுத்தமான காற்று வேண்டும், பூஜை அறையாய் இருந்தால் உத்தமம். ஆனால் காற்று நன்றாய் வரக்கூடியதாய் இருக்க வேண்டும். நல்ல சுகந்தமான ஊதுவத்திகளைக் கொளுத்தி வைத்துக் கொள்ளலாம். புஷ்பங்களால் அறையை அலங்கரித்து வாசனை, கவர்ச்சி உடையதாய்ச் செய்யலாம். குத்து விளக்கை எதிரில் எரியவிட்டு, அந்த ஜோதியைப் புருவ மத்தியில் தியானிக்க, சீக்கிரம் மனம் வசப்படும். மற்ற எந்தப் பொருளும் அறையில் அனாவசியமாய் அலங்கரிக்கலாகாது. அவை காற்றைக் கெடுக்கும்.

நாடி சுத்தியைக் காலை நேரத்தில் கிழக்கே பார்த்துச் செய்யவேண்டும். மாலையில் மேற்கு நோக்கிச் செய்யலாம். மற்ற நேரங்களில் வடக்கு நோக்கிச் செய்வது நல்லது. பத்மாசனத்திலேயே உட்கார முடியாதவர்கள் வெறுமனே உட்காரலாமென்று முதலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படியே எப்பொழுதும் வெறுமனே உட்காரக் கூடாது. சிலநாள் சில மாதங்களிலாவது பத்மாசனத்தைப் பழகி, அதில் உட்காரும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். பத்மாசனத்தில் தான் நாடிகளுக்குப் பலன் அதிகமுண்டு.

"நாடி சுத்தி என்றால் வெறுமனே மூச்சையிழுத்து விடுவதுதானே ! அதில் என்ன அவ்வளவு பலன் உண்டாய்விடும் ! நன்றாய் நடந்தாலே தீர்க்க மூச்சு உண்டாகிறது ! ஓடினாலும் தீர்க்கமாய் மூச்சு ஏற்படுகிறது ! மற்ற பயிற்சிகள் செய்தாலும் நன்றாய் மூச்சு இழுத்து விடப்படுகிறது. அதற்கென்று இப்படி உட்கார்ந்து செய்தால் தானா பலன் உண்டாகும்! இதுகளெல்லாம் வீண் நேரப்போக்கு சார் !" என்று ஒன்றுமே செய்தறியாத திண்ணை வேதாந்திகள் வம்பளப்பர். சாதகர்களின் மனதைக் கலைப்பர். ஆம், தீர்க்க மூச்செடுக்கப் பலவகைகள் உண்டுதான். ஆனால் மூச்சை மட்டும் தீர்க்கமாய் எடுத்து விட்டு, புஸ் புஸ் என்று தானே, மூச்சை எடுத்ததை விட வேகமாய் விடவேண்டி யிருக்கிறது. அதில் நமக்கு வேண்டிய பிராண சக்தி நிறைவதில்லை. அதிகம் செலவாகிறது என்றே சொல்ல வேண்டும்.

நாடி சுத்தி செய்யும்போது மூச்சைத் தீர்க்கமாய் ஒரே அளவாய் இழுப்பதைப் போல, அவைகளில் இழுக்க முடியாதது ஒன்று. இரண்டாவது; விடும்போது கணக்காய் இரண்டத்தனை மெதுவாய் முழுவதும் விடுகிறோம். இந்த இரண்டு முக்கியமான பாகமும் நமது விருப்பப்படி விடவும், வாங்கவும் முடிகிறது. அது போல் மற்ற நடைப் பயிற்சிகளில் செய்ய முடியாது.

நாம் சாதாரணமாகவே சரியாய்ச் சுவாசிப்பதில்லை என்றால் ஆச்சரியமாய் இருக்கும். காரணம் பல. கூன், முதுகு நேராய் நிமிர்ந்திராமை, கவனக் குறைவு, வேலையின் தொல்லை முதலியன.

நமது நுரை ஈரல்கள் மார்பின் இரண்டு பக்கங்களிலும் எலும்புப் பெட்டிக்குள் பத்திரமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் நிறைய கணக்கற்ற துளைகள், சந்துகள் இருக்கின்றன. கடற் பஞ்சைப் போன்று இருக்கும். கெட்ட ரத்தம் இருதயத்தில் வந்து, அங்கிருந்து சுத்தமடைவதற்காக இந்த நுரை ஈரல்களுக்கு வருகின்றது. இங்கு இரண்டாகப் பிரிந்து இரண்டு நுரை ஈரல்களுக்கும் பல பொடி ரத்தக் குழாய்களின் மூலமாய்ப் பரவி, பிராணவாயுவினால் சுத்தம் செய்யப்பட்டு, அதிலுள்ள கரியமலவாயு விலகி மூச்சாய் வெளியில் போகிறது. நாம் விடும் மூச்சு இவ்வாறு கரியமல வாயுவாய் விடுகிறோம். நாம் மூச்சை வாங்குவது பிராணவாயுவை. இவ்வாறு மூச்சினால் சுத்தமான ரத்தம்தான் மறுபடி இருதயத்திற்குச் செல்லுகிறது.

இதற்கு நுரை ஈரல் சுருங்காமல் நன்றாய் இருந்தால்தான் பூரணமாய் மூச்சை விடவும், வாங்கவும் முடியும். பல காரணங்களால் நாம் நுரை ஈரல்களைச் சுருங்காமல் வைத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. வேலை செய்யும்போது சரியாய்க் கவனிக்கப்படுவதில்லை. என்னதான் நிமிர்ந்து உட்கார், நிமிர்ந்து நட என்பதைப் படித்திருந்தாலும், அது ஏட்டுடன் சரி; காரியத்தில் காட்ட முடிவதில்லை. அதற்குப் பரிகாரமாகவாவது தினம் இரண்டு மூன்று தடவை நாடி சுத்தி செய்ய வேண்டியது அவசியம்.

சரியானபடி பிராண வாயுவை உட்கொள்ளாமலும், கரியமலவாயுவை வெளியில் விடாமலும் இருந்தால், ரத்தம் சரியாய்ச் சுத்தமடையாது. இப்படியே ரத்தம் சுத்தமடையாமல் மீண்டும் மீண்டும் இருதயத்திற்குச் சென்று, சரீரம் பூராவிற்கும் சென்று கொண்டே இருப்பதால், நாளடைவில் சோர்வு, நரம்பு பலவீனம், தலைவலி, மயக்கம் என்று பலவிதக் கோளாறுகள் உண்டாகிறது. இதுவே பிறகு பெரிய வியாதிகளுக்குக் காரணமாய் அமைகிறது. ஏன் ! இருதயமும் நோய் கொள்வதும் இதனாலேயே. சரியானபடி பிராணவாயு கிடைக்காமையினாலேயே இருதய நோய் உண்டாகிறது. அம்மாதிரி நோய்களுக்கெல்லாம் இந்த தீர்க்க நாடி சுத்திதான் குணம் செய்யுமே தவிர, ஓடினாலும், நடந்தாலும், பயிற்சி செய்தாலும் முடியாது. இருதய நோயாளிகளுக்கு, முதலில் டாக்டர்கள் சொல்லுவது என்ன ! "நடமாடக் கூடாது, வேலை செய்யக் கூடாது" என்பர். அப்படி ஓய்வு எடுத்துக் கொண்டால் எங்கு நடக்கவும், ஓடவும் முடியும் !

அதனால் நடப்பவர்களையோ, ஓடுபவர்களையோ மற்றப் பயிற்சியாளர்களையோ அவர்கள் வழக்கமாய்ச் செய்வதைச் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. அவைகளைத் தொடர்ந்து செய்யுங்கள். ஆனால் நாடி சுத்தியும் செய்தால்தான் சரியான மூச்சை இழுக்கவும் விடவும் முடியும்.

தவிர நாடி சுத்தியில் மூச்சை விடும்போது அதை அடக்கி மெதுவாய் விடுகிறோம். அப்படி விடும்போது மூச்சு நமக்கு அடங்கினதாகிறது. "நம்மை மீறி எதுவும் நடக்காது" என்ற ஒரு பாவனை தன்னை அறியாமல் சேருகிறது.

தவிர நாடி சுத்தி செய்யும்போது மனத்தினால் நினைப்பது என்று ஒன்று இருக்கிறதல்லவா ! அது சாதாரணமாய் மூச்சு விடுவதிலும், இழுப்பதிலும் நடப்பதில்லை. "ஆனந்தம், ஆரோக்கியம், சுகம், இன்பம் தன்னை வந்தடைகிறது" என்று மூச்சை இழுக்கும்போது நினைப்பதும், "கஷ்டம், துன்பம், நோய், இன்னல் தன்னை விட்டு விலகு



டாக்டர்:—உங்களுக்கு வேண்டியது நல்ல காற்றும் தேகப் பயிற்சியும்தான்! இதோ பாருங்கள். இந்தப் புத்தகத்தில் சுகாதாரத்தைப் பற்றி நன்றாக எழுதியிருக்கிறது!
நோயாளி:—ஐயோ! நான்தானே அந்தப் புத்தகத்தை எழுதியவன்!

கிறது" என்று மூச்சை விடும்போதும் நினைப்பதென்பது வேறெதிலும் அமையவில்லை. இப்படி நினைப்பதால் உண்டாகும் பலன் அபரிமிதமானது.

நாடி சுத்தியும் நோய்களும்

நாடி சுத்தியானது நுரை ஈரல், சுவாசாசய சம்பந்தமான சகல நோய்களுக்கும் பரம ஔஷதமாகும். அந்தந்த நோய்களுக் குண்டான ஆசனங்கள் செய்வதால், பாதிக்கப் பட்ட அவயவம் போதிய உணர்ச்சியும், விழிப்பும் அடைகிறது. இவ் விழிப்புக்கும், உணர்ச்சிக்கும் தக்க உணவை அளிப்பதே இந் நாடிசுத்தி. ஆகையினால்தான் ஆசனமும், பிராணாயாமமும் இரு கண்கள் போன்றவை என்று சொல்வது. கும்பகர்ணன் நித்திரையிலிருந்து எழுந்ததும், 'ஆகாரம் எங்கே! எங்கே!' என்று அலைவானும். அதுபோல ஆசனங்களால் விழிப்படைந்து, புத்துயிர் அடைந்த அவயவங்கள் "எங்கே பிராணன்! எங்கே சக்தி!" என்று அலையும். ஆகையால் ஆசனங்களைப் பழகியபின், கட்டாயம் நாடி சுத்தி செய்யவேண்டும்.

க்ஷயம், சுவாசகாசம் (ஆஸ்துமா) சளி இருமல், சாதாரண இருமல் முதலியவற்றிற்கென்று சில ஆசனங்கள் இருக்கின்றன. அவர்கள் அந்த ஆசனங்களை மட்டும் செய்து விடுவதில் பூரண பலன் எதிர்பார்க்க முடியாது. நாடி சுத்தியும் சேர்த்து செய்தால்தான் பூரண பலன் கிடைக்கும். சீக்கிரமாகவும் குணமாகும். பலவீன இருதய நோய்க்குமே நாடிசுத்தி மிக இன்றியமையாதது.

சிலருக்கு ஜலதோஷம் அடிக்கடி பிடிக்கும். இதற்குப் பல காரணங்களுண்டு. எல்லாவற்றிற்கும் சீதோஷ்ணத்தைச் சமன் செய்து கொண்டு போகும் சக்தி வேண்டும். அதை அளிப்பது நல்ல சுத்தமான பிராணவாயுதான். நாடி சுத்தி பழகுகிறவர்களுக்கு அடிக்கடி ஜலதோஷம், சளி, இருமல் முதலியன உண்டாகாது. அவர்களின் சுவாசக்குழல், நுரை ஈரல் எப்பொழுதும் சுத்தமாய் ஆரோக்கியமாய் இருக்கும்.

நாடி சுத்தியும் தீர்க்காயுளும்

மனிதனுடைய மூச்சையே ஆயுளாகப் பெரியோர் கணக்கிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு வேலை செய்யும் போது, அந்தந்த வேலைக்குத் தக்கபடி மூச்சு அதிகமாகவும், குறைவாகவும் செலவாகிறது. இன்னின்ன வேலைக்கு இத்தனை மூச்சுகள் அதிகம் செலவாகிறது என்றும் கணக்கெடுத்திருக்கின்றனர். சாத்விகத்தில் சிறிதாகவும், துர்மார்க்கத்தில் அதிகமாகவும், மூச்சு செலவாகிறது. மனிதன் பல வழிகளில் வீணாய் மூச்சை அதிகம் செலவு செய்து சீக்கிரம் மடிகின்றான். அதனால்தான் வாழ்க்கையிலும் அவ்வப்போது பிரம்மச்சரியம் கைக் கொள்ள வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். இதை நமக்குத் தைரியமாய் எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் இப்பொழுது யாருமில்லை. மகாத்மா காந்தி ஒருவர்தான் இதனைத் தைரியமாய், அழுத்தி, பன்முறை அவ்வப்போது சொல்லி வந்தார்கள்.

சாதாரணமாகவே நாம் எட்டு அங்குல சுவாசத்தை வெளியில் விடுகிறோம். அதில் நாலு அங்குல சுவாசம் எப்பொழுதும் நஷ்டமாய்க் கொண்டேயிருக்கிறது. சக்தி குறைந்துக் கொண்டே வருகிறது. கடிகாரத்திற்குச் சாவி இருக்கும் வரை, நேரத்தைக் காட்டும், டிக், டிக் என்று சத்தம் கேட்கும். சாவி தீர்ந்ததும் நின்று விடும். அதைப்போல நமது சக்தி, உயிர்ப்பு, பிராண இந்த மூச்சுவிடுவதில் அடங்கியிருக்கிறது. இது குறையக் குறைய நமது ஆயுளும் தேய்ந்து நின்று விடுகிறது. ஆனால் கடிகாரத்திற்கு அவ்வப்போது சாவி கொடுப்பது போல, நாம் பிராணாயாமத்தினால், நமது சக்தியை நிரப்பிக் கொண்டே வந்தால், சக்தி குறையாமல் நெடுநாள் வாழலாம். நாம் செலவிடும் சக்தியை, பிராணாயாமத்தினால் நிரப்பிகொள்ள வேண்டும். நாடி சுத்தியில் மூச்சை விடும்போது கணக்குடன் வைத்ததும் அதற்காகத்தான். இல்லையானால் பன்னிரண்டு அங்குலமென்ன பதினாறு அங்குலம் கூட புஸ் என்று மூச்சு போய் விடும். அடக்கி மெதுவாய் விடும்போது மூச்சு குறைகிறது. அதே சமயம் நமக்குத் தெரியாத பல சூட்சும விவகாரங்களை நரம்புகள் உடலில் நடத்துகின்றன. அதனால் அபரிமிதமான சக்தி நமக்கு வந்தடைகின்றது.

இந்தப் பிராண சக்தியின் உயர்வை அறிந்தால் யாரும் அதை வீணாய்ச் செலவிடமாட்டார்கள். சிலர் வெறுமனே உட்கார்ந்திருப்பர்; சிலர் பேசிக்கொண்டிருப்பர். சிலர் எழுதிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களின் கால்கள் மட்டும் வெட வெட வென்று குளிரினால் நடுங்குவதைப் போல ஆடிக் கொண்டிருக்கும். சிலருக்கு 'வலிப்போ' என்று சந்தேகிக்கும்படியும் ஆடிக் கொண்டிருக்கும். இப்படி ஆடுவது அவர்களுக்கே கூடத் தெரியாமலுமிருக்கலாம்; தெரிந்துமிருக்கலாம். இம்மாதிரியே யெல்லாம் அனாவசியமாக நாம் நம் அவயவங்களை ஆட்டுவதினால், சக்தி வீணாய் விரயமாக்கப் படுகின்றது.

நாடி சுத்தியும் தியானமும்

நாடி சுத்தி செய்து விட்டு கட்டாயம் தியானம் செய்ய வேண்டும். வெறுமனே தியானத்தில் உட்கார்ந்தால், மனம் சீக்கிரத்தில் வயப்படும். மூச்சும், நிதானமாய் நடைபெறும். சக்திக் கனல் பெருகும். சாதாரணமாய் நாம் ஓர் எண்ணத்துடன் எழுதும்போது, சற்று கவனித்துப் பாருங்கள்! மூச்சு வெகு லேசாய் நடைபெறுவது தெரியும். இந்திரியங்களை வெளியில் இயக்கியும், சிறிது மனதை வைத்து ஒரு காரியம் செய்தாலே மூச்சடங்கும் போது இந்திரியங்களை அடக்கி, மனதைப் புருவமத்தியில் வைத்து தியானத்தில் இருந்தால் மூச்சு தானாக அடங்குவதைப் பற்றிச் சொல்லவேண்டுமா! அதனால் சக்தியானது மின்சாரம் பாட்டெரியில் ஏறுவதைப் போலல்லவா ஏறும்! இதனால் மனது அடங்குவதும் அதன் பலன்களைப் பற்றியும் சாந்தி ஆசனத்தில் தியானபலனில் விவரிக்கப்பட்டிருக்கிறது. (தொடரும்)



சங்கராபரணம்

கே. ஏ. எஸ்.

சங்கீத உலகில் சங்கராபரணம் எவ்வளவு பிரசித்தி யடைந்திருக்கிறதோ அவ்வளவு பிரா பல்யமடைந்திருந்தது வேணுகான வேணுவின் பெயரும். அத்துடன் வேணுவின் வாழ்க்கையை ஒரு ஆட்டம் கொள்ளச் செய்திருக்கிறது அந்த ராகம்.

அன்று தீபாவளி. என் டாக்டர் நண்பர் சுதர்சனம் என்னை விருந்துக்கு அழைத்திருந்தார். அந்த விருந்துக்கு வேணுவும் வந்திருந்தான். போஜனத்திற்குப் பிறகு நான், டாக்டர், வேணு மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது உள்ளே யிருந்து டாக்டருடைய குழந்தை ஓடி வந்தான். அவன் கையில் ஒரு புல்லாங்குழல் இருந்தது.

"அப்பா ! நீ இதை வாசி அப்பா !" என்றான் அவன்.

சுதர்சனம் புல்லாங்குழலை எடுத்துக் கொண்டார். நான் வேண்டுமென்றே என் காதுகளைப் பொத்திக் கொண்டேன்.

சுதர்சனம் குழலை எடுத்து ஊத ஆரம்பித்தார். அபஸ்வரங்கள் அதிலிருந்து 'க்யூ' வரிசையில் கிளம்ப ஆரம்பித்தன.

"நான் ஓடிப்போய் விடுகிறேன், டாக்டர் ! என்னை இப்படித் துரத்தாதீர்கள்" என்றேன்.

சுதர்சனம் சிரித்தார். பிறகு "இதுதான் சங்கராபரணம்" என்றார்.

"ஆமாம் ; சங்கரனுடைய ஆபரணத்தைக் கண்டு நடுங்குவதைப் போல் நடுங்க வேண்டியிருக்கிறதே! அதனால் நீங்கள் கூறியது பொருந்தும்" என்றேன்.

குழந்தை அவர் கையிலிருந்த புல்லாங்குழலைப் பிடுங்கி என்னிடம் கொடுத்து, "நீ வாசி, மாமா!" என்றான்.

"அதோ இருக்கிறார் பாரு, ஒரு மாமா ! அவர் நன்றாக வாசிப்பார் !" என்று வேணுவைச் சுட்டிக் காட்டினேன்.

குழந்தை வேணுவிடம் தாவிவிட்டான். அவன் கையிலிருந்து குழலை வேணு வாங்கிய பொழுது நானும் சுதர்சனமும் அவன் குழந்தையைத் திருப்திப்படுத்துவதற்காகவே அப்படிச் செய்கிறானென்று எண்ணினோம்.

சில வினாடிகளில் அதிலிருந்து கிளம்பிய நாதம் எங்களைப் பரவசப்படுத்தியது.

"பார்த்தீர்களா ! இதுதான் சங்கராபரணம் !" என்றேன் நான்.

அது வேணுவின் காதில் விழுந்திருக்க வேண்டும். அவன் வாசிப்பதை நிறுத்தி விட்டு என்னை உற்று நோக்கினான். "ஆம் ! சங்கராபரணம் தான் !" என்று கூறி விட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

டாக்டர் சுதர்சனம், மௌனமாக விருந்த வேணுவிடம், "வேணு ! எனக்கும் குழலூதக் கற்றுக் கொடுக்கிறாயா !" என்றார்.

"வேண்டாம், வேணு ! வேண்டாம் ! உன் பெயரைப் பாழ்படுத்தி விடுவார். அவர் டாக்டராக இருப்பதே போதும் !" என்றேன்.

வேணு மௌனத்தில் ஆழ்ந்தான். சில வினாடிகளுக்குப் பின்பு, "என்ன கேட்டீர்கள், டாக்டர்! உங்களுக்குக் குழலூதக் கற்றுக் கொடுக்க வேண்டுமா ! வேண்டாம், டாக்டர் ! இந்த வித்தை வேண்டவே வேண்டாம். என் வாழ்க்கையைப் பாழ்படுத்தியதுடன் இது போகட்டும் ! சனியன் ஒழியட்டும் !" என்றான் வேணு. பிறகு தன் கையிலிருந்த குழலைத் தூர வீசி யெறிந்தான்.

"வேணு ! துயருற்றவர்கள் சாந்தியை அடையாமல் இருக்க முடியாது. நீ கவலைப்படாதே ! அப்படி பரிகாரம் செய்ய முடியாத துயரம் உன் வாழ்வில் எப்படி ஏற்பட்டது ! எப்பொழுது ஏற்பட்டது !" என்று கேட்டார் டாக்டர் சுதர்சனம். அப்பொழுது அவர் குரல் கனிந்திருந்தது.

"டாக்டர் சுதர்சனம் ! உடல் வியாதிக்கு மருந்துண்டு. மனோ வியாதிக்கு மருந்தேது ! ஆண்டவன் எனக்கு இன்று ஒரு குறையும் வைக்கவில்லை. வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் நான் சங்கீதம் கற்கவில்லை. ஆனால் என் வித்தையே என்னை உருக் குலைத்தது என்று நினைக்கும் பொழுது என்னால் தாங்க முடியவில்லை" என்றான் வேணு.

"வேணு ! நடந்ததை விளக்கமாகத்தான் சொல்லேன்" என்றார் சுதர்சனம்.

"சொல்கிறேன். கூறிக் கொண்டே இருக்கிறேன்! முடிவற்ற துயரை யாரிடம் சொன்னால் என்ன !" என்று கூறி விட்டு வேணு தன் கதையைச் சொல்லத் தொடங்கினான் :

"என் தகப்பனர் என்னைப் பிரிந்த பொழுது நிறைய நிலபுலன்களை விட்டுத்தான் சென்ருர். அதனல் 'வறுமை' என்ருல் என்ன என்பதே தெரியாமல் என் காலம் கழிந்து வந்திருக்கிறது.

"சிறு வயதிலிருந்தே எனக்குச் சங்கீதம் என்ருல் உயிர். எட்டு வயதிற்குள் குழலூதக் கற்றுக்கொண்டு பதினெட்டு வயதிற்குள் பிரமாதமான தேர்ச்சியும் பெற்று விட்டேன் என்று சொல்லலாம். மாந்தோப்பு, ஆற்றங்கரை இவைகள்தான் எனக்குச் சபாமண்டபங்கள். பக்ஷிகளும் மிருகங்களும்தான் என் பாட்டுக்கு ரஸிக மகா ஜனங்களாக விளங்கினர்கள்.

"எனக்குப் பதினேந்து வயது நடந்து கொண்டிருந்த பொழுது நாராயணன் எனக்குப் பரிச்சயமானன். அவனுடைய தகப்பனர் எங்கள் ஊர் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் வேலை பார்க்கும் நிமித்தம் அங்கு வந்தார். நாராயணனுடைய சகோதரிதான் விஜயம் எனப்படும் விஜயலக்ஷ்மி.

"எங்களுக்கு ஐந்தாறு வீடுகள் உண்டு. என்னுடைய நிர்ப்பந்தத்தின் பெயரில் என் தாயார் ஒரு வீட்டை நாராயணனுடைய குடும்பத்திற்காக ஒழித்துக் கொடுத்தாள்.

"நாராயணனும் நானும் வெகு அன்யோன்யமாகப் பழகி வந்தோம். எங்களிருவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான் இருக்கும்.

"குழலை நான் கையிலெடுத்தால் நாராயணன் என் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பான். ஒரு நாள் 'வேணு எனக்குக் குழலூதக் கற்றுக் கொடுக்கிரயா!' என்று கேட்ட நாராயணனிடம் 'ஆகட்டும்' என்றேன்.

"அதன் பின்பு சிக்ஷை தவருமல் நடந்தது. மூன்று வருஷங்களுக்குள் அவனும் நன்ருகத் தேர்ச்சி பெற்று விட்டானென்றே சொல்ல வேண்டும். ஆனல் அவன் வாசிக்கும் பொழுது மட்டும் எந்தக் காரணத்தினலோ என்னல் பூர்ணமாகக் கானத்தை ரஸிக்க முடியவில்லை.

"விஜயமும் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவாள். என் மனதிலோ அவள் ஒரு நிரந்தர ஸ்தானத்தைப் பெற்று விட்டாளென்றே சொல்லலாம்.

"அவளை விட அழகிகள் இந்த உலகத்தில் இல்லையென்று சொல்லவில்லை. ஆனல் எனக்கு மட்டும் அவள் மீது தனி அன்பு ஏற்பட்டது. அதன் காரணம் ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

"ஈச்வரன் அவளுக்குக் குயில் போன்ற சாரீரத்தை யளிக்கவில்லை. ஆனல் அவளுடைய ஞானம் சிக்ஷையின்றியே அபாரமாக இருந்தது.

"எங்கள் ஊர் கிராம முன்சிப் வீட்டில் ஒரு முறை பாம்பு ஒன்று தோன்றி யாவரையும் கலக்கியது. அவர் அலறிப் புடைத்துக் கொண்டு பாம்பாட்டியைக் கூட்டிக் கொண்டு வர ஓடினர். அது அவர்கள் கையில் அகப்படாமல் பக்கத்திலிருந்த வளை ஒன்றில் புகுந்து கொண்டு விட்டது.

"நாங்களெல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். பாம்பாட்டி மகுடியின் மூலம் பாம்பை வளையிலிருந்து வரவழைக்கச் செய்த பிரயத்தனங்களெல்லாம் பயனற்றுப் போன பொழுது நாராயணன் தன்னுடைய புல்லாங்குழலை எடுத்து ஊத ஆரம்பித்தான். பலன் பூஜ்யம்தான்.

"அப்பொழுது அங்கிருந்த விஜயம் உடனே என்னிடம் 'உங்கள் சங்கீதத்திற்காவது அது கட்டுப்படுகிறதா, பார்க்கலாமே!' என்ருள். மற்றவர்களும் என்னை வற்புறுத்தவே நான் சங்கராபரண ராகத்தை வாசிக்க ஆரம்பித்தேன். எனக்கு மிகவும் பிடித்த ராகம் அதுதான்.

"பத்து நிமிஷங்களுக்குள் நான் என்னையே மறந்து விட்டேன். 'ஒருவரும் செய்யாத காரியத்தை நாம் செய்ய வேண்டும்' என்ற நிர்மாணம் மனதில் உருவாகி விட்டால் எங்கிருந்தோ வரும் ஒரு பலம் நம்மைக் கௌவிக் கொள்கிறது.

"என் முன்னல் அந்த ஸர்ப்பம் படமெடுத்து ஆடத்தொடங்கியது. சரியான சமயத்தில் பாம்பாட்டி அதைப் பிடித்துக் கூடைக்குள் போட்டுக் கொண்டு விட்டான்.

"ஊர் ஜனங்கள் என்னையும் என் சங்கீதத் திறமையும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். விஜயம் நாராயணனிடம் 'அண்ணு, நீயும் சுமாராக வாசிக்கிருய். ஆனல் இவருடைய தெய்வ கானத்திற்கு அது ஒரு பொழுதும் சமமாகாது' என்று கூறி விட்டு என்னைப் பார்த்தாள்.

"உண்மையைச் சொல்கிறேன். அது முதல் நான் ஒரு புது மனிதனகி விட்டேன். எப்பொழுதும் குழலும் கையுமாகத்தான் இருப்பேன், கிருஷ்ண பரமாத்மாவைப் போல்.

"விஜயம் ஒரு நாள் அவசர அவசரமாக என்னிடம் வந்தாள். வழக்கம்போல் அன்றும் என் அறைக்குள் உட்கார்ந்து கொண்டு நான் குழலூதிக் கொண்டிருந்தேன். கானத்தில் லயித்த என் கண்கள் மூடியபடி இருந்தன.



"கணைப்புக் குரலிலிருந்து விஜயம் அங்கு வந்திருக்கிருளென்று தெரிந்து கொண்டேன்.

"வாசிப்பதை நிறுத்தி விட்டு 'என்ன விஜயம்!' என்று கேட்டேன். என் கண்கள் மட்டும் மூடியபடியே இருந்தன.

"'நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா!'

"'உனக்குத் திடீரென்று ஏன் இந்தச் சந்தேகம் வந்தது, விஜயம்!'"

"'ஆதாரம் இருப்பதால்தான் வந்தது. என்னை விட இதை அதிகமாக நேசிக்கிறீர்கள், அப்படித்தானே!'

"நான் அப்பொழுதும் கண்களைத் திறக்கவில்லை. 'இல்லையென்று மறுக்கவில்லை, விஜயம்! இரு பொருள்கள் என் வாழ்விற்கு அவசியமானவை.

ஒன்றை மனதார நேசிக்கிறேன். மற்றொன்றை உடன் பிறந்தவளை நேசிப்பதைப் போல் நேசிக்கிறேன்.......'

"விஜயம் திரும்பிப் போய் விட்டாள். நான் மீண்டும் குழலைக் கையிலெடுத்துக் கொண்டேன். எவ்வளவு நேரம் சங்கீதத்தில் ஆழ்ந்திருந்தேனோ, தெரியாது. 'வேணு......' என்ற குரலைக் கேட்டுச் சுய உணர்வு பெற்றேன். நாராயணன் என் எதிரே நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் குரோதம் தொனித்தது.

"'நல்ல மனிதனப்பா! எத்தனை நாளாக இந்த வித்தை யெல்லாம் கற்றுக் கொண்டாய்!'

"'வித்தையா! என்ன நாராயணா! நீ என்ன சொல்கிறாய்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!' என்றேன்.

"'எப்படி விளங்கும்! ஒரு பெண்ணின் வாழ்க்கையையே பாழாக்கிவிட்ட பின்பு நீ ஒன்றும் அறியாதவன்போல் நடிக்கிறாய். உனக்குப் பிடித்த அதோ அந்த மேஜைமீது உள்ள போட்டோவில் பிரகாசிக்கும் நாரிமணியையே மணந்துகொள். நீ அப்படிச் செய்யவும் தயங்க மாட்டாய். அதைக் கண்களால் விஜயம் பார்க்கக் கூடாதென்று நினைத்தே கடவுளும் கருணை கூர்ந்து எங்களை இன்றே சேலத்திற்கு அனுப்புகிறார். நீ விஜயத்தைச் சகோதரிபோல் நேசித்துக் கொண்டே இரு. நாங்கள் போய் வருகிறோம்.!' என்று கூறி விட்டு நாராயணன் வெளியே போய்விட்டான்.

"மௌனமாகத் திரும்பிப் பார்த்த நான் ஆச்சரியத்தினால் திடுக்கிட்டு நின்றுவிட்டேன். அந்தப் படம் அங்கே எப்படி வந்தது! கிராம முன்சீப்பின் அருமைப் புத்திரி தங்கத்தின் போட்டோ என் மேஜையை அடைந்த விதம் எனக்கு விளங்காத ஒரு புதிராகவே இருக்கிறது. ஆனால் அதன் மூலம் விஜயத்தின் கோபத்திற்குக் காரணம் தெரியவந்தது. எப்பேர்ப்பட்ட பிசகு செய்து விட்டேன்!

"நான் குழலை மனதில் வைத்துக்கொண்டு சொல்ல அவள் தங்கத்தை நான் காதலிப்பதாக



நினைத்துக் கொண்டு'விட்டாள். உடனே சென்று அவளிடம் விவரமாக முழு விஷயத்தையும் கூற நினைத்துக் கிளம்பினேன். அந்தப் பாழாய்ப் போன விதி அப்பொழுதும் சதி செய்தது.

"உள்ளேயிருந்து என் தாயாரின் அலறல் என் காதில் விழுந்தவுடன் பதறியடித்துக் கொண்டு உள்ளே சென்றதும் நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்க வைத்தது.

"பெரியதொரு நல்ல பாம்பு அங்கே காட்சியளித்தது. 'வேணு, நீ இத்தனை நேரம் புல்லாங்குழல் வாசித்ததில் வந்த ஆபத்து இது. எங்கிருந்தோ வந்திருக்கிறது. இன்னும் கொஞ்ச நாழி இதைக் கட்டுப்படுத்திவை. நான் பாம்பாட்டியைக் கூட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்' என்று கூறி விட்டு ஓடினாள் என் தாயார்.

"பாம்பை அகற்றியபின் நாராயணனைத் தேடிக் கொண்டு கிளம்பிய என்னிடம் என் தாயார் 'அவர்களெல்லோரும் இந்நேரம் ரயிலேறி இருப்பார்களே! நான் போகும்பொழுதே வண்டியில் அவர்களெல்லோரும் போய்க் கொண்டிருந்தார்கள்'' என்றாள்.

"மௌனமாக என் அறைக்குள் வந்தேன். மறுபடியும் என் மேஜை மீதிருந்த படத்தின் மேல் என் பார்வை விழுந்ததும் பழைய நினைவுகள் குமுறிக் கொண்டு வந்தன. ஏதோ வெறி கொண்டவன் போல் என் கையிலிருந்த குழலை வீசி எறிந்தேன். எந்தக் குழலோசையால் விஜயம் இழுக்கப் பட்டாளோ அந்தக் குழலோசையே அவளுக்கும் எனக்கும் பரம சத்ருவாகியது. எங்கள் வாழ்க்கையை ஆனந்தமயமாக்க வேண்டிய சங்கீதம் எங்களைத் துயரக் கடலில் ஆழ்த்தியது.

"அன்றைய தினத்திலிருந்து சந்தோஷம் என்பது என் வாழ்க்கையில் இன்றுவரை தலை காட்டவில்லை.

"என் தாயார் எனக்கு மணம் செய்விக்க அவளால் முடிந்த மட்டும் முயன்றாள். நான் மறுத்து விட்டேன். விஜயத்தைவிட அழகில் சிறந்த பல பெண்கள் என்னை மணக்க முன் வந்தார்கள். என்னுடைய இருதயத்தில் விஜயம் நித்யவாசம் செய்கிறாள். அவளை விரட்டிவிட்டு அந்த ஸ்தானத்தில் அமர்ந்து கொள்ள ஒரு பெண்ணுக்கும் இடம் இல்லை என்று கூறி விட்டேன்.

"பல வருஷங்களாகக் கையினால் தொடாத குழலை இன்று குழந்தையைத் திருப்தி செய்யும் பொருட்டு எடுத்து வாசித்தேன். ஆனால் என்னையும் மீறி நான் சங்கராபரண ராகத்தை வாசிக்க ஆரம்பிக்கவே மறுபடியும் பழைய நினைவுகள் குமுறிக்கொண்டு வருகின்றன.

"விஜயம் இன்று எங்கே இருக்கிறாளோ! அவளைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. அதற்கான முயற்சிகளையும் நான் எடுத்துக் கொள்ளவில்லை. அவள் ஒருவனை மணந்து கொண்டிருப்பாள். என் அன்னையின் காலத்திற்குப் பிறகு, நான் கிராமத்திலுள்ள வீட்டையும் நிலபுலன்களையும் விற்றுவிட்டு அதை விட்டே கிளம்பிவிட்டேன். மனச் சாந்தியின் பொருட்டுச் சில சமயங்களில் பாடுகிறேனே ஒழிய பெயரும் புகழும் பெற வேண்டுமென்ற எண்ணத்தாலல்ல.

"இப்பொழுது சொல்லுங்கள் 'டாக்டர் சுதர்சனம்! வாழ்க்கையில் இன்பம் எனக்குக் கிட்டுமா!'' என்று கூறி முடித்தான் வேணு.

அப்பொழுது வேணுவின் முகத்தில் சோகம் கலந்த புன்னகை அரும்பி மறைந்தது.

* * *

இரண்டு மாதங்கள் கழிந்தபின் ஒருநாள் காலை கதர்சனத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

"சங்கராபரணம் மீண்டும் வேணுவின் வாழ்க்கையில் குறுக்கிட்டு அவன் வாழ்க்கையை......" என்று நிறுத்தினார் டாக்டர்.

"என்ன! விவரமாகச் சொல்லுங்கள்......" என்றேன் ஆவலுடன்.

"நான் ஒரு கேஸ் விஷயமாகச் சென்னைக்குப் போயிருந்தேனல்லவா! அது ஒரு வக்கீல் வீடு. அவர் தாயார் படுத்த படுக்கையில் இருந்தாள். எனக்கும் வேணுவுக்கும் பங்களாவில் ஒரு அறை பிரத்தியேகமாக ஒழித்துக் கொடுக்கப்பட்டது. சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் அநேகமாக நாங்கள் அங்கு இருக்கவே மாட்டோம்.

"போன வெள்ளிக்கிழமை அந்தி மயங்கும் நேரத்தில் கடற்கரையிலிருந்து திரும்பி வந்தோம்.

"பங்களாவை அடைந்ததும் காவற்காரன் 'உங்களைத்தான் தேடிக் கொண்டிருந்தோம்' என்றான். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"ஆனால் விஷயம் ஒன்றும் பிரமாதமானதல்ல. உள்ளே சென்றதும் வக்கீலின் தாயார் என்னிடம், 'என்ன டாக்டர்! உங்கள் கூட வந்திருப்பவர் பெரிய சங்கீத வித்வானாமே! எங்கே அவர்! எனக்கு இத்தனை நாளாகத் தெரியாதே! நம் வீட்டுத் தோட்டக்காரன் சொன்னான்' என்றாள் வியப்புடன்.

"'ஆம்! என் கூட வந்திருப்பவர் சங்கீத வித்வான்தான்' என்று கூறிக்கொண்டே வேணுவைப் பார்த்தேன் நான்.

"'அதற்குச் சொல்லவில்லை, டாக்டர்! இன்று வெள்ளிக்கிழமை ஆயிற்றே! தேவியின் பேரில் ஒரு கீர்த்தனை பாடச் சொல்லவேண்டுமென்ற என் எண்ணம்' என்று கூறிக்கொண்டே வேணுவைப் பார்த்தாள் அந்த அம்மாள்.

"வேணு தயங்கவில்லை. 'அதற்கென்ன பாடினால் போகிறது' என்றான்.

அம்பாள் ஸன்னிதியில் விளக்கேற்றி வைக்கப்பட்டது.

வேணு உட்கார்ந்தான்.

"'சங்கராபரண ராகத்தில் 'ஸரோஜதள' என்ற கீர்த்தனையைப் பாடுங்கள். அது எனக்கு மிகவும் பிடித்த பாட்டு' என்றாள் வக்கீலின் தாயார்.

"வேணுவின் உடம்பு ஒருதரம் குலுங்கியது. இரண்டு விநாடிகள் யோசித்தான். பிறகு பாட ஆரம்பித்து விட்டான்.

"பக்திப் பெருக்காலோ அல்லது பழைய நினைவுகளின் அதிர்ச்சியாலோ அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. கீர்த்தனையை முடித்ததும் இடத்திலிருந்து எழுந்தான் வேணு.

"'மிஸ்டர் வேணுகோபாலன்!' என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். யாரோ ஒரு புதிய மனிதர் பின்னால் நின்று கொண்டிருந்தார்.

"வேணு அவரை உற்று நோக்கினான். பிறகு மெல்லிய குரலில் 'நாராயணனா!' என்றான்.

"'ஆமாம் வேணு! நாராயணன்தான்! விஜயத்தின் அண்ணன்!' என்று கூறி வக்கீலின் தாயார் படுத்துக் கொண்டிருந்த கட்டிலுக்கு அருகே சென்றார் நாராயணன்.

"'உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது, அம்மா! இன்று காலையில்தான் பெங்களூரிலிருந்து எஜமானர் வந்தார். உங்களுக்கு உடம்பு சரியாக இல்லையென்று தெரிந்ததும் பார்ப்பதற்கு வருகிறேன்' என்றார்.

"'தேவலை, நாராயணா! இவர் உனக்கு நண்பரா!' என்று வினவினாள் அவள் வேணுவைக் கட்டிக்காட்டி.

"'இல்லை. எனக்கு மாப்பிள்ளை முறை. என் தங்கை விஜயத்திற்குக் கணவனாகப் போகிறார்."

"வேணுவின் உடல் மீண்டும் குலுங்கியது.

"'நான் பிற்பாடு வருகிறேன்' என்று அந்த அம்மாளிடம் கூறிய நாராயணன், 'வேணு, வா!' என்றழைத்தார்.

"'டாக்டர்! நீங்களும் வாருங்கள்!' என்று வேணு கூறவே நானும் அவர்களைப் பின் தொடர்ந்தேன்.

இரண்டு மூன்று தெருக்களைக் கடந்து சென்ற பின்பு ஒரு சந்துக்குள் நுழைந்தோம். நாராயணன் முன்னே வழி காட்ட நானும் வேணுவும் பின்னே சென்றோம்.

"ஒரு வீட்டிற்குள் நுழைந்த நாராயணன் வெளியே நின்றபடியே, 'விஜயம்! விஜயம்!' என்று இரண்டு முறை கூப்பிட்டார்.

"'என்ன அண்ணா!...' என்று கூறிக்கொண்டே ஒரு பெண்மணி வெளியே வந்தாள்.

"அவளுக்குச் சுமார் இருபத்திரண்டு வயது இருக்கலாம். வேணுவின் பக்கம் திரும்பியதும் அவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"'விஜயம்! என்ன வியப்புடன் இப்படிப் பார்க்கிறாய்! நம் வேணுதான்! உன் வாழ்வில் ஒளி



"கோபாலன் மட்டும் என் கண்ணில் படட்டும். அவனை நான் என்ன செய்கிறேன், பார்......"

"ஏன் உனக்கு அவன்மேல் அவ்வளவு கோபம்?"

"ஏனா? என் வீட்டுச் சமையல்காரியைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டான், போக்கிரி! ஆகவே, வேறு வழியில்லாமல் நான் இப்போது என் மனைவி சமைப்பதையே சாப்பிட வேண்டியிருக்கிறது!"

பிறந்துவிட்டது!'' என்று கூறியவாறே எங்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

''மூவரும் உள்ளே சென்றோம். சிறிய வீடுதான் என்றாலும் மிகவும் சுத்தமாக இருந்தது. வேணு வின் போட்டோ ஒன்றும் சுவரில் மாட்டப் பட்டிருந்தது.

''நாராயணன் ஒரு பெஞ்சைக் காட்டி எங்களை உட்காரச் சொன்னார். பிறகு எங்களிடம் 'சங்கராபரணம்தான் வேணுவையும் விஜயத்தை யும் பிரித்தது. அதுவே அவர்களைச் சேர்த்தும் வைத்துவிட்டது' என்றார்.

பிறகு வேணுவிடம் நாராயணன் கூறி வந்த விவரங்கள் இதுதான் :—

'' 'நீயும் விஜயமும் பிரிக்கப்பட்டது என்னால் தான். நீ விஜயத்தின்மீது கொண்டிருக்கும் காதல் உண்மைதானா என்று பரீட்சிப்பதற்காகத் தங்கத் தின் படத்தை மேஜைமேல் வைத்ததும் விஜ யத்தை அங்கு அனுப்பியதும் நானேதான், வேணு! அசட்டுத்தனமாக நடந்து கொண்டதற் காக என்னை மன்னித்துவிடு. சில காலத்திற்கு முன்பு உன்னைப் பற்றிக் கேள்விப்பட்ட பொழுது உனக்கு இன்னும் மணமாகவில்லை என்று தெரிந்து கொண்டேன். விஜயத்தைப் பற்றி எதையும் சொல்ல நான் தயாராக இல்லை. உன்மேல் அவள் கொண்டிருக்கும் அன்பு தெய்வீகமானது. என்றைக்காவது உன்னை அடைவேன் என்று எண்ணி அவள் தெய்வத்தைப் பிரார்த் தித்தது வீணாகவில்லை.

'நீங்கள் ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருந்த அன்பு சாதாரணமானது என்று நான் நினைத் தேன். அது தவறு. என்னை மன்னித்து விட்டு என் தங்கையை ஏற்றுக் கொள்வாயா, வேணு!'

''வேணு மௌனமாக இருக்கவே, நாரா யணன் என்னிடம் 'எனக்காக நீங்கள் வேணுவி டம் கூறக் கூடாதா!' என்றார். அவர் குரலில் ஏக்கமும் பயமும் கலந்திருந்தன.



''என்ன சௌந்தரம், உன்னோடு பிச்சுக்காரி சேச்சே! முடியவே முடி யாது. எல்லாரும் நம்மையே பார்ப்பார்கள்......நான் தனியாகப் போனாலே என்னை எல்லாரும் முறைத்துப் பார்க்கிறார்கள். நீ வேறு என்னோடு வந்தால் வேறு வினையே வேண்டாம்......''

''வேணுவுக்கு ஆனந்தம் பிடிகொள்ளவில்லை. அதனால் அவனால் வாய் திறந்து பேச முடியவில்லை. தவம் பலித்த பின் பேச ஓடுமா! நான் 'ஏன் வேணு! இப்பொழுதாவது எனக்குக் குழலூதக் கற்றுக் கொடுப்பாயோ!' என்று கேட்டேன்'' என்றார் சுதர்சனம்.

சுதர்சனம் இதைச் சொன்னவுடன், ''டாக்டர்! நீங்கள் சங்கராபரணத்துக்குச் சஸ்திர சிகிச்சை செய்ய வேண்டாம். நீங்கள் பேசாமல் இருந் தாலே போதுமானது!'' என்றேன். இதைக் கேட்ட டாக்டர் 'கட கட' வென்று சிரித்தார்.

இன்றும் சங்கராபரணம் வாசிப்பதில் வேணு வுக்கு ஈடு வேணுதான் என்று சொல்கிறார்கள்.

சரியான ஜோடி!

மங்களம் சம்பந்தத்துக்கு ஏற்ற மனைவி. இருவரையும் போலச் செட்டாகக் குடித்தனம் நடத்த இனிமேல்தான் இன் னொருவன் பிறந்து வர வேண்டும். அவ் வளவு சிக்கனமாக அவர்கள் குடித்தனம் நடத்தி வந்தார்கள்.

அன்றொரு நாள் இரவு எட்டு மணி சுமாருக்குச் சம்பந்தம் எங்கோ அவசர மாகப் புறப்பட்டுப் போகவேண்டி யிருந் தது. கொஞ்ச தூரம் சென்றதும் சம்பந் தத்துக்கு, 'நம் அறையின் விளக்கை அணைத்தோமா, இல்லையா?' என்ற சந் தேகம் வந்து விட்டது. 'திரும்பி வரும் வரை விளக்கு அநாவசியமாக எரிந்து கொண்டிருந்தால் கை நஷ்டந்தானே! ஆமாம், ஒரு வேளை அவள் அணைத்திருக் கலாம் அல்லவா?' என்று மாறி மாறி யோசனை செய்தான். அடுத்த கணமே யோசனை செய்து பொழுதை வீணாக்கு வது இன்னும் பெரிய தவறு என்ற ஞானோதயம் ஏற்படவே அவன் வீட்டை நோக்கி வேகமாக விரைந்தான்.

வாசற் கதவைத் தட்டி, ''அடியே!'' என்று அழைத்தான். ''என்ன நுனியே!'' என்று கேட்டுக்கொண்டே அவன் மனைவி வாசற்கதவைத் திறக்க வந்த பொழுது, ''வேண்டாம், வேண்டாம்; கதவைத் திறக்க வேண்டாம். அடிக்கடி கதவைத் திறந்தால் கீல் தேய்ந்து விடும். என் அறையின் விளக்கை அணைத்திருக் கிறேனா, பார்!'' என்றான்.

''அட கர்மமே! இதற்காகவா நடந்து வந்தீர்கள்? நீங்கள் அந்தண்டை போன துமே நான் விளக்கை அணைத்து விட் டேனே! இவ்வளவு தூரம் நடந்து வந்து உங்கள் கால் செருப்புத் தேய்ந்ததுதான் மிச்சம்!'' என்றாள் அவன் சகதர்மிணி.

''அதைப் பற்றிக் கவலைப்படாதே! நான் திரும்பும் பொழுதே செருப்பைத் தூக்கிக் கையில் எடுத்துக் கொண்டுதான் நடந்து வந்தேன். என்னை அவ்வளவு முட்டாள் என்று எண்ணி விட்டாயா?'' என்று சொல்லித் தன் ஜோலியைக் கவ னிக்கச் சென்றான் சம்பந்தம். —அஷ்யம்.

மீனாக்ஷியின் மாட்டுப்பெண்


ஏ. இந்திரா

பொழுது புலரும் சமயம். காரிருள் முற்றிலும் நீங்கவில்லை. கறுகறுப்புள்ள ஒன்றிரண்டு கோழிகள் மட்டும் கூவி அரைத் தூக்கத்தில் இருந்த கும்பகர்ணனின் வழி வந்தோரைப் போர்வையை இன்னும் இழுத்துப் போர்த்திக் கொள்ளுமாறு செய்தன. மரத்திலிருந்த பறவைகளில் சில மரத்தில் உட்கார்ந்தவண்ணம் சலசல வென ஒலி செய்து கொண்டிருந்தன. அந்தக் குக்கிராமத்தை அணைத்துக் கொண்டு ஓடிய ஆற்றின் தெளிந்த நீரில் சந்திரனின் பிரதிபிம்பம் தெரிந்து கொண்டிருந்தது. ஆற்றைக் கடந்து குளிர்ந்த நீர்க்காற்று வேறு வீசிக் கொண்டிருந்தது.

ஆற்றை நோக்கி அந்நேரத்தில் விடுவிடு வென்று நடந்து கொண்டிருந்த ஓர் உருவம், குளிரைத் தாங்காமல் துணியைத் தன் தலையைச் சுற்றி இழுத்துப் போர்த்திக் கொண்டது. ஆற்றை அடைந்ததும் அங்கேயிருந்த பாறுங்கல்லின் மேல் தன் கையிலிருந்த துணிகளையும், குடத்தையும் வைத்து விட்டு, வேகமாக வந்த களைப்புத் தீரப் பெருமூச்சு விட்டுக் கொண்டே சுற்றிலும் ஒரு முறை பார்த்தது. அந்த உருவம் வேறு யாரும் இல்லை. அவள் தான் ருக்மிணி. அவள் சாவதானமாகத் துணிகளை எடுத்துத் தோய்க்க ஆரம்பித்தாள்.

பொழுது விடிய விடிய நாலா பக்கத்திலிருந்தும் கிராமத்தின் பெண்கள் ஆற்றை நோக்கி வர ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் ஆற்றங்கரை முழுவதும் துணியை ஓங்கிக் கல்லில் அறைந்து தோய்க்கும் சத்தத்தால் எதிரொலித்தது.

நேரம் கழித்து எழுந்த மீனாக்ஷி அம்மாள், அவசர அவசரமாகத் துணிகளையும் குடத்தையும் எடுத்துக் கொண்டு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி வந்தாள். ருக்மிணி அந்த ஓரே நல்ல பாறுங் கல்லில் துணிகளைத் தோய்ப்பதைப் பார்த்ததும் அவளது முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது. ருக்மிணியின் அருகே யிருந்த மேடும் பள்ளமுமான கல்லின் மேல் தன் துணிகளை வைத்துத் தோய்க்க ஆரம்பித்தாள்.



எல்லோரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த போது, மீனாக்ஷியும், அவள் அருகேயிருந்த ருக்மிணியும்மட்டும் வாயைத் திறக்கவேயில்லை. ருக்மிணி தன் வேலையின் மேலேயே கவனமாயிருந்தாள். சிறிது நேரம் கழிந்தது. பட்டு மீனாக்ஷியைப் பார்த்து, "ஏன் இன்றைக்கு நீங்கள் இவ்வளவு நேரங் கழித்து வந்நீர்கள்?" என்று கேட்டாள்.

"ராத்திரி நேரம் கழித்துத் தான் தூங்கப் போனேன். ஆகையால் அசந்து விட்டேன். எவ்வளவு சீக்கிரம் வந்தால் தான் என்ன, என் வீடு ஆற்றுக்கு அருகிலா இருக்கிறது? நாலு மணிக்கும் மூணு மணிக்கும் எழுந்து வருவதற்கு?" என்று சொல்லியவாறே, ருக்மிணியின் பக்கம் திரும்பினாள். "ஆமாம் ருக்மிணி, நானும்தான் வெகு நாட்களாகக் கேட்க வேண்டுமென்றிருந்தேன். நீ என்ன ஒரு நாளைப் போல் தினமும் இந்தக் கல்லில் தோய்க்கிறாய்? மற்றவர்களுக்கு ஒரு நாளாவது கொடுக்கக் கூடாதா? இந்தக் கல்லில் தோய்க்க எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது, பார்!" என்று கேட்டாள்.

"என்ன மாமி, போயும் போயும் கல்லு தானே!" என்று சாவதானமாகக் கேட்டாள் ருக்மிணி, குனிந்த தலை நிமிராமலேயே.

"என்ன, கல்லு தானேயா? இந்தக் கல்லில் ஒரு நாள் தோய்த்துப் பார், தெரியும் சிரமம்!"

"அது தானே நான் அங்கே தோய்க்கிறதில்லை!"

"ஏண்டியம்மா, உங்கள் வீடு ஆற்றுக்கு அருகில் இருந்தால், உங்களுக்குச் சொந்தமாகிவிட்டதாக எண்ணமா?" என்று சண்டைக்கு இழுத்தாள் மீனாக்ஷி.

"இல்லை, உங்களுக்குத் தான் சொந்தம்!" அவள் சொன்னவிதம் எல்லோருக்கும் சிரிப்பூட்டியது. இரண்டொருவர் பெரிதாகச் சிரித்தனர். ருக்மிணியின் துடுக்குத் தனம்தான் எல்லாருக்கும் தெரிந்ததாயிற்றே!

"மீனாக்ஷி மாமியிடம் பேச ருக்மிணி ஒருத்தியால் தான் முடியும். மீனாக்ஷி அம்மாளுக்குச் சரியான ஆள் தான் ருக்மிணி" என்று அவள்

சிநேகிதிகள் தமக்குள் பேசிக் கொண்டனர். மீனாக்ஷியின் முகம் கோபத்தால் சிவந்தது.

"வாயாடிப் பெண்ணே! உன் அம்மாவிடம் சொல்கிறேன், பார்!" என்றாள் மீனாக்ஷி.

"இந்த வாயாடித்தனமெல்லாம் எங்கம்மாவின் சிக்ஷைதான், மாமி!"

மற்றப் பெண்கள் இந்தச் சண்டையை ரஸிக்க ஆரம்பித்து விட்டனர்.

"உன்னை எவனடி கல்யாணம் செய்து கொள்ளுவான்? உன் துடுக்கும், நீயும்?"

"ஏன், உங்கள் பிள்ளை இல்லையோ?"

அவசரத்தில் இப்படிச் சொல்லி விட்ட ருக்மிணிக்கு அடுத்த நிமிஷந்தான், தான் செய்த தவறு தெரிந்தது. வெட்கத்துடன் தலையைக் குனிந்து, துணியைத் தோய்ப்பது போல் பாவனை செய்தாள். ஆற்றுக்கு வந்திருந்த பெண்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டனர்.

"அதிகப் பிரசங்கி!" என்று பல்லைக் கடித்தாள் மீனாக்ஷி. "என் பிள்ளை உனக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை."

"வேண்டாமே!"

* * *

ஏழு மணியாகியும் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் இல்லாமல் கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்த ரகுவின் காதில் தன் தாயார் ஏதோ உரக்கப் பேசிக் கொண்டிருந்தது விழுந்தது. முதலில் ஏதோ பால்காரனைக் கோபிக்கிறாளாக்கும் என்று நினைத்துச் சும்மா இருந்தான். ஆனால் தன் பெயர் அடிபடுவதைக் கேட்டுக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான்.

"உன் பிள்ளை என்று அவள் சொன்னாளா?" இவ்வாறு தகப்பனார் கேட்டது அரைத் தூக்கத்தில் ரகுவின் காதில் விழுந்தது.

"ஆமாம் என்கிறேன். 'ஏன், உங்கள் பிள்ளை இல்லையோ?' என்றாள். ஆனாலும் இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு வாய் ஆகாதுதான். கல்யாணி ரொம்பச் செல்லம் கொடுத்திருக்கிறாள். துளிக் கூட பயமே இல்லை" என்று சொல்லிக் கொண்டே கையில் காபியுடன் வந்த மீனாக்ஷி, "ஏண்டா ரகு, மணி எட்டடிக்கப் போகிறதே! இன்னும் என்னடா தூக்கம்? எழுந்திரு" என்றாள்.

அந்தப் பெண் யார், தன்னைப் பற்றி என்ன சொன்னாள் என்று அறிய ரகுவுக்கு மிகவும் ஆவலாயிருந்தது. ஆனால் மீனாக்ஷி பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டுக் காரியத்தைக் கவனிக்க ஆரம்பிக்கவே, ரகுவும் எழுந்திருந்து, பல் தேய்க்கச் சென்றான்.

அவன் பல் தேய்த்து விட்டு ஹாலுக்கு வந்தபோது, ஒரு சின்னப் பையன் ஒரு பையுடன் அங்கே வந்தான். மீனாக்ஷியிடம், "மாமி, உங்கள் கிட்டே அம்மா இதைக் கொடுக்கச் சொன்னாள்" என்று சொல்லிக் கொடுத்து விட்டுப் போனான்.

மீனாக்ஷி பைக்குள்ளே இருந்த பாத்திரத்தில் பட்சணங்கள் வைக்கப் பட்டிருந்ததைக் கண்டதும் திகைத்தாள். "யாரம்மா அந்தப் பையன்?" என்று கேட்டான் ரகு.

"கல்யாணியின் கடைசிப் பிள்ளை" என்று சொல்லி விட்டு ஆழ்ந்து யோசித்த வண்ணம் சமையலறையை நோக்கிச் சென்றாள். ரகுவின் தகப்பனார் அந்தப் பக்கம் வந்த போது, "பார்த்தீர்களா, கல்யாணி என்னைச் சமாதானப்படுத்துவதற்காகப் பட்சணங்களை அனுப்பியிருக்கிறாள். போயும் போயும் நம்மிடம் அனுப்புவானேன் என்று பார்த்தேன். அவள் பெண்ணுக்கு இந்தத் தை மாதத்தில் கல்யாணம் ஆகுமோ, இல்லையோ?" என்று சொல்லிச் சிரித்தாள்.



"அந்த வாயாடிப் பெண்தானே?"

"பாவம், அவள் சாதுதான். என்னமோ விளையாட்டுப் புத்தியில் சொன்னாள். அதுக்காக......?"

"நீ ரகுவுக்கு அவளைப் பண்ணிக் கொள்ளத் தயாராக இருக்கிறாயோ?"

"ரகுவுக்குப் பிடித்தால் பண்ணிக் கொள்வதற்கு எனக்கு என்ன ஆட்சேபணை!"

* * *

அடுத்த நாள் அதிகாலையில் ஆற்றங்கரைக்கு வந்த மீனாக்ஷி, அதே கல்லில் ருக்மிணி துணி தோய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளருகில் இருந்த கல்லில் தன்

துணிகளைப் போட்டாள். ருக்மிணி அவளை நிமிர்ந்து பார்க்க வில்லை. வேலையிலேயே கண்ணு யிருந்தாள்.

'பாவம், என்னைப் பார்க்க வெட்கப் படுகிறாள். நேற்றுக் கல்யாணி ரொம்ப கோபித்துக் கொண்டாளோ என்னமோ?' என்று நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் மீனாக்ஷி. அவளைச் சமாதானப் படுத்தும் பொருட்டு கனிவுடன், "ருக்மிணி, நீ எப்போ வந்தாய்?" என்று கேட்டாள்.

"கொஞ்ச நாழிகைக்கு முன்னால்தான்!"

"அம்மா எழுந்திருந்தாயிற்று?"

"இப்போதுதான் எழுந்திருப்பாள்!"

"ஏண்டி, உன் வயசென்ன?"

"இருபத்தி ஒன்று."

"இருபத்தி ஒன்று? உனக்குப் பதினேழு தானே ஆகிறது!"

"ஞாபகமில்லை!"

"உனக்கு என்ன நட்சத்திரம்?"

"ஆயில்யம்!"

"ரோகிணி என்று உங்கம்மா சொன்னாளே!"

"சொல்லி யிருக்கலாம்!"

"ஏண்டி பெண்ணே! கேட்ட கேள்விக்குச் சரியாய்ப் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாயே!"

"உங்களுக்குத்தான் எல்லாம் தெரிந்திருக்கிறதே! அப்புறம் நான் வேறு எதற்குச் சொல்ல வேணும்?"

"நீ எப்படி இவ்வளவு பெரிய சண்டைக்காரியாக ஆனாய்?"

"உங்களோடு பேசிப் பேசித்தான்!"

"போதுமடி, உன் பேச்சு!"

மீனாக்ஷி தன் துணிகளை அறைந்து அறைந்து தோய்க்கலானாள். 'காண்பிக்கிறேன், உனக்கு. உங்கம்மா என்னிடம் உன் ஜாதகத்தை எடுத்து இனித்துக் கொண்டு வரட்டும்!' என்று சொல்லுவது போலிருந்தது. அவள் அறைந்து அறைந்து தோய்த்தது.

ருக்மிணி தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

* * *

"கல்யாணியா? வா, என்ன அபூர்வமாயிருக்கிறது!" என்று மீனாக்ஷி வரவேற்றாள்.

"என்ன மாமி, எல்லாரும் சௌக்கியந்தானே?"

"சௌக்கியம்தான், உட்காரு."

"வீட்டிலே யாரும் இல்லையோ?"

"அவர் வாசல் அறையிலே இருக்கிறார்."

"தோட்டத்திலே யாரோ இருந்தாற் போலிருந்ததே?"

"அதுவா, என் பிள்ளை ரகு!" என்று சொன்னவள் மனத்துள் 'அதற்குத்தான் வந்தாயா? என்னடா அத்திபூத்தாற்போ லிருக்கிறதே என்று நினைத்தேன்' என்று சொல்லிக் கொண்டாள்.



"வேறு புடவையா? நான் கட்டிக்கொண் டிருக்கிறேனே, அது ஒன்றுதான் பாக்கி! உங்களுக்கு இதாவது பிடித்திருக்கிறதா? பாருங்கள்!"

"ஊரிலிருந்து லீவுக்கு வந்திருக்கிறானா?"

"ஆமாம்."

"ஆபீஸ் எப்போது திறக்கிறார்களாம்?"

"இருபத்தி மூன்றும் தேதி. அது சரி, உன் கையிலே என்ன, பை?"

"ஆமாம். நம் தோட்டத்து வெண்டைக்காயும், தக்காளிப் பழமும் உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்!"

"எதற்கு இதெல்லாம்?"

"பரவாயில்லை, நம் தோட்டத்துக் கறிகாய் என்றால் ரொம்ப ருசியாய் இருக்குமே என்று கொண்டு வந்தேன். புடலங்காய் ஒன்று நாளைக்குப் பறிப்பேன். அதை இங்கே கிட்டுவிடம் கொடுத்து அனுப்புகிறேன்! வரட்டுமா?" என்று கூறி மீனாக்ஷியிடம் விடை பெற்றுக் கொண்டாள் கல்யாணி.

* * *

இப்படியே ருக்மிணி காலையில் ஆற்றங்கரையில் மீனாக்ஷியுடன் சண்டை போடுவதும் மீனாக்ஷியைக் கல்யாணி தாஜா பண்ணுவதுமாக நாட்கள் கழிந்தன.

இதற்குமேல் நடந்ததை யெல்லாம் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், அடுத்த தீபாவளி ரகுவின் தலை தீபாவளியாக இருந்தது. கிராமத்திலே ருக்மிணியைச் சந்தித்த ரகு கேலியாக, "என்ன ருக்மிணி! நீ பேசவே மாட்டேன் என்கிறாயே? எங்கம்மாவிடம் சண்டை போட்டுப் போட்டு நல்ல பழக்கம் இருக்கும் என்று நினைத்தேன். நீ வாயை மூடிக் கொண்டிருந்தால் ருக்மிணி மாதிரியே இல்லை. அம்மாவுடன் சண்டை போட்டமாதிரி நீ என்னுடனும் சண்டை போட்டால்தான் எனக்கு ரஸிக்கும். தெரியுமா?" என்றான்.

ருக்மிணி வெளியே பார்த்துக்கொண்டே குறும்பாக நகைத்தவாறு மிகவும் மெதுவான

குரலில், "புருஷனும் பெண்டாட்டியும் ஆகியாயிற்று! இனிமேல் அதுதானே வேலை! அதைத் தவிர நான் இனிமேல் வேறு என்ன செய்யப் போகிறேன்?" என்றான்.

அதைக் கேட்ட ரகு கலகலவென்று சிரித்தான்.

புருவங்களை வளைத்துக்கொண்டே ருக்மிணி, "எனக்கு ஒரே ஆச்சரியமாய் இருக்கிறது! உங்கம்மா ஏன் என்னிடம் இப்போதெல்லாம் சண்டை போடுவதில்லை? அவர் சண்டைக்காரியான என்னை உங்களுக்கு ஏன் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்தார் என்பதும் புரியாப் புதிராக இருக்கிறது. அதுவும் இவ்வளவு முன் கோபமும் பிடிவாதமும் இருக்கும் போது!" என்றாள்.

"காரணம் என்ன என்று சொல்லட்டுமா?"

"சொல்லுங்களேன், பார்க்கலாம்!"

"உன் ஜாதகத்திலே போட்டிருக்கிறதாம், நீ நம் வீட்டுக்கு வரும் போது ரொம்ப அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருவாய் என்று."

"அப்படியா சமாசாரம்? அதுதான் பார்த்தேன். சொக்கு நம்மா வாயை மூடிக் கொண்டிருக்குமோ?"

"ஏய், எங்கள் அம்மாவைப் பத்தி அப்படியெல்லாம் பேசாதே. நம் கல்யாணத்தில் முகூர்த்தம் கழிந்தவுடனே ஒரு தந்தி வந்ததே, அது உனக்கு நினைவிருக்கிறதா?"

"ஞாபகம் இருக்கிறதே!"

"எனக்குப் பிரமோஷன் கிடைத்திருக்கிறது என்று என் சிநேகிதன் ராமுதான் அந்தத் தந்தியை அடித்தான்!"

"எல்லாம் என்னுடைய அதிர்ஷ்டத்தின் பலனுக்கும்!"

"ஆமாம், ஆமாம்! உன் அதிர்ஷ்டம் இருக்கிறதே, அதிர்ஷ்டம்! அதை நீதான் மெச்சிக்கொள்ள வேண்டும். பிரமோஷன் கல்யாணத்துக்கு இரண்டு வாரத்துக்கு முந்தியே கிடைத்து விட்டது. நான்தான் ராமுவிடம் முகூர்த்த சமயத்தில் தந்தி கிடைக்கும்படி கொடுக்கச் சொன்னேன். எல்லாரும் உன்னுடைய அதிர்ஷ்டம் என்று உன்னைக் கொண்டாடினார்கள். அம்மாவின் அன்புக்குக் காரணம் உன் அதிர்ஷ்டமா, என் சாமர்த்தியமா? இப்பொழுது சொல்லு!......"

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட அதிர்ஷ்டத்திலேயே உங்கள் சாமர்த்தியம் தெரிகிறதே!" என்றாள் ருக்மணி.

"அட! அதிர்ஷ்டத்தையும் சாமர்த்தியத்தையும் ஒன்றாகப் பிணைத்து விட்டாயே, உன்னையும் என்னையும் போல" என்று சொல்லிச் சிரித்தான் ரகு. வாழ்க்கைத் துணைவியான ருக்மிணியும் அவன் சிரிப்பில் கலந்து கொண்டாள். மனம் ஒத்து வாழும் தம்பதிகளின் கடமையே இதுதானே?

ஞாபகம் இருக்கிறதா?

மாலை ஐந்து மணியிருக்கும். சாரதா விலாஸ் ஹோட்டலில் ஒரே கூட்டமாயிருந்தது. ஒரு மனிதர் மாத்திரம் அந்த ஹோட்டலுக்குள் டிபன் சாப்பிட்டு விட்டு ஹோட்டல் முதலாளியின் மேஜையருகே தயங்கியபடியே நின்று கொண்டிருந்தார்.

ஹோட்டல் முதலாளி தயங்கியபடியே நிற்கும் அந்த மனிதரை ஒரு தடவை கூர்ந்து நோக்கினார். அவர் வாயிலிருந்து ஒரு சொல்லும் வெளி வரவில்லை.

"ஸார், என்னைத் தெரிகிறதா? அதற்குள் மறந்து விட்டீர்களா?" என்று கேட்டார் அந்த மனிதர்.

"தெரியவில்லை. எத்தனையோ பேர் வருகிறார்கள். அவர்களையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடிகிறதா?" என்று சிரித்துக் கொண்டே கூறினார் அந்த ஹோட்டல் முதலாளி.



"போன வருஷம் உங்கள் ஹோட்டலில் நுழைந்து டிபனைச் சாப்பிட்டு விட்டுப் பணமில்லை என்று நான் கூறியதும் என்னை அடித்துத் துரத்தவில்லையா? அதற்குள் என்னை மறந்து விட்டீர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அந்த மனிதர்.

உடனே ஹோட்டல் முதலாளியின் முகம் சிறிது மலர்ந்தது. அந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வந்து விட்டது போல் நடித்து, "ஆமாம்! இப்பொழுது தான் அந்தச் சம்பவம் ஞாபகம் வருகிறது. என்ன? அந்த பில்லுக்குள்ள பணத்தையும் ஞாபகமாகச் சேர்த்துத் தரப் போகிறீர்களா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை, ஸார்! மறுபடியும் அன்றைய தினத்தைப் போலவே நான் இன்றும் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. என்னிடம் பில் கொடுக்கக் காலணுக்காசு கூட இல்லை" என்றார் அந்த மனிதர் சாவதானமான குரலில்.

அவ்வளவுதான்; ஹோட்டல் முதலாளியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பித்து விட்டன. —பி. எஸ். மணி.

உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நல்ல வழி



அமெரிக்கன் மாடல் பிஸ்டல், லைசென்ஸ் அவசியமில்லை. டிராமா, சர்க்கஸ், பணத்தைக் காப்பாற்றிக் கொள்ள, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இதற்கு மிஞ்சிய ஸௌகரியமில்லை. சுட்டபொழுது நிஜமான பிஸ்டல் மாதிரி பயங்கரமான சப்தம் உண்டாகி நெருப்பு ஜ்வாலைகள் வெளிவரும். விலை 8-8-0 போஸ்டேஜ் 1-8-0 தனி. தோல் பெட்டி 2-8-0. பிஸ்டலுடன் 25 குண்டுகள் இலவசம். தனியாக தோட்டாக்கள் வேண்டுமானால் 1 டஜன் 1-8-0.

புது தினுசு அமெரிக்க ஸ்பிரிட் ஸ்டவ்



சிற்றுண்டி, தேனீர், வென்னீர் முதலியவை தயாரித்துக் கொள்ள மிகவும் உபயோகமானது. இந்த ஸ்டவ்விற்கு கொஞ்சம் ஸ்பிரிட் செலவு, ஸ்டாக் கொஞ்சமே கைவசமிருக்கிறது. விலை ரூ. 4-8-0. வி. பி. பி. யில் அனுப்ப கட்டணம் தனி ரூ. 1-8-0.

ஆங்கிலத்திலேயே கடிதங்களை எழுதவும்:

SANSAR TRADING CO. (SPK)
Kanwariganj. ALIGARH. U. P. (India)

ரூ. 25லேயே ரேடியோ

நிபுணர்களால் தயாரிக்கப்பட்டது. அணு 15 உள்ள பாட்டரி ஷெல்லினால் இயக்கப்படுவது. மின்சார சக்தி தேவையில்லை. கேர்த்தியான ரேடியோ நிகழ்ச்சிகளை ரூ. 25. செலவிலேயே கேட்டு மகிழ நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். பெட்டியுடன் கூடியது. சொற்பமே ஸ்டாக் உள்ளது. விலை ரூ. 25. ஸ்பெஷல் No. D-16 ரூ. 30. வி. பி. பி. சார்ஜ் ரூ. 5. திருப்தி யில்லையேல் பணம் வாபஸ்.

தூர திருஷ்டி கண்ணாடி

இயற்கைக் காட்சிகளையும், தூரத்திலுள்ளதும் மலைக் காட்சிகளையும் நன்கு அனுபவிக்கலாம். தொலைவிலுள்ளதும் கண்ணுக்குப் புலப்படாதவைகளையும் நன்கு பார்க்கலாம். குதிரைப் பந்தயம், மலைப் பிரயாணம் இவைகளுக்கு இன்றியமையாதது. விலை ரூ. 5. தபால் பாக்கிங் செலவு ரூ. 1-8-0 தனி.

ரேடியோ, எலக்ட்ரிக் & தொழில் புஸ்தகம்

ரேடியோ ரிப்பேர், மின்சாரத்தைப் பற்றிய அறிவு, அநேக குடிசைத் தொழில்கள் இவைகளை அறிந்து மாதம் ரூ. 200. சம்பாதியுங்கள். ஒன்றின் விலை ரூ. 4. தபால் செலவு அணு 14 தனி. ஆங்கிலத்தில் எழுதவும்.

M. CHHAYA STORES (KRM)
P. O. 13, ALIGARH, U. P. (INDIA)




'கோலினாஸ்'

புன்னகையில் அழகு மிளிர்கிறது!

நுரை தான் இந்த வித்தியாசத்திற்குக் காரணம்!




இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்.,
பம்பாய் 1



உறுதியான தேகதிடம்

நீங்களும் பெறுக

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்



ஆரோக்யமளிக்கும் தன்மை நிரூபணமான இந்த டானிக்கைச் சாப்பிட்டுப் பாருங்கள். போஜனம் பூர்த்தியாவது மின்றி போஷாக்கும் பெறுவீர். உங்கள் தினசரி வேலைகளையும் தேகாப்யாசங்களையும் சரிவரச் செய்யபுதிய சக்தியும் உறுதியான தேகதிடமும் பெறுக. கீழ்ப்பே தோன்றுகிறபடி உங்கள் உறுப்புகள் வளர்வதற்கு அவசியமான போஷாக்கு கிடைக்கும்.

வளரும் குழந்தைகளுக்கு ருசி மிகுந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மிகவும் உதவிகரமானது. இருமல், சளி ஏற்படாதவாறு எதிர்ப்பு சக்தி உண்டாக்கும்.

WATERBURY'S
COMPOUND



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் திடனுடன் வைத்திருக்கும்


NAS 743


வனப்பை
அடையுங்கள்
100% சுத்தமான எண்ணெயை மூலப் பொருளாகக் கொண்ட, கேரளா ஸாண்டல்வுட் ஸோப்பிலுள்ள சந்தன எண்ணெய் சருமத்தை வளர்ப்பதோடு உண்மையான அழகிற்கு அவசியமான கதகதப்பையும் உயிரையும் உங்கள் சருமத்திற்கு அளிக்கிறது இதன் மிருதுவான கிரீம் போன்ற நுரை நீடித்த பரிமளத்துடன் உங்கள் சருமத்தினுள் நன்றாக வேலை செய்து அதை மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது.
கேரளா
ஸாண்டல்வுட்
சோப்
SANDALWOOD
சருமத்தை
அழகுபடுத்துகிறது
கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட், கோழிக்கோடு
டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ்,
கவர்ன்மெண்ட் ஆப் மதராஸ்.
SISTA'S-KS-16-B-TAMIL.


உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிருர்கள்...





எந்த பொருளிலும் சிறந்ததையே வழக்கமாக உபயோகிக்கும் மனிதர்கள் ப்ளூ ஜில்லெட் பிளேடுகளைத்தான் உபயோகிக்கிருர்கள். பணத்தால் இதைவிட சிறந்ததை வாங்கமுடியாது. நீடித்த காலம் உழைப்பதும், மிகவும் கூராக தீட்டப்பட்டதுமான ப்ளூ ஜில்லெட் பிளேடுகள் உங்கள் தாடியை சுலபமாக நீக்கிவிடுகின்றன. ஆயினும் அதன் விலை மிகவும் சரசமாயிருக்கிறது. அதனால் ஒவ்வொரு மனிதனும் ஒரு தனவந்தனைப் போலவே க்ஷவரம்செய்துகொள்ளலாம்.



ப்ளூ ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணு


டிரக்குகள்
மற்றும்
பஸ்ஸுகளுக்கு
சிவப்பு வளையத்தைக் கவனித்து வாங்கவும்
சூப்பர் இந்தியா


சிறந்த அம்சங்கள் யாவும்
ஹெர்குலஸ் சைகிளில்தான்
இருக்கின்றன
முற்றிலும் துருப் பிடிக்காத ஸ்டீல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது
பளபளப்பு மிகுந்த க்ரோம் பிளேட்டிங்
உறுதியான பிரேக்குகள்
சுகம் தரும் ஆசனம்
3 விதவேகம்தரும் ஹப் மற்றும் இதர விசேஷ இணைப்புகள்
மிகவலிமையான ஸ்டீல் பிரேம்
எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்
ஹெர்குலஸ்
THE HERCULES CYCLE & MOTOR COMPANY LTD.
BIRMINGHAM ENGLAND
Hercules
இன்றைய சைகிள்களில் மிகவும் சிறந்தது



பாவம் அந்தப் பெண் மலேரியாவினால் என்ன கஷ்டப்படுகிறாள்

'பாலுட்ரின்' அந்தத் தொல்லையினின்றும் என்னைப் பாதுகாத்துவருகிறது

எலும்பையே நொறுக்குவது போன்ற தினசரி குடும்ப வேலைகளுக்கு மேல் மலேரியா வேறு. பாவம் அந்தப் பெண் மெலிந்து வெறும் நிழல்போல ஆகிவிட்டாள். அந்த சாதுப்பெண் அதைப்பற்றி என்னதான் செய்கிறாளோ கடவுளுக்குத்தான் தெரியும். எப்போது பார்த்தாலும் அவள் நோய், நோய், நோய் என்று நோயினால் நொறுங்குகிறதைத்தான் நாங்கள் காண்கிறோம். ஆனால் தினமும் ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை வீதம் சாப்பிட்டு வந்தால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் அவள் சுலபமாக குணமடையலாம். அவளது உதாரணம் என்னை உஷாரப்படுத்திவிட்டது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'பாலுட்ரின்' மாத்திரை சாப்பிடுவதை நான் வழக்கமாக ஆக்கிக் கொண்டுவிட்டேன். என் குடும்பத்திலே மற்றவர்களும் இதைப் பின்பற்றுமாறு செய்து வருகிறேன். ஆகையினால் மலேரியா எனது வாசற்படிகளை அணுகுவது இல்லை.



ICI

பாலுட்ரின்*

டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

அளவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IX-P.139 TM



குழந்தைப் பிராயத்தில் குதூகல மாய்த் தொட்டிலில் இட்டு வளரும் பருவத்தில் வளமுறப் பாதுகாத்து வளர்க்கப்படும் குழந்தைகள் விரைவில் உலகத்தில் தங்கள் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொள்ளுகிறார்கள். தங்கள் குழந்தைகளின் வருங்கால நலத்தையும், சுகத்தையும் கருதி சேமிக்கும் பெற்றோர்கள் புத்திசாலிகள்; அவர்கள் ஆனந்தமாக இருப்பார்கள். இன்று புத்திசாலித்தனமாக முதலீடு செய்யும் சேமிப்புகள் அவர்களது வருங்கால நன்மைகளை உத்தேசித்துதான் செய்யப்படுகின்றன.

இதற்கு பன்னிரண்டு வருட நேஷனல் சேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளை விட சிறந்த முதலீடு வேறெதுவும் இல்லை.

- அருகேயுள்ள தபாலாபீஸிலிருந்து எளிதில் பெறமுடியும்.
- 100 ரூபாய் 12 வருஷத்தில் 150 ரூபாயாகக் கிடைக்கும்.
- 50 சதம் போனஸ் மீது வருமானவரி செலுத்தவேண்டியதில்லை.

நேஷனல்
சேவிங்ஸ்
ஸர்ட்டிபிகேட்டுகள்

பணம் திரும்பப் பெறுதற்கு இந்திய சர்க்கார் உத்தரவாதம் அளிக்கிறது
உங்கள் குழந்தைக்கு பாதுகாப்பு என்னும் வரப்பிரசாதத்தை அளியுங்கள்.

இந்திய தேசீய சேமிப்புக் கமிஷனர் வெளியீடு

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

